482

482
4.52

(இஷ்ட விநியோகத்திற்கு மட்டும்)



# ஸ்ரீமந் முநித்ரய ஸித்தாந்தமும் அதன் ஸ்தாபனாசார்ய சரித்திரமும்

★

4 - DEC 1952
OFFICE OF THE REGISTRAR OF BOOKS

ஸ்ரீ வி. ஸ்ரீநிவாஸதாஸன்

★

கல்யாண் பிரஸ் 12, மதுரை ரோடு, திருச்சி.

(All rights reserved)

1952

Q22:4
N52
111T28

(இஷ்ட வினியோகத்திற்கு மட்டும்)

# ஸ்ரீமந் முநித்ரய ஸித்தாந்தமும் அதன் ஸ்தாபனாசார்ய சரித்திரமும்

★

ஸ்ரீ வி. ஸ்ரீநிவாஸதாஸன்

★

கல்யாண் பிரஸ் 12, மதுரை ரோடு, திருச்சி.

(All rights reserved)

1952


N52
TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 111728
EGMORE, MADRAS-600 008

## குறிப்பு.

இப் புஸ்தகம் வெகு அவஸாமாக அச்சிடப்பட வேண்டி இருந்ததால் பிழைகள் ஒருவர் கண்ணிலும் படாமல் புஸ்தகத்தில் ப்ரவேசித்து விட்டன. இதற்கு மிகவும் வருத்தப்படுகிறோம். இரண்டாவது பதிப்பில் பிழைகள் ஒன்றுகூட தென்படாதென்று உறுதி கூறுகிறோம்.



1. ஸ்ரீ ரங்கநாத ஸ்வாமி - பெரிய பிராட்டியார் - விஷ்வக் ஸேனர்



# ஸ்ரீமத் முனித்ரய ஸித்தாந்தமும் அதன் ஸ்தாபநாசார்ய சரித்திரமும்

श्रीमते श्रीरंगनाथ महादेशिकाय नमः ।
श्रीमते श्रीनिवास महादेशिकाय नमः ।
श्रीमते वेदान्तरामानुज महादेशिकाय नमः ।
श्रीमते पादुका सेवक रामानुज महादेशिकाय नमः ।
श्रीमते श्रीनिवास महादेशिकाय नमः ।
श्रीरंगनाथदिव्यमणि पादुकाभ्यां नमः ।

लक्ष्मीनाथ समारंभां नाथयामुनमध्यमां ।
अस्मदाचार्य पर्यन्तां वन्दे गुरुपरं परां ॥

ஸ்ரீமந் முனித்ரய ஸித்தாந்த மென்பது: ஸ்ரீமந் நாத முனிகள், ஸ்ரீமத்யாமுநமுனிகள், ஸ்ரீமத் ராமாநுஜ முனிகள் என்ற மூவர்களுடைய ஸித்தாந்தமே முனித்ரய ஸித்தாந்தம் என்று ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் தன்னுடைய ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார கிரந்தத்தில் மங்களாசரண பாசுரங்களாக அருளிச்செய்திருக்கிறார். அப்பாசுரங்களாவன: "ஆரண நூல்", "மீளவந்தின்று", "காளம்வலம்புரி" என்றன. "ஆரண நூல்" என்ற பாசுரத்தில் எம்பெருமானாரையும், மீளவந்தின்று என்ற பாசுரத்தில் ஆளவந்தாரையும், காளம்வலம்புரி என்ற பாசுரத்தில் நாத முனிகளையும் பற்றிச் சரிதத்தைச் சுருக்கமாய் அருளிச் செய்திருக்கிறார். ஆகவே இஸ்ஸித்தாந்தம் பிராசீனமாயிருந்தாலும் நிகமாந்த மஹாதேசிகனுடைய காலத்தில்தான் இவ்வாறு முனித்ரய மென்ற வ்யவகார பிரசித்தி வந்தது. மற்ற

ஏதாவது மூன்று முனிகளைச் சேர்த்து முனித்ரயம் என்று சொல்வது தேசிகனுடைய திருவுள்ளத்திற்கு உகப்பாகாது. இம்முனித்ரயருடைய ஸித்தாந்தத்தையே தேசிகன் கைக்கொண்டபடியால் மற்ற எம் மூன்று முனிகளைச் சொல்லுமதுவும் எவ்வாற்றாலும் பொருந்தாது. தற்காலத்தில் முனித்ரயஸித்தாந்தத்திலுள்ள குருபீடங்களுக்கெல்லாம் ஸம்பாவனை செய்யும்போது "ஸ்ரீமந் நாதமுனி ஸ்ரீமத் யாமுனமுனி ஸ்ரீமத் ராமானுஜமுனிரூப முனித்ரய ஸித்தாந்த ஸ்தாபநாசார்யாணாம்" என்றே விருது கூறிக்கொண்டு ஸம்பாவனை செய்கிறதை தற்காலமும் நாம் பிரத்தியக்ஷத்தில் பார்த்து அனுபவிக்கிறோம். ஆகவே இம் மூவருடைய ஸம்பிரதாயத்தை பின்பற்றுமவர்தான் முனித்ரய ஸித்தாந்திகளேயாவார்கள். அவர்களில் முதன்மையாகிய ஸ்ரீமந் நாதமுனிகளுடைய சரித்திரத்திலிருந்து நமது ஸித்தாந்தம் துவங்கும்.

## ஸ்ரீமந்நாதமுனிகளுடைய சரித்திரச் சுருக்கம்

"காளம் வலம்புரியென்ன நற்காதலடியவர்க்குத்
தாளம் வழங்கி தமிழ்மறை இன்னிசை தந்தவள்ளல்
மூளும் தவநெறி மூட்டிய நாதமுனி கழலே
நாளும் தொழுதெழுவோம் நமக்கார் நிகர் நானிலத்தே."

என்று நிகமாந்த மஹாதேசிகன் ஸ்ரீமந்நாத முனிகள் விஷயமாய் அருளிச் செய்தார். இதன் சுருக்கமான பொருளாவது :— காளம் என்றும் வலம்புரி என்றும் கூறப்பட்ட பிரஸித்தமான வாத்யங்களுடைய த்வனி போன்று மிகவும் மதுர கம்பீரமான குயிலினுமினிய குரலோடு கூடிய மேலையகத்தாழ்வான், கீழையகத்தாழ்வான் என்ற திருநாமம் பூண்ட தனது இனிய அன்பிற்கு இலக்கான இரண்டு மருமக்களுக்கு மிகவும் மனோஹரமான சுருதி லயத்துடன் கூட தமிழ் மறையாகிய நாலாயிர திவ்ய ப்ரபந்தத்தையும் இனிமையான இசையுடன் பயிற்சி செய்வித்தும் பரமோ



2. ஸ்ரீரங்கநாத திவ்ய மணி பாதுகை
(ஸ்ரீ சடகோபன்)



3. ஸ்ரீமந் நம்மாழவார் (வைகாசி விசாகம்)
ஸ்ரீ மதுரகவி ஆழ்வார்
(சித்திரை-மீ சித்திரை நக்ஷத்திரம்).



1. ஸ்ரீமந்நாத முனிகள் (ஆனி-மீ, அனுஷம்)

தாரஸ்வபாவராயும் பகவத் பக்தி யோகாப்யாஸத்தில் மிக தேர்ச்சியடைந்த வருமான ஸ்ரீமந்நாத முனிகளுடைய சரணாரவிந்தங்களை ஆச்ரயித்த மஹாபாக்யவான்களாகிய அடியோங்களுக் கொப்பார் இப்புவியில் எவருமில்லை என்பது திண்ணம்.

## ஸ்ரீமந்நாதமுனிகளுடைய சரித்திரச்சுருக்கமும் அவருடைய பரம்பரையும்

ஸ்ரீமந்நாதமுனிகள் வீர நாராயணபுரம் என்ற திவ்ய க்ஷேத்ரத்தில் சடமர்ஷண ரிஷியினுடைய வம்சத்தில் அவதரித்த ஈச்வரமுனிகளுடைய குமாரர். இவருக்கு பஞ்ச ஸம்ஸ்காரம் திருமந்திரார்த்தம் பிரும்மஸூத்ரார்த்தம் முதலியவைகளை யோகதசையில் உபதேசித்த நம்மாழ்வார் ஆசாரியராகிறார். இவர் யோகாப்யாஸத்தில சிறந்த ஓர் அதிகாரி. ஆதலால் யோகீச்வர் அல்லது முனிகள் என்று அழைக்கப்படுகிறார். அதனுல் இவரை ஸ்ரீமந்நாதமுனிகள் என்று வ்யவஹரிக்கும்படி நேர்ந்தது. இவருடைய சிஷ்யர்கள் உய்யக்கொண்டார் முதலானவர் எண்வர். அவ்வெட்டுப் பெயர்களுக்குள் உய்யக்கொண்டாரை முதன்மையாகத் தெரிந்தெடுத்து தரிசனஸ்தாபகராக நியமித்தருளினர்.

## ஸ்ரீ ஆளவந்தாருடைய திவ்ய சரித்திரச் சுருக்கமும் மேற்கொண்டுள்ள பரம்பரையும்

அவ்வுய்யக்கொண்டாருடைய சிஷ்யரான மணக்கால் நம்பிகளுக்கு முக்ய சிஷ்யரான ஸ்ரீ ஆளவந்தார் அல்லது யாமுனச்சாரியார் என்ற மஹான் கலி. 4017க்குமேல் தாது வருஷம் ஆடி மாதம் உத்திராஷாடா நக்ஷத்திரத்தில் ஸ்ரீமந்நாதமுனிகளுடைய குமாரரான ஈச்வர பட்டாழ்வானுக்குத் திருக்குமாரராக அவதரித்து ஸ்ரீரங்கத்தில் ஸந்யாஸாசிரமத்தை ஸ்வீகரித்து தமது ஸச்சிஷ்யர்களுக்கு ஸம்பிரதாய பிரவசனம் செய்தருளிக்கொண்டு வந்தார். ஸ்ரீ ஆளவந்தருக்குப் பதினைவர் சிஷ்யரானர்கள். இவர் நமது விசிஷ்டாத்வைத

மதத்தை ஸ்தாபித்த ஓர் பெரிய மஹானய் எழுந்தருளியிருந்தார், இவருடைய திவ்ய சரித்திரம் வடமொழியிலும் தென் மொழியிலும் விரிவாக அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. இருந்தாலும் ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனல் முனித்ரய ஸம்ப்ரதாய ஸந்தர்ப்பத்தை யொட்டி ஒரு பாசுரத்தால் இவ்வாளவந்தாருடைய சிறந்ததோர் மஹிமையை ஸங்கிரஹமாகத் திருவாய் மலர்ந்து அருளியிருக்கின்றார். அப்பாசுரமாவது.

“மீளவந்தின்று விதிவகையால் நினைவுன்னிய நாம்,
மீளவந்தின்றும் வினையுடம்பொன்றி விழுந்துழலாது
ஆளவந்தார் என என்னருள் தந்து விளங்கிய சீர்
ஆளவந்தாரடியோம் படியோமினி அல் வழக்கே”

இப்பாசுரத்தின் திரண்ட கருத்தாவது :—அநாதிகாலமாக இஸ்ஸம்ஸாரத்தை யடைந்து கடைசியாக இஜ் ஜன்மத்தில் ஓர் பாக்ய விசேஷத்தால் ஸத்விஷயங்களைப்பற்றி நினைவடைந்திருக்கிற நாம் மறுபடி இக் கர்ம பூமியிற் பிறந்து இக் கர்ம சரீரத்தைப் பெற்று கொடிய நரகயாதனையில் மேலும் விழுந்து துன்புறாதபடி “ஆளவந்தார்” பிரதிவாதிகளை வாதப்போரில் வென்று அடியோங்களை ஆளவந்தர் அல்லது ரக்ஷிக்கவந்தார் என்று பெருமையாய்க் கூறும்படி அடியோங்களிடம் கிருபை செய்து சிறந்து விளங்கும் நற்குணமுடைய ஆளவந்தாருக்கு நாம் சேஷபூதரானேம், (அடிமையானேம்). இனி அஸத்தான சாஸ்திரங்களை நாம் கைக்கொள்ளோம்.

ஆகவே நமது விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸ்தாபனம் செய்த முனித்ரயத்தில் இவரே இரண்டாவதான ஸங்கியைச் சேர்ந்தவராவார். இவ்வாளவந்தாருக்கு சிஷ்யர்களான 15 பேருக்குள் ஸ்ரீ பெரியநம்பிகள் (மஹாபூர்ணர்) ஸ்ரீரங்கத்தில் கலி. 4098க்கு மேல் ஹேவிளம்பி வருஷம் மார்கழி மாதம் கேட்டை நக்ஷத்திரத்தில் அவதரித்து ஸ்ரீ ஆளவந்தாருடைய திவ்ய நியமனத்தின் பேரில் கிரஹஸ்



5. ஸ்ரீ ஆளவந்தார் (யாமுனாசாரியார்)

ஆடி–உத்தராடம்

தாசிரமத்திலேயே யிருந்து ஸ்ரீரங்கத்தில் தமது சிஷ்யர்களுக்கு ஆசாரியகம் பண்ணிக்கொண்டும் ஸம்பிரதாய பிரவசனமும் செய்து கொண்டும் எழுந்தருளியிருந்தார்.

## * ஸ்ரீ ராமாநுஜருடைய சரித்திரச் சுருக்கம்.

இப் பெரிய நம்பிகளுடைய முக்ய சிஷ்யரான ஸ்ரீராமானுஜர் அல்லது ஸ்ரீபாஷ்யகாரர் என்ற திருநாமம் பூண்ட இம் மஹான் ஸ்ரீபெரும்பூதூரில் கலி. 4119-ம் ஆண்டில் பிங்கள வருஷம் சித்திரை மாதம் திருவாதிரை நக்ஷத்திரத்தில் ஆஸுரி கேசவ ஸோமயாஜிகளுக்கு திருக்குமாரராய் திருவவதாரம் செய்து வெகுகாலம் கிரஹஸ்தாசிரமத்திலிருந்து ஸ்ரீகாஞ்சி க்ஷேத்ரத்திலுள்ள ஸ்ரீதேவப்பெருமாளுடைய நியமனத்தின் பேரில் ஸ்ரீபெரிய நம்பிகளுடைய திருவடியை ஆச்ரயித்துப் பஞ்ச ஸம்ஸ்காரம் பெற்று பின்பு நம் ஸத்ஸம்பரதாய ஸ்வரூப கிரந்தங்களையும் அதிகரித்து அப் பெரிய நம்பிகளின் நியமனத்தின் பேரில் திருக்கோஷ்டியூர் நம்பிகளிடத்தில் ரஹஸ்யத்ரயார்த்தங்களைச் சிந்தனை செய்தும், திருமலை நம்பிகளிடத்தில் ஸ்ரீமத் ராமாயணம் சிரவணம் பண்ணியும், திருமாலையாண்டானிடத்தில் பகவத் விஷயத்தை முக்கியமாக கிரஹித்தும் ஸ்ரீ ஆளவந்தாராழ்வாரிடத்தில் திருவாய்மொழி மூலத்தை அத்யயனம் செய்ததும் தவிர மேலும் சிறந்த நல் வார்த்தைகளையும் சிரவணம் செய்துள்ளார்.

இவர் மேலும் வடஇந்தியாவிலுள்ள காசிக்ஷேத்திரத்தில் நம்ஸித்தாந்தப் போர் முனையில் போராட வந்த பிரதிவாதிகளை வென்று வந்த காலத்தில் ஸந்தோஷ பூர்வமாக ஸ்ரீ ஸரஸ்வதி தேவியால் ஸமர்ப்பிக்கப்பட்ட ஸ்ரீஹயக்ரீவ மூர்த்தியை ஆராதித்துக்கொண்டு ஸந்யாஸாசிரமத்தை ஸ்வீகரித்து ஸ்ரீரங்கம் முதலான திவ்ய க்ஷேத்ரங்களில் விசிஷ்

---

* ஸ்ரீராமாநுஜரை ஸ்ரீ பாஷ்யகாரர் என்றும் எம்பெருமானார் என்றும் நம் ஸம்பிரதாயத்தில் கூறுவதுண்டு.

டாத்வைத ஸித்தாந்த பிரவசனம் செய்தருளிக் கொண்டு எழுந்தருளியிருந்தார். இவரால் அனுக்ரஹிக்கப்பட்ட கிரந்தங்களாவன :—கத்யத்ரயம்—ஸ்ரீபாஷ்யம், ஸாரம், தீபம், வேதார்த்த ஸங்கிரஹம், நித்யம், கீதாபாஷ்யம் முதலியன, ஆகவே நம்ஸித்தாந்த பிரவசனம் செய்த முனித்ரயத்தில் இவர் 3வது முக்கிய புருஷராகிறார். இவ்விராமானுஜரைப் பற்றி ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனும் "மீளவந்து" என்று முன்பு கூறப்பட்ட பாசுரத்திற்கு முன்பாக ஓர் பாசுரம் அருளிச் செய்திருக்கிறார். அதாவது

"ஆரண நூல் வழிச் செவ்வை யழித்திடும் ஐதுகர்க்கோர்
வாரணமாய் அவர் வாதக் கதளிகள் மாய்த்தபிரான்
ஏரணி கீர்த்தியி ராமானுஜ முனி இன்னுரை சேர்
சீரணி சிந்தையினேம் சிந்தியோமினித் தீவினையே"

இப்பாசுரத்தின் கருத்து :—வேதாந்த சாஸ்திரத்தின் வழியினது நேர்மையைக் கெடுக்கின்ற ஹைதுகர்களுக்கு (குதர்க்கவாதிகளுக்கு) ஒப்பற்ற யானைபோல் தோன்றி அக்குதர்க்கவாதிகளுடைய வாதமாகிற வாழைமரங்களை ஒழித்து உபகாரம் செய்தவராயும், உலகுக்கே மிகவும் அலங்காரமாகிய புகழையுடைய ஸ்ரீராமானுஜரின் இனிய கம்பீரமான அருளிச் செயல்களில் சிறப்புப் பொருந்தின மனமுடையாரேனும். இனி(க்கொழுந்து விட்டோடிப்படரும்) வெங்கோன் வினைகளைச் சிந்திக்கவும் மாட்டோம், என்றபடி,

இப்படி ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகனுக்கு முன்பு அப்புள்ளார் முதலான பிரஸித்தமான ஆச்சாரியார்கள் இருக்கச் செய்தேயும் இம்மூன்று முனிகளையே விசேஷித்துக் கூறியபடியால் இதுவே முனித்ரயமாகும். இம் முனித்ரயம் என்ற வ்யவஹாரம் ஸ்ரீமந்நிகமாந்த தேசிகனுக்குப் பிற்பாடே வெகுநாளாய் வந்திருக்கிறது. இம் மூவரே விசிஷ்டாத் வைதத்துக்கு வேண்டிய கிரந்தங்களை எழுதிப் பிரவசனம் செய்து ஸித்தாந்த ஸ்தாபனம் செய்த விஷயத்



6. எம்பெருமானார் (ஸ்ரீ பாஷ்யகாரர்)
சித்திரை-மீ, திருவாதிரை

தில் பிரதானர்கள் என்று ஸ்ரீ தேசிகன் திருவுள்ளம் பற்றினபடியால் இந்த ஸம்ப்ரதாயத்திற்கு முநித்ரய ஸம்ப்ரதாயமென்றுள்ள வ்யவஹாரம் வந்திருக்கிறது.

மேலும் ஸ்ரீ பகவத் ராமானுஜ ஸித்தாந்த ஸார்வபௌமர்கள் என்று கூறப்பட்ட பிருதில் "ஸ்ரீ பகவத் ராமானுஜ ஸித்தாந்தம்" என்று ஒரு ஸித்தாந்தம் இருக்க மற்றொன்றாகிய "முனித்ரயஸித்தாந்தம்" எனப் பெயரும் வ்யவஹாரமும் வரக்காரணம் என்னென்றில் ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகன் தான் (1) நாதமுனிகள், (2) ஆளவந் ஆளவந்தார் (3) ஸ்ரீராமானுஜர் என்ற இம்மூவரைத்தான் விசேஷித்து ஒரே இடத்தில் ஒரே கோர்வையாக ப்பாசுரம் ஸாதித்தபடியால் இம்மூவருமே இந்த ஸித்தாந்தத்திற்கு விசேஷ பிரவர்த்தகர் என்று ஏற்படுகிறது. அன்றியும மூவுலகப்ரஸித்தரான ஸ்ரீ ராமாநுஜருடைய ஸித்தாந்தமும் மூனித்ரய ஸித்தாந்தத்திற்குள் அடங்கியதாயிற்று.

மேலும் முன்பு சொன்ன பாட்டின் கருத்தை கவனிக்கும்போது இம்மூவர்தான் சடகோபனருளால் ஸ்ரீ ரஹஸ்யத்ரயத்தின் அர்த்தங்களை நன்றாய் அறிந்து பிரதிவாதிகளை வென்று நம் தரிசனத்தை ஸ்தபித்தவர்களுக்குள் பிரதானர் என்று தெரிகிறது. ஆகவே இப்படிப்பட்ட ப்ராசீனமான முனித்ரய ஸம்ப்ரதாயமிருக்கும்போது இதைப் புதிதாக மத்யகாலத்தில் ஏற்பட்டது என்று சொல்வது ஸாதுக்களுடைய திருவுள்ளத்துக்கு உகந்ததல்ல.

மேலும் மற்றொரு விசேஷம் :—இம்மூனித்ரய ஸித்தாந்தம் மிகவும் ப்ராசீனமாயும் பரிசுத்தமாயுமிருக்கின்றது. அதை இன்னும் சற்று ஆராய்வோம். ஸ்ரீகூரத்தாழ்வான் கீழ்கண்டபடி ச்லோகங்களை அருளிச்செய்திருக்கிறார். (i) லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுன மத்யமாம், அஸ்மதாசார்ய்பர்யந்தாம் வந்தே குருபரம்பராம் "என்றும் (2)" யோநித்யமச்யுத பதாம்புஜ யுக்ம ருக்ம வ்யாமோகதஸ்ததிதராணித்ருணாயமேநே, அஸ்மத்குரோர் பகவதோஸ்ய தயைகஸிந்தோராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே" இந்த ச்லோகங்களில் முதலில் ஆதிகுருவான லக்ஷ்மீநாதனை அனுஸந்தித்துவிட்டு உடனே மத்யகாலத்தில் அநேக ஆசாரியார்கள் இருந்தாற்கூட அவர்களை விட்டுப் பின்பு அவதரித்தவரும் ஸ்ரீ விசிஷ்டாத்வைத மதத்தை விசேஷமாக வேரூன்றித் தழைக்கச் செய்தவர்களான (1) ஸ்ரீமந்நாதமுனியையும், (2) ஸ்ரீமத்யாமுனமுனியையும், (3) ஸ்ரீமத் ராமானுஜ முனியையுமே திருவுள்ளம் பற்றியிருக்கிறார்" என்பதை ஸ்ரீ வைஷ்ணவ லோகமனைவரும் அறிந்திருக்

கிறார்கள். ஆகவே இந்தச் சுலோகங்களை அனுஸந்திக்கிற ஸ்ரீ வைஷ்ணவர் எல்லோரும் முனித்ரய ஸித்தாந்திகளேயாவார்கள். ஆகவே நாம் அந்யோந்ய ரஸிக ஸஹோதரர்களாவோம்,

மற்றொருப்ரசனையும் ஏற்படலாம். நம்ஸ்வாமி தேசிகன் இம்மூன்று முனிவர்களையும் பற்றி தமிழ் ப்ரபந்தத்திலேதான் கூறவேண்டுமோ. இதைப்போன்ற ஸம்ஸ்கிருத ப்ரபந்தங்களில் எழுதப்படவில்லையா? அக்கிரந்தங்கள் ஒன்றிவாவது இம் முனித்ரயத்தை மாத்திரம் பற்றி விசேஷித்து ஒரே கோர்வையில் மற்ற ஆசார்யர்களை எடுத்துக் கொள்ளாமல் இவர்களையே அனுஸந்தித்து அருளிச் செய்திருக்கிறாரா? என்று கேட்டால் அதுவும் தெரிவிக்கப்படும்.

"தத்வமுக்தாகலாபம்" அத்ரவ்யஸரம் — 136-வது ச்லோகம்.

த்ருஷ்டேऽ பஹ்நுத்யபாவாத் அனுமிதிவிஷயே லாகவஸ்யாநுரோதாத்

दृष्टेऽपह्नुत्यभावात् अनुमिति विषये लाघवस्यानुरोधात्

ஸாஸ்த்ரேணைவாவஸேயே விஹதிவிரஹிதே நாஸ்திகத்வப்ரஹாணாத்

शास्त्रैणवावसेये विहतिविरहिते नास्तिकत्व प्रहाणात्

நாதோபஜ்ஞம் ப்ரவ்ருத்தம் பஹுபிருபசிதம் யாமுநேயப்ரபந்தை

नाथोपज्ञंप्रवृत्तं बहुभिरुपचितं यामुनेय प्रबन्धैः

த்ராதம் ஸம்யக்யதீந்த்ரை: இதமகிலதம: கர்சனம் தார்சனம் ந:

त्रातं सम्यग्यतीन्द्रैः इदमखिलतमः कर्शनं दर्शनं नः

---

இச்லோகத்தின் கருத்தாவது (1) மாயாவாதி மதம் மாதிரி ப்ரத்யக்ஷமான வஸ்துக்களை மறைக்கவில்லை. (2) தர்க்கமதம் மாதிரி இல்லாமையைக் கல்பிக்காமல் லாகவத்தை அனுஸரிக்கிறதாலும் 3) நிரீச்வரமீமாம்ஸகன் போல் நாஸ்திகனுயில்லாமல் "சாஸ்திரத்தாலேயே தெரிந்து கொள்ளக்கூடியதாயும் தோஷமில்லாத வஸ்துவினிடத்தில் நாஸ்திகத்வத்தை விட்டு ஆஸ்திகத்தைக் கைப்பற்றின படியாலும் ஸ்ரீமந்நாத முனிகளையே முதற் காரணமாகவைத்து ப்ரவ்ருத்தித்ததாயும், ஸ்ரீ ஆளவந்தாருடைய (ஸ்தோத்ர ரத்னம், ஸித்தித்ரயம், ஆகமப்ரமாண்யம்) முதலான அநேக கிரந்தங்களால் விருத்தியானதாயும், ஸ்ரீராமாநுஜரால் நன்ருய் பாஷ்யாதிக்ரந்தங்களால் காப்பாற்றபட்டதாயும் இருக்கிற (இதம்) இந்த முனித்ரய ஸித்தாந்தற்குச் செய்த வழிபாட்டின் முறையின் பிரகாரத்தை நன்ருய் எடுத்துக் கூறி அவர்கள் பூமியில் முறையே அவதரித்து படிப்படியாய் சாஸ்திரத்தையும் அதற்கு அநுகுணமான ப்ரயோகத்தை செய்ததனுல்தான் மற்ற நாஸ்திக மதஸ்தர் போல் நாமும் அஞ்ஞான இருள் மண்டியுண்ணுதபடி விசிஷ்டாத்வைத மதஸ்வரூபஞான பிரகாசத்தை யனுபவித்து ஸந்தோஷிக்க ஹேதுவாயிற்று" என்கிருர்.

இவ்வாறு நமது ஸ்ரீமந்முனித்ரய ஸம்பிரதாயம் மிகவும் பிராசீனமான ஸத்ஸம்பிரதாயமாயிருக்க ஏதோ சிலர் மத்ய காலத்தில் நவீனமாக திருக்குடந்தை தேசிகன் என்று மஹாபிரஸித்தியடைந்த கோபாலார்ய மஹாதேசிகளிடத்தில் 3 முனிகள் (ஸந்யாஸிகள்) கிரந்த காலக்ஷேபம் செய்ததைக் காரணமாக வைத்து தற்காலந்தான் முனித்ரயஸம்பிரதாயம் ஏற்பட்டதாகச் சிலர் சொல்லுகிருர்கள். அக்காரணம் ஸரியான காரணமன்று, இப்படி 3 ஸந்யாஸிகள் கிரந்த காலக்ஷேபம் பண்ணினதை ஓர் ஆதாரமான காரணமாக வைத்துக்கொண்டு "முனித்ரய ஸம்பிரதாயம்" என்ற பெயருள்ள வ்யவஹாரம் ஏற்படுகிறது என்ற பக்ஷத்தில் திருக்குடந்தை தேசிகனுடைய ஆசார்யாளாகிய

ஸாக்ஷாத் ஸ்வாமி என்று சிறந்த உலக பிரஸித்தியடைந்த ஸ்ரீமத் வேதாந்த ராமானுஜ மஹாதேசிகனிடத்தில் (1) ஸ்ரீ சடகோபஸ்வாமி (2) ஸ்ரீபாதுகாஸேவக ராமானுஜஸ்வாமி (3) ஸ்ரீரங்கநாதஸ்வாமி என்ற 3 ஸந்யாஸிகள் (முனிகள்) கிரந்த காலக்ஷேபம் செய்ததாக சரித்திரங்களிலிருந்து ஸ்பஷ்டமாகத் தெறிகிறது.

மேலும் திருக்குடந்தை தேசிகனுடைய சிஷ்யர்களில் ஒருவராகிய வேதாந்த ராமானுஜ மஹாதேசிகனுடைய ஸம்பிரதாயத்தை மூன்று முனிவர்களுடைய ஸம்பிரதாயம் என்று சொன்னால் முன் சொல்லப்பட்ட ஸாக்ஷாத்ஸ்வாமி யினிடத்தில் 3 ஸந்யாஸிகள் (முனிகள்) கிரந்த காலக்ஷேபம் செய்து வந்தபடியால் அது முதற்கொண்டுதான் முனித்ரய ஸம்பிரதாயம் ஏற்பட்டது என்று சொல்ல வேண்டியும் வரும், இன்னும் ஸாக்ஷாத் ஸ்வாமிக்கு ஆசார்யனான ஸ்ரீரங்க நாத மஹாதேசிகனிடத்தில் (1) ஸாக்ஷாத்ஸ்வாமி (2) பாதுகாஸேவக ராமானுஜ ஸ்வாமி (3) ஸ்ரீநிவாஸ ஸ்வாமியாகிய மூன்று முனிகள் காலக்ஷேபம் செய்ததாகவும் தெரிகிறபடியால் ஸ்ரீரங்கநாத ஸ்வாமி முதற்கொண்டுதான் முனித்ரயஸம்பிரதாயம் ஏற்பட்டு வருகிற தென்றும் சொல்லலாம்.

இந்த ஸ்ரீரங்கநாதஸ்வாமிக்கும் சில வருஷங்களுக்கு ப்பூர்வம் சந்திரகிரி ஸ்ரீமத் வெங்கடாச்சார்ய ஸ்வாமி ஸந்நிதியில் 3 முனிகள் ஆச்ரயித்ததாக எழுதிவைத்திருக்கிறார்கள். ஆகவே அது முதற்கொண்டும் முனித்ரய ஸம்பிரதாயம் முன்னேற்றமாய் வந்ததென்றும் சொல்ல ஹேது உண்டு.

இவ்விஷயங்கள் இவ்வாறு நிற்க, ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகளிடத்திலேயே மூன்று ஸந்யாஸிகள், அதாவது (1) பிரும்ம தந்திர ஸ்வதந்திர ஸ்வாமி (2) ப்ரபாகர ஜீயர் (3) வெண்ணைக் கூத்தஜீயர், ஆக இம் மூன்று ஸந்யாஸிகளும் தேசிகனை ஆச்ரயித்து கிரந்த காலக்ஷேபம்

செய்ததாகத் தெரிய வருகிறது. ஆகவே ஸ்ரீதேசிகனும் முனித்ரய ஸம்ப்ரதாய கூடஸ்தர் என்றும் சொல்ல ஹேதுவும் ஏற்படக் குறையில்லை. ஆகவே ஸ்ரீதிருக்குடந்தை தேசிகன்போன்ற ஒருவரிடத்திலிருந்துவந்த ஸம்பிரதாயத்தை முனித்ரய ஸம்ப்ரதாயம் என்று சொல்வதைவிட மூன்று முனிவர்களுடைய அதாவது (1) ஸ்ரீமந்நாத முனிகள் (2) ஸ்ரீமந்யாமுன முனிகள் (3) ஸ்ரீமத் ராமானுஜ முனிகள் இவர்களுடைய ஸம்பிரதாயத்தையே முனித்ரய ஸம்பிரதாயம் என்று சொன்னால் பூர்வாசாரிய வாக்யத்திற்கும் ப்ரத்யக்ஷானுபவத்திற்கும் ஸுதர்க்கத்துக்கும் பொருந்தும். ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனுக்கு குரு பரம்பரையில் அநேக ஆசார்யர்கள் இருக்கச் செய்தேயும் இம்முனித்ரயத்தைப்பற்றி மாத்திரம் ஸ்ரீமத் ரஹஸ்ய ஸாரத்தில் தமிழிலும், ஸ்ரீ தத்வமுக்தாகலாபம், என்ற ஸம்ஸ்க்ருத க்ரந்தத்திலும் விசேஷமாக ஸாதித்தபடியால் நம்தேசிகனுக்குப் பின்பே இவ்வஹாரம் மிகவும் ஸ்பஷ்டமாய் சிறப்புற்று வந்திருக்கிறது என்று சொல்லக் குறையேதுமில்லை. இவ்வளவேயொழிய மூன்று முனிகள்சேர்ந்து ஒரு இடத்தில் கிரந்த காலக்ஷேபம் செய்வதைக்கொண்டு 'முனித்ரயம்' என்ற வ்யவஹாரம் வருவதாயிருந்தால் "அதில்யாப்தி" என்ற தோஷம் ஏற்படுவதையும் காட்டியுள்ளோம். ஆகவே முனித்ரய ஸித்தாந்தம் என்பது ஸ்ரீதேசிக ஸித்தாந்தம்தான்.

ஆகையால் ஸ்ரீ வைஷ்ணவ உலக முழுவதும் முனித்திரய ஸம்பிரதாயத்தைச் சேர்ந்தவர்களே. ஆகையால் அவர்கள் அனைவரும் ஸம்பிரதாய ஸகோதரர்களே ஆவார்கள்.

இவர்களுக்கு இப்போது சிலர் சொல்லுகிற முனித்திரயத்தின் பரம்பரையாக கிரந்த காலக்ஷேபம் முதலானவைகள் மூன்று ஸந்யாஸிகளிடமிருந்து சேர்ந்து ஒரு

உத்தம சிஷ்யனைப் பொருக்கி எடுத்து ஸம்பிரதாய ப்ரவர்த்தகராக்கினல்தானே முனித்ரயம் என்ற பெயரும் வ்யவஹாரமும் வருவதற்கு உசிதமாகும். அப்படி யல்லாமல் ரூடமாக (இடுகுறிப்பெயரால்) ஒரு வழியாக வந்த ஸம்பிரதாயத்தை ரூடியாக முனித்ரய ஸம்பிரதாயம் என்று சொன்னல் முனித்ரயம், (3 ஸந்யாஸிகளுடைய ஸமுதாயம்) என்றும் பல ஸம்பிரதாயங்களும் ஏற்படலாம். ஆகவே முனித்ரய சம்பிரதாயம் என்ற பதத்திற்கு அர்த்தமே யில்லை. ஆகவே முனித்ரய ஸம்பிரதாயம் என்ற வ்யவஹாரம் வந்ததற்கு அடிப்படையான காரணம் எதென்றில் ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனல் பிரமாணப் படுத்தப்பட்டு (1) ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் மங்களா சரணபாசுரங்களிலும் (2) ஸ்ரீமத் தத்வமுக்தாகலாபத்திலும் ஸம்ஸ்கிருத ச்லோக பூர்வமாக ஒரே கோர்வையாய் மற்றெந்த ஆசார்யரையும், அனுஸந்திக்காமல் (1) ஸ்ரீமந் நாதமுனிகளையும் (2) ஸ்ரீமதாளவந்தாரையும், (3) ஸ்ரீ ராமாநுஜரையும் மாத்திரமே அனுஸந்தித்து ஸங்கிரஹித்த முனித்ரயமே முனித்ரயமாகும்.

மேலும் இவ்விஷயமானது ஸ்ரீ தேசிகனல் ஸாதிக்கப் பட்டபடியால் ஸ்ரீ தேசிகனுக்குப் பின்புள்ளார்தான் அவ்யவஹாரத்தை மேற்கொண்டார்கள். ஆகவே அம்மூன்று முனிவர்களுடைய பெயரும் வ்யவஹாரமே, இந்நாள் களிலும் "ஸ்ரீமந் நாதமுனி, ஸ்ரீ மத்யாமுனமுனி-ஸ்ரீமத் ராமாநுஜ முனி ப முனித்ரய ஸித்தாந்த ஸ்தாபனசார் யாணும்" என்றும் பிருதுகூறி முனித்ரய ஸம்ப்ரதாய குரு பரம்பரா ஸம்பாவனே செய்யக் காண்கின்றோம்.

அடுத்தபடியாக (1) ஸ்ரீமந் நாதமுனிகள் (2) ஸ்ரீமத் யாமுனமுனிகள் (3) ஸ்ரீமத் ராமானுஜ முனிகள் இம்மூவருடைய ஸத்ஸம்பிரதாயம் எவ்வாறு லக்ஷ்மிநாதன் துடங்கி ஸ்ரீ ராமானுஜர் வரை எவ்வாறு ஓரானேர் வழியாய் வந்தது

என்பதைச் சற்றுப் பரிசீலனை செய்வோம். அதற்குப் பிரமாணமான பாசுரத்தையும் ச்லோகத்தையும் இங்கு குறிப்பிடுவோம்.

(ஆதியான குரு பரம்பராப் பாசுரம்)

(1) “என்னுயிர் தந்தளித்தவரைச்சரணம்புக்கி
யானடைவேயவர் குருக்கள் நிரை வணங்கிப்
பின்னருளாற் பெரும்பூதூர் வந்த வள்ளல்
பெரியநம்பி ஆளவந்தார் மணக்கால் நம்பி
நன்னெறியை அவர்க்குரைத்த உய்யக்கொண்டார்
நாதமுனி சடகோபன் சேனைநாதன்
இன்னமுதத் திருமகளென்று இவர்களை
முன்னிட்டு
எம்பெருமான் திருவடிகள் அடைகின்றேனே
(ஸ்ரீ தேசிகாஸூக்தி)

(2) ஆதியான குரு பரம்பராச்லோகமாவது

**अस्मद्देशिक मस्मदीय परमाचार्यानशेषान्गुरून्**
அஸ்மத்தேசிகமஸ்மதீய பரமாசார்யாநசேஷான்
குரூந்

**श्रीमल्लक्ष्मणयोगिपुंगव महापूर्णौमुनियामुनं**
ஸ்ரீமல்லக்ஷ்மணயோகிபுங்கவ மஹாபூர்ணௌ
முனிப் யாமுனம்

**रामं पद्म विलोचनं मुनिवरंनाथंशठद्वेषिणं**
ராமம் பத்மவிலோசனம் முனிவரம் நாதம் சட
த்வேஷிணம்

**शेनेशं श्रिय मिन्दिराशहचरं नारायणं शंश्रये ॥**
ஸேநேசம் ஸ்ரீயமிந்திராஸஹசரம் நாராயணம்
ஸம்ச்ரயே.

என்ற பாசுரமும் ச்லோகமும் எதைப்பற்றிக் கூறுகின்றன, எவ்வாறு கூறுகின்றன என்று வினவும்பக்ஷத்தில் அதைத்தெரிவிக்கிறோம். இவ்விரண்டு பிரமாணங்களும்

ஆதிகுருவான ஸ்ரீபெருமாள் முதற்கொண்டு இக்காலத்தில் எழுந்தருளியிருக்கப்பட்ட பிரஸித்தமான ஸத்குரு ஸந்ததியைத் தெளிவித்துத்தெரிவிக்கிறது. எங்ஙனேயென்றில்

*N. B.*—பற்பல விசேஷ ப்ரமாணங்களை அனுஸரித்து "நமது பிரஸித்த குருக்களாகிய ஸ்ரீ ராமாநுஜர் முதற் கொண்டு ஸ்ரீ பெருமாள் வரை அனுஸந்திக்கப்பெற்ற குரு பரம்பரா பிரமாணமாகும்."

(ஸ்ரீமத் குரு பரம்பரையின் வம்ச விருக்ஷம்)

(1) நமது பரமாச்சாரியர்களும் அவரது குருக்களும்

(2) ஸ்ரீ பெரும்பூதூர் வந்த வள்ளலாகிய ஸ்ரீ ராமாநுஜர் (A)

(3) பெரிய நம்பிகள்—(மஹாபூர்ணர்)

(4) ஆளவந்தார் அல்லது ஸ்ரீ யாமுனச்சாரியார் (B)

(5) மணக்கால் நம்பி அல்லது ஸ்ரீ ராம மிச்ரர்

(6) உய்யக்கொண்டார் அல்லது புண்டரீகாக்ஷர்

(7) நாதமுனிகள் (C)

(8) சடகோபன் அல்லது நம்மாழ்வார்

(9) சேனைநாதன் அல்லது விஷ்வக்ஸேனர்

(10) பெரிய பிராட்டியார்

(11) ஸ்ரீமந்நாராயணன்

*N. B.*—ஸ்ரீ குரு பரம்பரையின் வம்ச விருக்ஷத்தில் குறிப்பிட்ட **A, B, C** இம்மூவரும் முனித்ரய ஸித்தாந்த ஸ்தாபகாசார்யர்கள்

ஆகவே ஸ்ரீ பெருமாள் முதற்கொண்டு ஸ்ரீராமானுஜர் (ஸ்ரீ பாஷ்யகாரர்) வரையிலுள்ள குற்றமற்ற ஆசார்ய ஸந்ததி

யானது கூறப்பட்டது. இக்குருபரம்பரையிலுள்ள ஸதாசார்யார்களுடைய சரித்திரத்தை ஸந்தர்ப்பத்தையொட்டி மிகவும் சுருக்கமாய் இவ்விடம் கூறுவோம்.

ஸ்ரீ பெருமாள், பெரிய பிராட்டியாருக்கு உபதேசம் பண்ணின வேதாந்த ரஹஸ்யார்த்தங்களை விஷ்வக்ஸேனருக்கு முதலில் உபதேசம் பண்ணப்பட்டது. இது ஸ்ரீ வைகுண்டத்தில் நடந்த ஸங்கதியாகும். அவ்விஷவக்ஸேனரானவர், பூமியில் வந்து ஆழ்வார் திருநகரியில் கலியுகப் பிறந்த சிலநாட்களுக்குப் பின்பு தாமிரபர்ணி நதிக்கரையிலுள்ள திருநகரியில் அவதரித்த நம்மாழ்வாருக்கு பஞ்ச ஸம்ஸ்காரங்களையும் செய்துவைத்து வேதாந்த ரஹஸ்யார்த்தங்களை உபதேசித்தார். அவ்வாழ்வார் ஆகாரம் ஒன்றுமில்லாமல் 16 வருஷங்கள் யோகதசையிலிருந்து எம்பெருமானை அனுபவித்துக்கொண்டிருந்தார்.

## ஸ்ரீ மதுரகவி ஆழ்வாரின் திவ்ய சரித்திரம்

இப்படியிருக்க, தேறியமானஞானமுடன் திருக்கோளூரில் சித்திரையில் சித்திரை நாள் வந்து அவதரித்த ஸ்ரீ மதுரகவியாழ்வாரானவர் அநவரதம் கண்ணன் கழலிணையில் ஈடுபட்டு அன்னவரை தரிசனம் செய்து உஜ்ஜீவிக்க நினைந்து பாரத நாட்டின் உத்தர பாகத்திலுள்ள ஸ்ரீமத் துவாரகா க்ஷேத்திரத்திற்கு எழுந்தருள ஸங்கல்பித்து வடக்கே சென்றுகொண்டிருக்கும்போது ஒரு நாளிரவில் தெற்கே ஆகாயத்தில் ஒரு அற்புதமான பரஞ்சோதி இவருடைய கண்களுக்கு விஷயமாகவே ஸ்ரீ மதுரகவிகளும் தமது த்ருஷ்டி சித்தங்களை ஆகர்ஷிக்கின்ற அத்தேஜஸ்ஸின் வரலாற்றை அறிய தென்னாட்டிற்குத் திரும்பி எழுந்தருளி வந்துகொண்டிருக்கும்போது கடைசியாய் தக்ஷிண கங்கை என்று பிரசித்தியாகக்கூறப்பட்டதாம்ரபர்ணி நதிக்கரைக்கு எழுந்தருளினபோது அவ்வற்புதஜோதி அங்கேயே நின்றுவிட அதுகண்டு தமது வரலாற்றையனைத்தும் திருநகரியிலுள்ளாருக்குத்தெரிவிக்க அவ்வூராரும் "அந்தோ இந்தப்

பொலிந்தபிரான் ஸந்நிதியில் காரி வம்சத்தாருக்கு ஓர் திலகம்போன்ற ஓர் ஸந்ததியாய்த்தோன்றி பிறந்தபொழுதி லிருந்து ஸ்தன்யபானுதிகளையும் ஆகாரத்தையும் மறந்து, சடன் என்ற வாயுவைத் தன்னை யணுகவொட்டாமல் ஜயித்துச் சடகோபன் என்ற திருநாமம் பூண்டு உல கியற்கைக்கு மாறுன ஸ்வபாவத்தோடு கூடியவராயிருத்த லால் இவ்வூராரனைவரும் அன்னவரை 'மாறன்' என்றழைக் கும் பெரும் பெருமை வாய்ந்தவருமாய் அனவரதம் பகவத் தியானம் செய்யும் ஓர் பரஞ்சோதிபோன்ற அற்புதத் தெய்வக் குழவி பிறந்து பூர்ண சந்திரனுடைய ஷோடச கலைகள் போன்று 16 திருநக்ஷத்திரங்களாகின்றனவே; அதனை யறியீரோ; பெரியாரே' என்று ஸ்ரீ மதுரகவிகளைக் கேழ்க்க, அன்னவரும் அவ்வற்புதத் திருமேனியை தர்சிக்க ஆவலுள்ளவராய் பொலிந்த நின்ற பிரானின் ஸந்நிதி சென்று அங்கு ஓர் உறங்காப் புளியவிருக்ஷத்தினடியில் பரம்பொருளை உபாஸித்தளவில் ஓர் அசேதனம்போன்ற ஒரு வ்யக்தியைக்கண்டு இவருக்குச் சைதன்யமிருக்கிறதா இல்லையா என்று பராமர்சிக்கத் தொடங்கி பக்கத்திலுள்ள ஒரு சிறு கல்லை எடுத்து எறிந்தவளவிலே ஆழ்வாரும் தமது ஞான ஒளியால் பிரகாசிக்கின்ற கமலக் கண்களால் ஸ்ரீ மதுரகவிகளைக் குளிர்ந்து கடாக்ஷிக்கவே, மேலும் இவர் தம் மனதுக்குள் இம்மஹானுடைய குளிர்ந்த கடாக்ஷம் பெற்றேமாகிலும், இவர் திருவாய் மலர்ந்து ஒன்றும் பேச வில்லையே என்று நினைத்து சடகோபனிடம் "செற்றத்தின் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத் தின்று எங்கே கிடக்கும்" என வினவ அவ்வாழ்வாரும் அதற்குரிய பதிலாக "அத்தைத்தின்றங்கே கிடக்கும்" என்று உரைக்கக் கேட்டு மிகவும் வியந்தவராய் "இவரே அடியேனை உஜ்ஜீ விக்கச் செய்யும் பேராசிரியராவர்" என நிச்சயித்து

N. B.—சில ஸ்ரீ கோசங்களில் துவாரகையைச் சொல்லாமல் திருவயோத்தி என்றும் குறிப்பிடுவதுமுண்டு.

"ஸ்வாமின்! அடியேனுடைய ஜீவன் உஜ்ஜீவிப்பதற்குறிய தத்வஹித புருஷார்த்தங்களை உபதேசித்தருளவேணு மென்று ஆழ்வாரது பொற்றாமரையடிகளைப் போற்றும் போது நம்மாழ்வாரும் மதுரகவிகளுடைய நிரதிசயபக்தியை மெச்சி இவருக்கு உபதேசம் செய்ய நினைத்து, ஸ்ரீவைகுண்ட நாதனை உபாஸிக்கத் துடங்கவே அன்ன வரும் பக்ஷிராஜன்மேல் பிராட்டிமார் ஸஹிதம் ஸேவை ஸாதித்தருள உடனே ஆழ்வாரும் ஸ்ரீபகவத் கிருபையை முன்னிட்டு ரிக்யஜுஸ் ஸாம அதர்வண வேதங்களின் உட் கருத்துக்கள் அடங்கும்படி திருவிருத்தம், திருவாசிரியம், திருவாய்மொழி, பெரிய திருவந்தாதி என்ற தமிழ் மறை களை உபதேசித்து கிருதார்த்தராகும்படி செய்தார். மதுர கவிகளும் உடனே தம்முடைய ஜீவனை உஜ்ஜீவிக்கச் செய்த நம்மாழ்வாரையே தெய்வமாகக் கருதி அவ்வாழ்வாருடைய ப்ரபாவ விஷயமாகக் "கண்ணிநுண் சிறுத் தாம்பு" முதலான 10 பாசுரங்களை அநுஸந்தித்து க்ருதார்த்தரானார். ஆனால் காலக் கிரமத்தில் ஸ்ரீசடகோபனுடைய திவ்ய ஸூக்திகளும் மற்றைய ஆழ்வார்களாகிய (பொய்கை முனி, பூதத்தார், பேயாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், தொண் டரடிப் பொடியாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கை யாழ்வார்) முதலியவர்களுடைய திவ்ய ஸூக்திகளும் லுப்த மாகி விட்டன. ஆனால் கண்ணிநுண் சிறுத்தாம்பு 10-ப் பாட்டுக்களும் திருக் குடந்தை என்னும் திவ்ய க்ஷேத்திரத்தை மிகவும் உகந்து அதில் கோயில் கொண் டெழுந் தருளி யிருக்கும் ஸ்ரீஆராவமுதன் விஷயமான பதினொன்று பாசுரங்கள் மாத்திரம் ஆங்காங்கு சுர்ண பரம் பரையில் அநுஸந்தானத்தில் இருந்து வந்தன.

இவ்வாறு சில நூற்றாண்டுகள் கழிந்த பின்னர், வீரநாராயணபுரம் என்ற திவ்ய க்ஷேத்திரத்தில் அவதரித்த ஸ்ரீமந் நாதமுனிகள் என்ற யோகீச்வரர், தாம் அநேக திவ்ய தேசங்களில் அநேக கோடி புண்ய ஜன்மங்களில்

செய்த ஸுகிருதங்களின் பலமாக பூமியில் தோன்றியுள்ள மஹரிஷிகள் போன்ற மஹா ஸ்ாதுக்களுக்கு ஸேவை ஸாதிக்கத் திருவுள்ளம் கொண்டு அர்ச்சாவதாரத்தில் எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீரங்கநாத, ஸ்ரீவேங்கடேச, ஸ்ரீவரத ராஜன் போன்ற அர்ச்சாவதாரங்களை அவ்வோ திருப்பதிகளில் மங்களாசாஸனம் செய்துவிட்டு ஒருஸமயம் ஸ்ரீவைஷ்ணவ ஸம்பத் ஸம்ருத்தமான சேவ்வம்மல்கு தென் திருக் குடந்தைக்கு எழுந்தருள அவ்வெம்பெருமாள் ஸந்நிதியில் ரங்கவல்லி கைங்கர்யம் செய்து கொண்டிருந்த வ்ருத்த தசையடைந்த ஸ்திரீ ஜாதி ஒருவள் குயிலினுமினிய இன்னிசையுடன்

"ஆராவமுதே யடியேனுடலம் நின்பாலன் பாயே
நீராயலைந்து கரைய உருக்குகின்ற நெடுமாலே
சீரார் செந்நெல் கவரி வீசும் செழுநீர் திருக்குடந்தை
ஏரார் கோலந்திகழக்கிடந்தாய் கண்டேன் எம்மானே!"

என்றுதுடங்கி


"உழலை என்பின் பேய்ச்சி முலையூடவனையுயிருண்டான்
"கழல்களவையே சரணக் கொண்ட குருகூர்ச் சடகோபன்
குழலின் மலியச் சொன்ன **வோராயிரத்துளிப் பத்தின்**
மழலை தீரவல்லார் காமர் மானேய் நோக்கியற்கே"

என்று பாடி முடித்ததை ஸ்ரீமந்நாதமுனிகள் கேட்டு வியந்து திருக் குடந்தை ஆராவமுதன் விஷயமாய்ச் சடகோபனென்ற மஹா பகதர் ஒருவர் பத்துப் பாட்டுகள் பாடியுள்ளாராகிலும் "அவை போன்ற இன்றும் ஆயிரம் பாசுரங்கள் எங்கேயுள" வென்று அக் கிழவியை வினவ, அக் கிழவியும் மஹானே! அந்தோ! அடியேன் இப் பத்துப் பாசுரங்களைப் பெரியோரிடமிருந்து கர்ண பரம் பரையாய்க் கேட்டு அநுஸந் திக்கிறேனே தவிற அடியாளுக்கு வேறொன்றும் தெரியாதெனக் கூறினள்.

பின்பு ஸ்ரீமந் நாதமுனிகளும் அக்கிழவி சொன்ன பாசுரங்களை சிரவணம் செய்துவிட்டுப் பின்பு அப்பாசுரங்களின் மூலத்தை விசாரிக்கத் திருவுள்ளம் கொண்டு குருகை நகர் சென்று அவ்விடத்தில் ஸ்ரீ மதுரகவி ஆழ்வாருடைய வம்ச பாரம்பரையைச் சேர்ந்த ஸ்ரீ பராங்குச தாஸர் என்ற ஓர் வைஷ்ணவரிடம் இவ்விஷயத்தைப் பரிசீலனை செய்யத் துடங்கினர்: ஸ்ரீ பராங்குச தாஸருக்கு கூடஸ்தரும் ஸ்ரீ சடகோபனிடத்தில் பரம பக்தருமான ஸ்ரீ மதுரகவிகள் திருவாய்மலர்ந்தருளிய " கண்ணிநுன் சிறுத்தாம்பு " என்ற ஸ்ரீ சடகோபன் விஷயமான பத்துப் பாசுரங்களைப் பன்னீராயிரம் தடவை நீர் ஆவ்ருத்தி செய்தால் ஸ்ரீமந் நம்மாழ்வார் தங்களுக்கு நேரில் ஸேவை ஸாதித்து தேவரீருடைய அபீஷ்டத்தைப் பூர்த்திசெய்தருளுவார் என்றதோர் இனிய செய்தியை செவி சாத்தியருளினவுடனேயே தாமும் தயங்காமல் " கண்ணிநுன் சிறுத்தாம்பு " என்ற திவ்ய பிரபந்தத்தை நியமிக்கப்பட்டபடியே ஆவிருத்தி செய்யும்போது " ஸ்ரீ சடகோபனும் ஸ்ரீமந் நாதமுனிகளுடைய யோகதசையில் ஸேவை ஸாதித்தருளி, மந்திரங்களையும் மந்திரார்த்தங்களையும் பிரும்ம ஸூத்ரார்த்தங்களையும் லுப்தமான மற்ற நாலாயிர திவ்ய ப்ரபந்தங்களையும் உபதேசித்து ஸ்ரீமந் நாதமுனிகளுக்கு ஸாக்ஷாத்தாக ஆசாரியரானர். மேற்கண்ட விஷயம், ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த அம்ருதாஸ்வாதினியில் 28வது பாசுரத்தில் " மந்திரமும் மந்திரத்தின் வழியும் காட்டி வழிப்படுத்தி " என்ற ஸ்ரீஸூக்தியால் வெளியாகிறது. இவ்வாறு ஸ்ரீமந் நாதமுனிகளுக்கு நம்மாழ்வார் நேரில் ஆசாரியாரானர் என்று, பிரமாணங்களைக்கொண்டு ஸ்பஷ்டமாய்த் தெரிய வருகிறது. ஆகவே இந்நாதமுனிகளும், ஸ்ரீ ஆளவந்தாரும், ஸ்ரீராமானுஜரும் முனித்ரய ஸித்தாந்த ஸ்தாபகரானர்கள். மேலும் இம்மூவருடைய சரித்திரங்களும் 3, 4, 5-ம் பக்கங்களில் வேண்டியளவு கூறப்பட்டது. ஆகவே ஸ்ரீவைஷ்ணவ உலகம் முழுமையும் இஸ்ஸித்தாந்தத்தைச் சார்ந்தவர்க

ளர்கையால் நாம் ஒருவர்க்கொருவர் மிகவும் இன்பமாகப் பழகி ஒருவர்க்கொருவர் வழுவிலாவடிமைசெய்ய விரும்புவோமாக.

அடுத்தபடியாக ஸ்ரீமந் முனித்ரய ஸம்பிரதாய பரம்பரையைச்சேர்ந்த ஸ்ரீ ராமாநுஜருக்கு அநேக ஸச்சிஷ்யர்களுடைய பரம்பரை ஏற்படத்துடங்கிற்று.




N B.— ஆனல் சில சாஸ்திர மரியாதையை உத்தேசித்து சில வேற்றுமைகள் ஏற்படும் காலத்தில் அதையும் பொருமையுன் பொருத்துக்கொள்வோமாக.

## திருக்குருகைப்பிரான்பிள்ளான்

இம்மஹான் ஸ்ரீ பாஷ்ய பகவத் விஷயமான உபய வேதாந்தங்களுக்கும் பிரவர்த்தகராய் எழுந்தருளியிருந்தார். இவரே ஸ்ரீசடகோபன் அருளிச்செயலாகிய திருவாய்மொழிக்கு ஸ்ரீராமானுஜருடைய நியமனப்படி "ஆறாயிரப்படி" என்ற திருவுரை அருளிச்செய்தவர்.

## ஸ்ரீ எங்களாழ்வான்

இம்மஹான் திருவெள்ளரையில் கீலக வருஷம் வைகாசி மாதம் ஸ்வாதி நக்ஷத்திரத்தில் அவதரித்தார். இவரை ஸ்ரீவிஷ்ணு சித்தர் என்று வ்யவஹரிப்பதுமுண்டு. இவர் ஸ்ரீவிஷ்ணு புராணத்திற்கு "ஸ்ரீ விஷ்ணு சித்தீயம்" என்ற வடமொழி உரையும் அருளிச் செய்தார்.

## ஸ்ரீ நடாதூரம்மாள்

ஸ்ரீநடாதூரம்மாள் (வரதாச்சாரியார்) சித்திரை மாசத்தில் சித்திரை நக்ஷத்திரத்தில் பெருமாள் கோயிலில் அவதரித்து உபய வேதாந்த பிரவசனம் செய்துகொண்டு எழுந்தருளியிருந்தார். இவரே 'தத்வஸாரம்' 'ஜயந்தீ நிர்ணயம்' முதலிய கிரந்தங்களை அருளிச்செய்தவர்.

## கிடாம்பி அப்புள்ளார்

இம்மஹாபுருஷர் பெருமாள் கோவிலில் ஸ்ரீ ரங்கராஜ அப்புள்ளாருடைய குமாரராகச் சித்திரையில் ஆதிரை நக்ஷத்திரத்தில் அவதரித்தார். இவர் மேலும் திருமந்திர ரஹஸ்யார்த்தங்களைத் தம் பிதாவாகிய ஸ்ரீரங்கராஜ அப்புள்ளாரிடமும், ஸ்ரீ பாஷ்ய பகவத் விஷயங்களை நடாதூரம்மாளிடமும் காலக்ஷேபம் செய்து பிரவசனம் செய்து வந்தார்.

## ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன்

உபய வேதாந்த பிரவர்த்தகரான நம் ஸ்ரீதேசிகபிரான் கலி 437க்குமேல் சுக்ல வருஷம் புரட்டாசி மாதம் திருவோண நக்ஷத்திரத்தில் தூப்பிலில் அநந்த ஸோமயாஜி

என்ற உத்தம புருஷருடைய குமாரராக (திருப்பதி ஸ்ரீவெங்கடேசனுடைய திருமணியின் அம்சம்) அவதரித்து ஸ்ரீகிடாம்பி அப்புள்ளாரிடமிருந்து ஸகல வேதாந்த மந்திர ரஹஸ்யார்த்தங்களையும் கிரகித்து அவரால் உபதேசிக்கப்பட்ட ஸ்ரீகருட பகவானுடைய மந்திரத்தைக் கொண்டு அவரை உபாஸிக்கவே ஸ்ரீபக்ஷிராஜனும் பிரசன்னராய் பிரத்தியக்ஷமாக ஸேவை ஸாதித்து மேலும் நம் தேசிகனுக்கு ஸ்ரீலக்ஷ்மீஹயக்ரீவ மந்திரத்தை உபதேசித்துவிட்டு மறைந்தார். பின்பு நம் தேசிகபிரானும் ஸ்ரீ ஹயக்ரீவ மந்திரத்தை ஜபித்து அன்னவரை ஸாக்ஷாத்கரித்து அவரையே திருவாராதனம் செய்துகொண்டு ஸ்ரீரங்க திவ்ய க்ஷேத்ரத்தில் எழுந்தருளியிருக்கும்போது அங்கு வந்து துர்வாதம் செய்த அநேக குதர்க்க வாதிகளை ஜயித்து ஸ்ரீரங்கநாதரால் அனுக்ரஹிக்கப்பட்ட வேதாந்தச்சாரியார் என்ற திருநாமத்தையும் அவ்விடத்திலேயே ஸ்ரீரங்க நாச்சியாரால் சாற்றப்பட்ட ஸர்வதந்திர ஸ்வதந்திரர் என்ற திருநாமத்தையும் இன்னும் பிரபல வித்வான்களால் அளிக்கப்பெற்ற கவிதார்க்கிக ஸிம்மம் என்ற திருநாமத்தையும் பெற்று இருபது திருநக்ஷத்திரத்துக்குள் நானாவித வித்தைகளையும் கிரஹித்து ஸ்ரீரங்காதி திவ்ய க்ஷேத்திரங்களில் ஸம்பிரதாய பிரவசனம் செய்துவந்தார். இவர் விசிஷ்டாத்வைத ஸம்பிரதாயத்தை அனுசரித்து சுமார் 120 கிரந்தங்களை அனுக்ரஹித்திருப்பதாகத் தெரிய வருகிறது. இவருடைய விரிவான சரித்திரத்தை 'வைபவ பிரகாசிகை' யில் காணலாம்.

---

குறிப்பு:—ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன், திருக்குருகைப்பிரான்பிள்ளான் பரம்பரையாக ஸ்ரீபாஷ்ய பகவத்விஷய பிரவசனுதிகாரியாயும் ஸ்ரீ கிடாம்பி ஆச்சான் பரம்பரையாக திருமந்திர ரஹஸ்யார்த்த பிரவசனுதிகாரியாயும் இருந்து அத்விதீயரான நிகமாந்த மஹாதேசிகனுப் எழுந்தருளியிருந்தார்.



7. (1) ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன்
புரட்டாசி திருவோணம்
(2) ஸ்ரீ குமார நயினாராசாரியார்
(3) பிரும்ம தந்த்ர ஸ்வதந்த்ரஸ்வாமி

ஸ்ரீமத் உபய வேதாந்த பிரவர்த்தகரான ஸ்ரீமந்நிக மாந்த மஹாதேசிகன் குரு பரம்பராவம்ச விருக்ஷம்.

(1) பிரும்மஸூத்ர கீதா பாஷ்ய பரம்பரை—

ஸ்ரீமந்நிக மாந்த மஹா தேசிகன்

|

ஸ்ரீபிரும்ம தந்திர ஸ்வதந்திர ஸ்வாமி

|

கடிகாசதகம்மாள் (நடாதூரம்மாளுடைய பௌத்ரர்)

|

ஆதிவண் சடகோப ஸ்வாமி

|

வரத விஷ்ணவாச்சாரியார்.
(கடிகாசவ கம்மாளுடைய குமாரர்)

|

மஹாதயாதீசர் (குமாரர் & சிஷ்யர்)

|

அஹோபிலாச்சார் ஸ்வாமி

|

வரதாச்சாரியார் ஸ்வாமி

|

ஷஷ்டபராங்குச ஸ்வாமி

|

பஞ்ச மத பஞ்சனம் தாத்தாச்சார் ஸ்வாமி

|

வாத்ஸயானந்தாச்சார் ஸ்வாமி

|

ஸ்ரீரங்க ராமானுஜ ஸ்வாமி (உபநிஷத் பாஷ்யகாரர்)

|

I. ஸ்ரீரங்கநாதாச்சார் ஸ்வாமி

|

வீரராகவாச்சார் ஸ்வாமி

|

II. ஸ்ரீரங்க நாதாச்சார் ஸ்வாமி

|

ஸ்ரீரங்க நாத மஹா தேசிகன். (ஸ்ரீரங்கம் தசாவதார

ஸ்வாமி ஸந்நிதியில் வெகுகாலம் எழுந்தருளியிருந்தவர்)

|

ஸாக்ஷாத் ஸ்வாமி—வேதாந்த ராமானுஜ மஹா தேசிகன்.
இருபத்தி நாலாயிரப் படி என்ற க்ரந்தத்தை
அனுக்ரஹித்த மஹான்.

|

திருக் குடந்தை தேசிகன் (கோபாலார்ய மஹாதேசிகன்.

குறிப்பு :—இத் திருக்குடந்தை தேசிகனே உபய வேதாந்த ப்ரவர்தகாச்சாரியராய் எழுந்தருளி யிருந்த விபரத்தை குருபரம் பராவம்ச விருக்ஷமூலமாய்க் காண்க.

2 ஸ்ரீமந் நம்மாழ்வார் திவ்ய ஸூக்தியான பகவத் விஷய ப்ரவசன குருபரம்பரையாவது :—

ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகன்

|

ஸ்ரீமந் நயினாராச்சார் (வரதாச்சாரியார் ஸ்வாமி)

|

பிரும்மதந்திர ஸ்வதந்திர ஸ்வாமி

|

ஸ்ரீஹஸ்தீசாச்சார்

|

கடிகாசதகம்மாள்

|

ஆதிவண் சடகோப மஹா தேசிகன்

|

த்ரிதிய பராங்குச ஸ்வாமி

|

ஷஷ்ட பராங்குச ஸ்வாமி

|

ஸ்ரீநிவாஸ மஹா தேசிகன்

|

ஸ்ரீசைல ஸ்ரீநிவாஸாச்சார்

|

அநந்தாச்சார் ஸ்வாமி

அநந்தாச்சா ஸ்வாமி

|

முனிவாஹன ஸ்வாமி

|

வேங்கடாச்சார் ஸ்வாமி

|

ஸ்ரீரங்க நாத மஹா தேசிகன்

|

ஸாக்ஷாத் ஸ்வாமி (வேதாந்த ராமானுஜ மஹா தேசிகன்

|

பாதுகாஸேவகராமானுஜ மஹா தேசிகன்

|

திருக்குடந்தை தேசிகன்

3. திரு மந்திராதி ரஹஸ்யார்த்த பிரவசன பரம்பரை

ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன்

|

பிரும்ம தந்திர ஸ்வாமி

|

கடிகாசதகம்மாள்

|

வரத விஷ்ண்வாச்சார்

|

மஹா தயாதீசர்

|

அஹோபிலாச்சாரியார்

|

ஷஷ்டபராஸகுச ஸ்வாமி

|

பஞ்சமத பஞ்சனம் தாத்தாச்சார்

|

வாத்ஸ்யாநந்தாச்சார் ஸ்வாமி

|

ஸ்ரீராமானுஜாச்சார்

|

வாத்ஸ்ய வேங்கடாச்சார் (பரவஸ்து)

வாத்ஸ்ய வேங்கடாச்சார் (பரவஸ்து)

|

வீரராகவாச்சாரியார்

|

ஸ்ரீரெங்கநாதாச்சார்

|

ஸ்ரீரங்கநாத மஹா தேசிகன்

|

ஸாக்ஷாத்ஸ்வாமி (வேதாந்த ராமானுஜ மஹா தேசிகன்

|

திருக்குடந்தை தேசிகன் (கோபாலார்ய மஹா தேசிகன்

இவ்வாறு நமது ஸத் ஸம்பிரதாயம் ஞாநானுஷ்டா வைராக்யாரரேஸார்களான ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகன் முதலான ஸதாசார்ய பரம்பரையாய் வந்து கடைசியில் திருக்குடந்தை தேசிகராகிய கோபாலார்ய மஹாதேசிகனிடத்தில் உபய வேதாந்த பிரவசனதிகாரமும் பர்யவஸான மாயிற்று என்பது குறிப்பிடத் தக்கது. அடுத்தபடியாக ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகனுக்குப் பின்பு ஸம்பிரதாய பிரவர்த்தகரான ஆசாரியர்களுடைய சரித்திரத்தைச் சற்று ஸங்கிரஹமாக பராமர்சிக்கத் துடங்குவோம்.

ஸ்ரீவரதாச்சாரியார் அல்லது குமார நயினாராசாரியார்

ஸ்ரீநிகமாந்த மஹா தேசிகனுக்குப் பின்பு அன்னவருடைய குமாரராயும் ஸ்ரீராமானுஜ ஸித்தாந்த விஜயத்வஜராய் எழுந்தருளியிருந்த (நயினாச்சரரியார்) ஆங்காங்கு அநேக துர்வாதிகளை ஜயித்து ஸ்ரீராமானுஜ—தேசிக ஸித்தாந்தத்தை ஆங்காங்கு ஸ்தாபித்து 'அதிகரண சிந்தாமணி,' "மீமாம்ஸா பாதுகா பரித்ராணம்" முதலிய கிரந்தங்களைச் செய்தருளி பிரும்ம தந்திர ஸ்வதந்திர ஸ்வாமி போன்றவர்களுக்கு ஸ்ரீபகவத் விஷயாதி பிரவசனம் செய்து வந்தார்.

## பிரும்ம தந்திர ஸ்வதந்திர ஸ்வாமி

இவரும் ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகனுக்குப் பிற்பாடு ஸ்ரீதேசிக ஸம்பிரதாய பிரவசனம் செய்தருளி வந்தார். இவருடைய சிஷ்யரான வேதாந்த ராமாநுஜஸ்வாமி அல்லது இரண்டாவது பிரும்ம தந்திர ஸ்வதந்திர ஸ்வாமி என்பவர் மைசூர் ஸமஸ்தானத்தில் ஸ்ரீலக்ஷ்மீ ஹயக்ரீவனை பிரதிஷ்டை செய்து திருவாராதனம் செய்து கொண்டு ஸம்பிரதாய பிரவசனம் செய்தருளி வந்தார். இவருடைய பரம்பரையில் சேர்ந்த ஸ்ரீபரகால ஸ்வாமியின் ஸம்பிரதாயம் அம்மைஸூரிலேயே நடந்து வருகிறது.

## கடிகாசதகம்மாள்

ஸ்ரீபிரும்ம தந்திர ஸ்வதந்திர ஸ்வாமியின் முக்கிய சிஷ்யரான இக் கடிகாசசதம்மாள் சித்திரை மாதம் ஹஸ்த நக்ஷத்தில் அவதரித்து பெருமாள் கோவிலில் கிரஹஸ் தாசிரமத்திலிருந்து 'ஸ்ரீயதிராஜவிஜயம்' முதலான கிரந்தங் களைச் செய்தருளி நமது ஸத் ஸம்பிரதாய ஸித்தாந்த பிரவர்த்தகரா யெழுந்தருளி யிருந்தார்.

## ஸ்ரீமத்-ஆதிவண் சடகோப ஸ்வாமி

ஸ்ரீ கடிகாசதகம்மாருடைய பிரதான சிஷ்யரான ஸ்ரீமத் ஆதிவண் சடகோபஸ்வாமி, கிடாம்பி ஸ்ரீ கேசவாச் சாரியாருக்குத் திருக்குமாரராக புறட்டாசி மாதம் கேட்டை நக்ஷத்திரத்தில் திருவவதாரம் செய்து சிலகாலம் சென்ற பின் கடிகாசதகம்மாளால் அநுக்கிரஹிக்கப்பட்ட ஸ்ரீமந் நிருஸிம்ம மந்திரத்தைப்பெற்று பின்பு ஸந்யாஸாசிரமத் தைப்பெற்று அஹோபிலம் ஸ்ரீ லக்ஷ்மீ நிருஸிம்மனை ஸாக்ஷாத்கரித்து திருவாராதனம் செய்து வந்தார். சில காலம் கழிந்ததும் பெருமாள் கோவில் முதலான திவ்ய தேசத்தில் ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிக ஸம்பிரதாய ஸ்தாபனம் செய்துவந்தார். இவர் ஸ்ரீமந் நாருயண ஸ்வாமி

என்ற சிஷ்யரை ஏற்படுத்தி ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்மனுக்கு திருவாராதனம் செய்துவரும்படி நியமித்தருளினார். இவர் தமது பால்யத்திலிருந்தே எல்லையற்ற ஞான வைராக்யானுஷ்டான ஸம்பன்னராய் எழுந்தருளியிருந்த விஷயம் குறிப்பிடத்தக்கது. இவருடைய சிஷ்ய பரம்பரையில் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்மன் (அழகிய சிங்கர்) ஸந்யாஸிகளாலேயே திருவாராதனம் செய்யப்பட்டு வருகிறார்.

## ஸ்ரீவரத விஷ்ணுவாச்சார்

இவர் கடிகாசதகம்மாளுடைய திருக்குமாரர் ஆவார். இவர் தன் பிதாவினிடத்திலேயே திருமந்திர ரஹஸ்யார்த்தங்களையும், மேலும் இவருடைய ஸதீர்த்தரான ஸ்ரீஆதிவண்சட கோபஸ்வாமியிடம் ஸ்ரீ பாஷ்யம் முதலான கிரந்தங்களை கிரஹித்து பெருமாள் கோவிலில் ஸ்ரீராமானுஜ ஸம்பிரதாயத்தை ஸ்தாபித்துக் கொண்டு எழுந்தருளியிருந்தார்.

## மஹாதயாதீசர் — அஹோபிலாச்சாரியார்—வரதாச்சாரியார்.

இம் மூன்று ஸதாசாரியார்களும் ஸ்ரீவரத விஷ்ணுவாசாரியாருக்குப் பின்பு ஸம்பிரதாய பிரவசனம் செய்தருளி வந்தார்கள்.

## ஸ்ரீஷஷ்டபராங்குச ஸ்வாமி

இம் மஹான், ஸ்ரீ பாஷ்யம் முதலிய கிரந்தங்களை ஸ்ரீவரதாச்சாரியாரிடத்திலும் த்ரிதிய பராங்குச ஸ்வாமியினிடத்தில் பகவத் விஷயத்தைர கேட்டும் பெருமாள் கோவில் முதலான திவ்ய க்ஷேத்ரங்களில் ஸம்பிரதாய பிரவசனம் செய்து வந்தார்.

இவ்வாறு ஷஷ்டபராங்குச ஸ்வாமிக்குப் பின்பு பஞ்ச மத பஞ்சனம்—தாதாச்சார் ஸ்வாமியும் இவருக்குப்

பின், வாத்ஸ்யா நந்தாச்சார் ஸ்வாமியும் ஸம்பிரதாய பிரவர்த்தகரானார்கள்.

—உபநிஷத் பாஷ்யகாராகிய ரங்கராமானுஜ ஸ்வாமி—

இம் மஹான் பெருமாள் கோவிலில் பரத்வாஜ கோத்திரத்தில் ஸாம சாகையில் ஆனி மாதம் மிருக சீர்ஷ நக்ஷத்திரத்தில் அவதரித்து வாத்ஸ்ய அனந்தாச்சாரியாரிடம் ஸ்ரீஸ்வரூப கிரந்தங்கள் முழுமையும் கிரஹித்து பரகால ஸ்வாமியிடம் ஸந்யாஸாசிரமத்தை ஸ்வீகரித்து சிறந்த ஸம்ப்ரதாய ஸ்தாபகரானார். இவர் அனுக்ரஹித்த கிரந்தங்களாவன :—தசோபநிஷத் பாஷ்யம், பாஷ்ய ப்ரகாசிகா—ஸ்ரீராமானுஜ ஸித்தாந்த ஸாரம்—ஸ்ரீமந்யாய ஸித்தாஞ்சன வியாக்யானம்—பகவத் விஷயம் ஒன்பதினாயிரப்படி முதலிய கிரந்தங்களைச் செய்தருளி மேலும் "ஷஷ்டி பிரபந்த நிர்மாதா" என்ற உயர்ந்த பிருதுகளுடன் சிறந்த ஸம்பிரதாய ஸ்தாபகராய் எழுந்தருளி யிருந்தார்.

ஸ்ரீரங்கநாதஸ்வாமி

இவர் ஸ்ரீரங்கராமானுஜ ஸ்வாமியிடம் ஸகல கிரந்தங்களையும் காலக்ஷேபம் செய்து ஸ்ரீ வீரராகவாச்சார், பெரிய பரகாலஸ்வாமி ஸ்ரீவேதாந்த ராமானுஜஸ்வாமி, ஸ்ரீராமானுஜஸ்வாமி, முதலானவர்களுக்கு கிரந்த பிரவசனம் செய்து வைத்து, பின்பு வேதாந்த ராமானுஜ ஸ்வாமி சிஷ்யராகிய "ஸ்ரீமன்னார்ஸ்வாமி"யைக்கொண்டு "ஸ்ரீஜயந்தி நிர்ணயம்" முதலிய கிரந்தங்களைச் செய்துவைத்தருளி ஸம்பிரதாய ஸ்தாபனம் செய்து வந்தார்.

ஸ்ரீவீரராகவாச்சார் ஸ்வாமி

இவர் ஸ்ரீரங்கநாத ஸ்வாமியிடத்தில் ஸ்ரீபாஷ்யாதி கிரந்தங்களை காலக்ஷேபம் செய்து பின்னும் பரவஸ்து ஸ்ரீவேங்கடேச மஹா தேசிகனிடத்தில் ஸ்ரீ மந்திர ரஹஸ்ய


பகவத் விஷயங்களை கிரஹித்து தன் குமாரராகிய ஸ்ரீரங்கபதி தேசிகர் முதலியோருக்கு ஸத்ஸம்பிரதாயத்தை அனுக்ரஹித்துக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

## ஸ்ரீரங்கபதி தேசிகர்

ஸ்ரீரங்கநாதமஹா தேசிகர், பின்பு இந்த ஸ்ரீரங்கபதி தேசிகர் கிரஹஸ்தாசிரமத்திலேயே எழுந்தருளியிருந்து கொண்டு தமது ஸச்சிஷ்யரான ஸ்ரீரங்கநாத மகாதேசிகனைத் தேர்ந்தெடுத்து ஸம்பிரதாய பிரவர்த்தனம் செய்தருளும்படி நியமித்தார்-இவருக்குப் பின்பு ஸ்ரீரங்கநாத மஹாதேசிகனும் ஸ்ரீரங்கபதி தேசிகரிடம் ஸ்ரீபாஷ்ய கீதாபாஷ்யாதிகளைக் காலக்ஷேபம் செய்து பின்பு சந்திரகிரி ஸ்ரீவேங்கடாச்சாரியார் ஸ்வாமியினிடத்தில் பகவத் விஷயத்தை கிரஹித்துப் பின்பு ஸ்ரீ பரகால ஸ்வாமியிடம் ஸந்யாஸாசிரமத்தைப் பெற்ற ஸ்ரீமன்றுர் ஸ்வாமியிடம் தான் ஸந்யாஸம் பெற்று ஸர்வலோகங்களாலும் "பெரியஸ்வாமி" என்ற திருநாமத்தால் வெகுமாணிக்கப்பட்டு ஸாக்ஷாத் ஸ்வாமி, பாதுகாஸேவகராமானுஜ ஸ்வாமி, ஸ்ரீராமானுஜ ஸ்வாமி முதலிய உத்தம சிஷ்யர்களுக்கு கிரந்த பிரவசனம் செய்தருளிவந்தார்.

## "ஸாக்ஷாத்ஸ்வாமி"

இம்மஹான் திருநாருயணபுரம் கொண்டல் அக்ரஹாரத்தில் சித்திரைமாதம் திருவாதிரை நக்ஷத்திரத்தில் ஸ்ரீநிவாஸாச்சாரியாருடைய குமாரராக அவதரித்து ஸ்ரீரங்கநாத மஹாதேசிகனிடத்தில் கிரந்த சதுஷ்டயங்களையும் அதிகரித்துத்தெறிந்து அன்னவரிடமே துரியாசிரமத்தையும் பெற்று ஞானவிவராகயாறுஷ்டான சேவதி என்றும ஸாஷாத்ஸ்வாமி என்றும் (ஸ்ரீபாஷ்யகாரருடைய மற்றொரு அவதார விசேஷம்) என்றும் சிறந்த பெருமை வாய்ந்த திருநாமங்கள் சாற்றப்பட்டவராய், ஸ்ரீசடகோப ஸ்வாமி முதலிய மூன்று ஸந்யாஸிகளுக்கும், திருக்குடந்தை தேசிகன் முதலான கிரஹஸ்தர்களுக்கும் கிரந்த



8. (1) திருக்குடந்தைதேசிகன்
(புரட்டாசி பூராடம்) ஸ்ரீரங்கம் ஆண்டவன்
(2) வழுத்தூர் ஆண்டவன்-வேதாந்த
ராமானுஜ மஹா தேசிகன்
(3) வத்திராயிருப்பு ஸ்ரீ ரங்கநாத ஸ்வாமி
(4) செய்யானம் ஸ்ரீநிவாஸ ஸ்வாமி

பிரவசனம் செய்து கொண்டு ஸ்ரீ ரங்கநாத மஹா தேசிகன் நியமனத்தால் ஆராயிரப்படிக்கு வியாக்கியான மாம 24 ஆயிரப்படியையும், பூர்வஸாராஸ்வாதினி, ந்யாஸ வித்யாதர்ப்பணம், ஸ்ரீ தத்வ ஸித்தாஞ்சனம் முதலிய கிரந்தங்களை அனுக்ரஹித்தார்.

இவருடைய அவதார காலத்தில் ஸ்ரீராமானுஜர் திருவீதியில் எழுந்தருள, அச்சமயம் இவருடைய தகப்பனார் ஸ்வாமிக்கு உபஹாரம் ஸமர்ப்பிக்கும்போது, பிதாவினாலேயே 'ஸாக்ஷாத் ஸ்வாமி' எனக் கொண்டாடப் பட்டும், தனக்கு ஆசாரியனாகிய ஸ்ரீரங்க நாத மஹாதேசிகளாலும் 'ஸாக்ஷாத் ஸ்வாமி என வெகு மானிக்கப்பட்டும் சிறந்து விளங்கி எழுந்தருளி யிருந்தார். இவர் பாஸ்கர க்ஷேத்திரம் என்று சொல்லப்பட்ட தஞ்சாவூர் ஜில்லா வடுவூர் கிராமத்தில் சக்ரவர்த்தித் திருமகன் ஸந்நிதிக்குப் பக்கத்தில் எழுந்தருளியிருந்து மஹா ஞாதாக்களுக்கு கிரந்த கால க்ஷேபம் செய்து வைத்துக் கொண்டு எழுந்தருளியிருந்தார்.

## திருக்குடந்தை தேசிகன் (கோபாலார்ய மஹா தேசிகன்)

இந்த கோபாலார்ய மஹா தேசிகன் என்ற மஹானுபாவர், தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள ராயம் பேட்டையில் ஆத்ரேயகோத்ரம் ஸ்ரீகிருஷ்ணஸூரிகளுடைய குமாரராய் அவதரித்து தன் பிதாவினிடத்திலேயே பஞ்ச ஸம்ஸ்காரம், வேதாத்யயனம், சாஸ்திராப்யாஸம் முதலானவைகளைக் கற்றுணர்ந்து, மேலும் தன் திருத் தகப்பனாரிடமே நியமனம் பெற்று 'ஸ்ரீரங்க ஸ்வாமி' என அஸாதாரணத் திருநாமம் பூண்ட ஸாக்ஷாத் ஸ்வாமியினிடத்தில் "குருசுச்ரூஷயா வித்யா" என்கிறபடியே ஸமஸ்த கிரந்தங்களையும் கிரஹித்து, ஸ்ரீலக்ஷ்மீ ஹயக்ரீவனுடைய மந்திரத்தையும் உபதேசம் பெற்று, ஸாக்ஷாத் ஸ்வாமியின் சிஷ்யரான பாதுகா ஸேவக ராமானுஜ ஸ்வாமியிடத்தில் ஸ்ரீபகவத்

விஷயத்தையும் கிரஹித்து 'உத்தர ஸாராஸ்வாதினி' என்ற பெயரிட்ட ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரவியாக்யானத்தை எழுதி ஆசாரிய ஸந்நிதியில் ஸமர்ப்பிக்க அக்கிரந்தம் ஸ்ரீதேசிகஸூக்திக்கு ஸத்ருசமாய் இருந்ததை கடாக்ஷித்து இவருக்குத் 'திருக் குடந்தை தேசிகள்' என்ற திருநாமத்தை அனுக்ரஹித்து "நீர் கிரஹஸ்தாச்ரமத்திலேயிருந்து கொண்டே ஆசாரியகம் செய்யலாம்" என்று நியமித் தருளினர்.

அவ்வாறே திருக்குடந்தை தேசிகளும் திருக்குடந்தை யிலேயே எழுந்தருளியிருந்து வழுத்தூர் வேதாந்த ராமானுஜ ஸ்வாமி, வத்திருயிருப்பு ஸ்ரீ ரெங்கநாத ஸ்வாமி, செய்யானம் ஸ்ரீநிவாஸ ஸ்வாமி என்ற 3 ஸந்யாஸிகள் முதலாழ்வார்கள் போன்று திருக் குடந்தை தேசிகளை ஆச்ரயித்து கிரந்த கால க்ஷேபம் செய்து வந்தார்கள். திருக் குடந்தை தேசிகள் அனுக்ரஹித கிரந்தங்களாவன (1) ஆஹ்நீகம் (2) நிக்ஷேப சிந்தாமணி (3) உத்தர ஸாராஸ்வாதினி (4) பல்லாண்டு, கண்ணி நுண் சிறுத் தாம்பு, வியாக்யானம் முதலியன. இம் மஹான் தனது அந்திமவயஸில் ஸந்யாஸாசிரமத்தை ஸ்வீகரித்து 'அபர் யாப்தாம்ருதன்' என்று திருநாமம்பூண்டு சில காலமே யெழுந்தருளியிருந்து திருக் குடந்தையிலேயே திருநாட்டை அலங்கரித்தார்.

## —வேதாந்த ராமானுஜ மஹாதேசிகள்—
## (வழுத்தூர் ஆண்டவன்)

இம்மஹநீய மூர்த்தியாவைர் வழுத்தூரில் நைத்ரவ காசய பகோத்ரததில் ருதிரோத்காரி ஆவணிப் பூரட்டாதி யில் ஸ்ரீநிவாஸாச்சார் ஸ்வாமி குமாராக அவதரித்து ஸர்வ சாஸ்திரங்களிலும் நிபுணராய் எழுந்தருளியிருந்த மாத் திரத்தில், அக்காலதில் திருகுடந்தையில் ஞான வைராக் யானுஷ்டான சிகாமணியாய் எழுந்தரு திரு குடந்தை தேசிகளைத்தான் ஆச்ரயிக்கச் சென்று அன்னவரை



9. ஸ்ரீரங்கம் ஆண்டவன் (வழுத்தூர்)
ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹா தேசிகன்
ஆவணி-மீ, பூரட்டாதி

"தீராவினைகள் தீர வென்னையாண்டாய் திருக் குடந்தை யூராய்" என்ற சடகோபனருளிச் செய்த பாசுரத்தை அனுஸந்தித்துக் கொண்டு அன்னவர் திருவடியை ஆச்ரயிக்கலானார். மேலும் திருக்குடந்தை தேசிகனுடைய பிரும்ம தேஜஸில் ஈடுபட்டு "தேவரீரே அடியேனை அடைக்கலப் பொருளாய் ஆட்படுத்தியாண்டாய் திருக்குடந்தை ஊரா' வென்று அடியேனை ஆட்கொண்ட ஆண்டவன் என்று மஹாபக்தியுடன் திருக்குடந்தை தேசிகனிடத்தில் இந்த சப்தத்தைச் சொல்லி அவருடைய அனுக்கிரஹத்துப் பாத்திரராக எழுந்தருளியிருந்த படியால் இவரையே முதல் முதலாக ஆண்டவன் என்ற திருநாமத்தைக் கொண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் அழைக்கத்துடங்கினார்கள். இம்மஹான் முதற்கொண்டு ஸ்ரீமதாண்டவன் ஸம்பிரதாயம் என்று ஓர் விலக்ஷணமான திரு நாமம் ஏற்பட்டது. மேலும் வழுத்தூர் ஆண்டவன் திருக்குடந்தை தேசிகனை ஆச்ரயிக்கப்போவதற்கு முன்பேயே ஸந்யாஸாசிரமத்தை பாதுகா ஸேவகராமானுஜ மஹாதேசிகனிடம் ஸ்வீகரித்துக் கொண்டுதான், கிரஹஸ்தராகிய திருக்குடந்தை தேசிகனை ஆச்ரயிக்கச் சென்றார் என்ற விஷயம் குறிப்பிடத்தக்கது. இவர் வெகுகாலம் ஸ்ரீரங்கத்திலிருந்தே ஸித்தாந்த பிரவசனம் செய்து கொண்டு எழுந்தருளியிருந்தபடியால் ஸ்ரீரங்கம் ஆண்டவன், என்றும் திருநாமம் உண்டு. இவருடைய ஸ்ரீபாதத்தை ஆச்ரயித்தவர் ஸ்ரீநிவாஸராமானுஜ மஹாதேசிகன் முதலியோராவார்.

## ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீநிவாஸராமானுஜமஹா தேசிகன்
## (திருத்துரைப்பூண்டி)

இந்த ஆண்டவன் ஈயுண்ணிபாரத்வாஜ கோத்திரத்தில் அவதரித்து ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருந்த வேதாந்த ராமானுஜ மஹாதேசிகனிடத்தில் ஸர்வசாஸ்திரங்களையும் அப்யஸித்து அன்னவரிடமே ஸந்யாஸாசிரமத்தையும் ஸ்வீகரித்து மிகவும் ஞானவைராக்ய நிஷ்ட

ராய் கொள்ளிடக்கரையில் பரம்பரையாய் ஸந்யாஸிகள் வஸித்து வந்த மிகவும் பரிதாபகரமான நாணல் குடிசையில் எழுந்தருளியிருந்துக்கொண்டு ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன் போன்ற ஸச்சிஷ்யர்களுக்கு கிரந்த பிரவசனம் செய்து கொண்டு எழுந்தருளியிருந்தார்.

## பெரியாண்டவன்—ஸ்ரீநிவாஸமஹாதேசிகன்

பெருமாள் கோவிலில் சாண்டில்ய கோத்ரத்தில் ஸாம சாகையில் (திவாப்ரதீபம்) பகல் தீவிட்டியார் என்ற விருதோடுகூடியவராயும் சதுச்சாஸ்திர வித்வான், ஸுதர்சன வித்யோபாஸகரான ஸ்ரீகிருஷ்ணமாச்சாரியார் என்ற மஹநீயருடைய திருக்குமாரராக கலி 4900க்கு மேல் ரௌத்ரி கும்ப-சுக்லத்ரயோதசியில் ஸ்ரீமத் புஷ்ய நக்ஷத்திரத்தில் ஸ்ரீநிவாசராகவாச்சாரியார் என்ற திருநாமம் பூண்டு திருவவதாரம் செய்தருளினர்

இம்மகான் அவதரித்த போதே இவருடைய சிரஸில் சக்ரரேகை ஒன்று ஸ்பஷ்டமாகத் தோன்றியிருந்ததால் அநேக ஸாமுத்ரிகாலக்ஷணத்தை நன்கறிந்த சில சாஸ்திரிகள் இவர் ஓர் மஹத்ஸம்பிரதாய சக்ரவர்த்தியாயெழுந்தருளி யிருப்பார் என்று கொண்டாடும்படியாய் யிருந்தார்.

இவருடைய திருத்தகப்பனர் இம்மகானுக்கு ஸகாலத்தில் உபநயநம் பஞ்சஸம்ஸ்காரம், ஸுதர்சன மந்திரோபதேசம் முதலிய ஸம்ஸ்காரங்களை செய்து வைத்துப்பின்பு ஸாமஸாகையை அத்யயனம் செய்யும்படி ஏற்பாடு செய்தார். இவ்வாறு அத்யயனம் ஸாங்கமாக முடிந்தபின்பு ஸ்ரீகிருஷ்ணமாச்சாரியார்ஸ்வாமி தன் குமாரராகிய ஸ்ரீநிவாஸராகவாச்சாரியாரையும் தனது தர்ம பத்தினியையும் அழைத்துக்கொண்டு பல திவ்ய க்ஷேத்ரங்களையும் தர்சிக்க எண்ணி ஒரு ஸமயம் திருக்குடந்தைக்கு எழுந்தருளி ஸ்ரீஆராவமுதனை மங்களாசாஸனம் செய்து விட்டு பிரதக்ஷிணமாக எழுந்தருளும் காலத்தில் அங்கோர் ஸ்ரீவைஷ்



10. ஸ்ரீ பெரியாண்டவன்

(ஸ்ரீநிவாஸ மஹா தேசிகன்)

மாசி-மீ புஷ்யம்

ணவ தமிழ் வித்வான் (ஸ்ரீராகவாச்சார்) இவர்களுடைய தேஜஸில் ஈடுபட்டு அவர்களைத் தம்குடிசைக்கு அழைத்துச் சென்று ஸத்கரித்து சிலகாலம் தம் கிருஹத்திலேயே ஸ்ரீகிருஷ்ணமாச்சாரியாரை ஸ்ரீபாகவதபிரவசனம் செய்தளுரும்படி கேட்டுக்கொண்டதன்பேரில் ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியார்ஸ்வாமியும் ஸமஸ்த ஜனங்களையும் ஆகர்ஷிக்கும்படியான ஸ்ரீபாகவதத்தை பிரவசனம் செய்துவிட்டு ஊருக்கு எழுந்தருளும்போது தம்மிடம் அவருடைய குமாரர் ஸ்ரீநிவாஸராகவாச்சாரியாரைத் தம்மிடம் விட்டு வைத்திருக்கும்படி கேட்டார், ஏனெனில் சிற்சில ஸமயங்களில் ஸ்ரீநிவாசராகவாச்சாரியாருடை குயிலினுமினிய குரல் வாய்ந்த ஸாமகானத்தையும் கேட்டு இவருக்குத் தமிழ் இலக்கிய இலக்கணங்களை சிக்ஷைசெய்து வைத்தால் உபகாரமாயிருக்கு மென்று எண்ணி அவ்வாறு பிரார்த்தித்தார். இவருடைய கருத்தை தெரிந்து ஸ்ரீகிருஷ்ணமாச்சாரியாரும் தம்திருக் குமாரரை அவரிடமே விட்டுச் சென்றார்.

இவ்வாறு ஸ்ரீமான் ராகவாச்சாரியாரிடம் தமிழ் வித்யையைக் கற்றுக் கொண்டு எழுந்தருளியிருக்கும்போது தன் பிதாவிற்கு சிரமதசை ஏற்பட்டதென்று தெரிந்து அங்குசென்று சிறியதோர்காலத்துக்குள் திரு நாட்டுக்குச் சென்ற தன் பிதாவிற்கு சரமகைங்கரியங்களை முடித்துவிட்டுப் பின்புத் தன் பெரிய தகப்பனரிடம் காவ்யதர்க்க வியாகரணமீமாம்ஸாசாஸ்திரங்களை நன்ருய் சிக்ஷைகற்றுப் பின்பு நாவல் பாக்கம் ஸ்ரீகுமார தாத்தாசாரியாருடைய கன்னிகையை மணம்புரிந்து, உஞ்சவிருத்தி செய்து கொண்டு தமது ஜீவனேபாயத்தைச் செய்து வந்தார்.

சிறியதோர் காலஞ்சென்ற பின்னர் ஸ்ரீநிவாஸராகவாச்சாரியார், தமது ஆத்மாவை உஜ்ஜீவிக்கச் செய்யும் ஓர் ஸதாச்சாரியரை ஆச்ரயிக்க வேணுமென நினைத்து உடனே ஸ்ரீரங்கம் சென்று வந்து ஞான வைராக்ய நிஷ்ட

ரான ஸ்ரீரங்கம் ஆண்டவன் ஸ்ரீவேதாந்த ராமானுஜஸ்வாமியிடம் சரணாகதிக்குப் பிரார்த்தித்தார். அந்த ஸ்ரீரங்கம் ஆண்டவனும், 15 வயதில் ஸ்வரூப ஞானம் ஏற்பட்டு சரணாகதிக்குப் பிரார்த்திக்கிற அதிசியத்தைக்கண்டு திருவுள்ளமுகந்து ஸ்ரீரங்கம் பெரியபெருமாள் ஸந்நிதியில் பரஸமர்ப்பண (சரணாகதி) த்தைச் செய்து வைத்தருளினார் இவ்வாறுஸ்வாமியும் கிருதார்த்தராய் ஸ்ரீரங்கம் ஆண்டவனிடம் விடைபெற்றுக்கொண்டு காஞ்சீபுரத்துக்கு எழுந்தருளி சிறிது காலமே தங்கியிருந்து தாம் இதுவரை அப்யஸித்து ஸம்ரக்ஷித்து வைத்திருந்த முக்கியமான ஸ்ரீகோசங்களை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு மறுபடியும் ஸ்ரீரங்கம் ஆண்டவனிடத்தில் உபய வேதாந்தங்களையும் சிக்ஷித்தருளவேணும் என்று பிரார்த்தித்தார். ஸ்ரீரங்கம் ஆண்டவனும் தமக்கு வயோதிகமானதைப்பற்றி தன்னை ஆச்ரயித்து ஸந்யாசாஸ்ரமத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீநிவாஸராமானுஜ மஹாதேசிகனிடத்தில் இந்த சிஷ்யரை ஒப்புவித்து "உமக்கு நல்ல உத்தமமான சிஷ்யா ஒருவர் வந்து சேர்ந்திருக்கிறார் அவருக்கு ஸ்வரூப ஞானங்களை சிக்ஷை செய்து ஏற்பாடு செய்யும்" என்று நியமிக்கவே 'ஸ்ரீநிவாஸராமானுஜ மஹாதேசிகனும் அந்த தேஜஸ்வியான சிஷ்யருக்கு ப்ரவசனம் செய்யத்தகுந்த ஞானசக்திகள் அடியேனிடத்தில் இல்லையே என்று பிரார்த்திக்கவே, 'அப்பா! உன்னிடம் நான் இப்போதே அனுப்ர்வேசித்திருக்கிறேன்; நீ நன்றாய் பிரவசனம் செய்யலாம் என்று அனுக்ரஹித்தார். இதைக் கொண்டுதான் "அம்சதோனுப்ரவிஷ்ட:" என்ற விஷயத்தை தனியனில் காணலாம்

இதற்குமேல் ஸ்ரீநிவாஸராமானுஜ மஹாதேசிகனும் நம் ஸ்வாமிக்கு ஸ்வரூபகிரந்தங்களை நன்றாய் சிக்ஷை செய்து வைத்தருளினார். இவ்வாறு சிக்ஷை பெற்றுக்கொண்ட பின், பின்னும் மன்னார்குடிக்குச் சென்று வித்வான்

ஸ்ரீஉப. வெ. கோபாலாச்சாரியாரிடம் வியாகரண சாஸ்திரத்தில் பூர்ண பிரக்ஞை யடைந்தார்.

அடுத்தபடியாக நம்ஸ்வாமியானவர் ஸம்ஸாரத்தில் முற்றும் பற்றற்று ஸந்யாஸாசிரமத்தைக் கைக்கொள்ள எண்ணம் கொண்டு மறுமுறை காஞ்சீ எழுந்தருளி சென்று ஸந்நிதிக்குச் சென்று ஸ்ரீவரதராஜனுடைய திருவடிகளில் தமது மனோரதங்களை விக்ஞாபித்து ப்பிரார்த்தனை செய்து நிற்கவே அப்போதொரு தேஜஸ்வியான மஹா புருஷன் தோன்றி "ஸ்வாமின்! தேவரீர் ஒரு பரமஹம்ஸ சக்ரவர்த்தியாய் எழுந்தருளி ஸமஸ்தலோகங்களையும் உஜ்ஜீவிக்கச் செய்யப் போகிறீர்" என்று விடை கொடுத்து அங்ஙனமே மறைந்தார்.

உடனே நமது ஸ்வாமியும் உள்ளம் பூரித்து ஸ்ரீவரதராஜனுடைய க்ருபையை சிரஸால் வஹித்து பின்னும் ஸ்ரீரங்கம் கொள்ளிடக்கரையில் ஆசிரமத்தில் பிரும்ம ரிஷி துல்யராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹாதேசிகனிடத்தில் ஸந்யாஸாசிரமத்தை அனுக்ரஹிக்க வேண்டுமெனப் பிரார்த்தித்தார். உடனே அன்னவரும் நம் ஸ்வாமி ஸரியான அதிகாரியாயிருந்தாலும் சற்றுப்பரீக்ஷிக்கத்துடங்கினர். அக்காலத்தில் ஸ்ரீநிவாஸராகவாச்சாரியாருடைய மாதாவும் தேவிகளும் இவரைப்பல இடங்களிலும் தேடிக்கொண்டு கடைசியாய் கொள்ளிடக்கரையில் இருப்பதுத்தெரிந்து வந்து தமது பரிதாபகரமான தைன்ய தசையை ஸ்ரீநிவாஸராமானுஜ மஹாதேசிகனிடத்தில் முறையிடவே; அந்த ஸ்வாமியும் ஸ்ரீநிவாஸராகவாச்சாரியஸ்வாமியை அழைப்பித்து 'நீர் உமது தர்மபத்தினியிடம் இல்லறத்தில் ஒரு தர்ம பிரஜை பிறக்கும்வரை அவருடன் இருந்துவிட்டு பின்பு ஸந்யாஸத்தைக்கைக் கொள்ளலாம் என்று சொல்லி திரும்ப காஞ்சீபுரத்துக்கு அனுப்பித்து விட்டார்.

பின்பு நமது ஸ்வாமியும் தனது திருத்தாயாரையும் தேவிகளையும் அழைத்துக் கொண்டு காஞ்சீபுரம் சென்று க்ரஹஸ்தாசிரமத்திலேயே சிறிது வருஷங்கள் தங்கியிருந்தார்.

அக்காலத்தில் இம் மஹானுக்கு ஒரு ஸ்திரீ ப்ரஜை ஜனித்தது. இவ்வாறு ஜனித்து விருத்தி கழிந்தவுடனேயே நம் ஸ்வாமியானவர் மிகவும் விரக்தியுடன் ஸம்ஸாரத்தை விட்டு அகல நினைத்து ஒரு நல்லநாள் பார்த்து ஸ்ரீரங்கத்துக்கு எழுந்தருள ஸித்தராயிருந்தார். அக் காலத்தில் இவருடைய திருத் தாயார் வழியில் நின்று கண்ணும் கண்ணீருமாய், "அப்பா! மிகவும் வயது சென்றதால் வ்யாகுலத்தை அடைந்து ஒத்தாசைக்கும் ஆறுதல் சொல்லவும் ஒருவருமில்லாமல் திக்கற்று நிற்கின்ற என்னை விட்டு அகல்வது ஸரியென்று சொல்லுகிற சாஸ்திரமும் உண்டோ என்று வினவ, நம் ஸ்வாமியும் அவளை பிரணாமம் செய்து அஞ்சலியுடன்" அடியேன் லோக க்ஷேமார்த்தமாச் செல்லுகிறபடியால் தடங்கல் செய்யாதீர். என் தம்பி உமக்கு வேண்டிய ஒத்தாசை செய்வான். மற்றொன்றும் சொல்லுகின்றேன். "அடியேன் ஸ்ரீரங்கத்துக்குப் புறப்படும்போது சுப நிமித்தங்கள் தோன்றுவிடில் தங்களோடேயே தங்கி இருந்து விடுகிறேன்" என்று சொல்லிவிட்டு ஸ்ரீவாத ராஜனை த்யானம் பண்ணிக் கொண்டு புறப்படவே, ஆகாயத்தில் இரண்டு கருட பக்ஷிகள் கம்பீரத்வனி செய்து கொண்டு வட்டமிட்டுச் செல்லவே நம் ஸ்வாமியும் இவ்விஷயத்தைத் தன் அருமைத் தாயாருக்குக் காட்டிவிட்டு அன்னவரிடமே நல்ல ஆசீர்வாதம் பெற்றுத் திருவரங்கம் நோக்கிச் எழுந்தருளினர்.

சில நாட்களாய் பாதசாரியாக ஸ்ரீரங்கம் சென்று கொள்ளிடக் கரையில் ஏகாந்தமாய் வஸிக்கின்ற ஸ்ரீனிவாஸ ராமானுஜ மஹாதேசிகனை விதிப்படி பிரணாமம் செய்து தனது நிலைமையை விண்ணப்பம் செய்யவே அந்த மஹா

தேசிகனை விதிப்படி பிரணமம் செய்து தனது நிலைமையை விண்ணப்பம் செய்யவே அந்த மஹானும் ஸ்ரீனிவாஸராகவாச்சாரியார் ஸ்வாமிற்கு ஸந்யாஸாசிரமத்தை அனுக்ரஹித்து "ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன்" என்று திரு நாமஞ் சாற்றியருளினர். இப்போது ஸ்ரீநிவாஸ மஹாதேசிகனுக்கு 30 திரு நக்ஷத்திரங்களாயிருந்தன.

இவ்வாறு ஸந்யாஸாசிரமத்தை ஸ்வீகரித்துக் கொண்டு மிகவும் ஞான வைராக்யானுஷ்டானத்துடன் வஸித்துக் கொண்டு, மத்தியான காலத்தில் ஒரே ஒரு தடவை ஸ்ரீ. உ.வே. ஸ்வச்சின்னம் நரஸிம்மாச்சார் போன்ற பரமேகாந்திகளுடைய கிரஹத்தில் சென்று மாதுகரத்தை கிரஹித்து அப்பிரஸாதத்தை காவேரி தீர்த்தத்தில் நன்றாய் அலசிவிட்டு பெரிய பெருமாளுடைய துளஸீதளங்களை வ்யஞ்சனமாக வைத்து ஸ்வீகரித்துக் கொண்டு 5 வருஷ காலமாக ஆகாரத்தைக் குறைத்துக் காயக்லேசம் பண்ணித், தன் சரீரத்தை யோக சரீரமாகச் செய்து வெய்யில், காற்று மழை, பனி, ஒன்றுக்கும் விகாரமடையாதபடி உத்தம மஹரிஷிகளைப்போல் தந்தேஹத்தை யோக தேஹமாகச் செய்து கொண்டு எழுந்தருளியிருந்தார்.

சில வருஷ காலத்திற்குப் பின்பு ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹாதேசிகன் திருநாட்டை அலங்கரித்த பிறபாடு ஸ்ரீநிவாஸமஹாதேசிகனுடைய அப்ராக்ருதமான யோக சரீரத்தின் திவ்யதேஜஸ்ஸையும், எல்லையற்ற ஞான வைராக்யானுஷ்டான ஸம்பத்தையும் ஸேவித்து ஸ்ரீமத் தாதாசாரியவம் சத்திலும பாட்டராசாரியார் ஸ்வாமி வம்சத்திலும், மேலும் மஹத்தான ஸ்ரீமதாசார்ய புமான்களும் ஸ்ரீநிவாஸ மஹாதேசிகனுடைய திருவடி மலரை ஆச்ரயிக்கப் பிரயத்தினப்பட்டார்கள்.

ஸ்ரீநிவாஸ மஹாதேசிகனுடைய திருவடியில் ஆச்ரயிப்பது என்பது மிகவும் ஸுலபமன்று. ஆகையால் அம்

மஹானுடைய பரீக்ஷையில் உத்தீர்ணரானவர்களே ஆச்ர யிக்க முடிந்தது. இப்படி சதுச் சாஸ்திர மஹா பண்டிதர் களாய் பரமேகாந்திகளான அநேக சிஷ்யர்கள் ஸ்ரீமதாண்ட வனுடைய ஸ்வரூபகிரந்த காலக்ஷேப சாதுர்யத்தையும் பரிசுத்தமான ஆசாரத்தையும் சுத்த ஸ்த்வமான வைராக் யத்தையும் பெரிய பெருமாளிடத்தில் ஊன்றியுள்ள பரம பக்தியையும் வாத்ஸல்யம் தயை முதலான விலக்ஷணமான கல்யாண குணங்களேக் கண்டும் ஆழ்வார், ஸ்ரீபாஷ்யகாரர், தேசிகன் முதலானவர்களுடைய ஸ்ரீஸூக்தி ஹ்ருதயத்தை தம் ஆச்சாரியர்களுடைய கடாக்ஷ விசேஷத்தால் அனுக் ரஹிக்கப்பட்டு ப்ரவசனம் பண்ணுகிற நைபுண்யத்தையும் கண்டு தமது ஆசார்ய பும்ஸ்த்வத்தை விட்டு விட்டு இவரிடமே பஞ்சஸம்ஸ்காரம், பரந்யாஸம், கிரந்த கால க்ஷேபம் முதலியவைகளே அந்வயித்து க்ருதார்த்தரானூர் கள். மேலும் இந்த ஆண்டவன் ஸ்ரீநிவாஸ மஹாதேசி கனுடைய திருநாமத்தை ஆவ்ருத்தி செய்தவர்கள் பலர் தங்களது அநிஷ்ட நிவ்ருத்தியையும் இஷ்டப்ராப்தியை யும் அடைந்தமை கண்டு தங்களது குலதெய்வமாக உபா ஸிக்கத் துடங்கினூர்கள்.

இவ்வாறு ஆச்ரயித்த உத்தம சிஷ்யர்களின் திரு நாமத்தை இங்கு குறிப்பிடுகிறோம். வேணிய நல்லூர் ஸ்ரீஉபவே, சங்கபுரம் ஸ்ரீநிவாஸராகவாச்சார் (சின்னுண் டவன்) ஸொச்சன்னம் கைங்கரியம் ஸ்ரீநரஸிம்மாசார் ஸ்வாமி, திருப்புட்டுழி ஸ்வாமி, ஸ்ரீகிருஷ்ண தாத்தாச்சாரி யார், சம்பகாரண்யவாஸி வ்யாகரண வித்வான் ரங்காச்சார். சதுச்சாஸ்திர வித்வான் மன்னூர்குடி ஸ்ரீராஜகோபாலச்சார்

மன்னூர்குடி வித்வான் ஸாமி ஆச்சார். ஸ்ரீவில்லிபுத் தூர் வித்வான் பரவஸ்து வெங்கடாச்சார், வங்கிப்புரம் வஜ்ர கண்டம் ஸ்ரீநிவாஸாச்சார், சுண்டப்பாளேயம் ஸ்ரீராம பத்திராச்சார், திருக்குடந்தை சின்னம்மு ஸ்ரீரங்கனுத

பாட்ட ராச்சார், திருச்சிறை வித்வான் தாத்தாச்சார், திருக்குடந்தை அக்னிஹோத்ரம் ஸ்ரீநிவாஸ தாத்தாச்சார், ஸ்ரீரங்கம் ஸப்தக்ருஹம் தாத்தாச்சார், மீஞ்சல் வித்வான் நரஸிம்மாச்சார், கோபாலஸமுத்ரம் வித்வான் நாராயணாச்சார். திருவஹீந்திரபுரம் அஷ்டாவதானம் அனந்தாச்சார் (திருக்குடந்தை ஆண்டவன்), மஹாவைராக்யநிஷ்டர் ஸ்ரீநாராயண ஸ்வாமி, கொடியாலம் மஹோதாரப்ரபு ஸ்ரீமான் சேஷாத்ரி ஐயங்கார் ஸ்வாமி, விளக்குடி வித்வான் வேதாந்தாச்சார் மேளப்பாளயம் சடாதூர் ஸ்ரீரங்காச்சாரியர் முதலியோர்.

இந்த ஆண்டவனுடைய சரித்திரத்தில் நடந்த விருத்தாந்தங்களையும் விவித ஆச்சரிய சேஷ்டித ஸ்பாவங்களையும் முன்னோர் பலர் ஆசை கொண்டு வடமொழியிலும் தென் மொழியிலும் எழுதியுள்ளார். துர்வாதிகளுக்கு ஆண்டவனிடத்தில் வாதம் செய்ய ஆசையுண்டு ஆனால் இம் மஹானிடத்தில் அபசாரப்பட்டால் என்னகதி நேருமோ வென்று ஸிம்ம ஸ்வப்நம் கண்ட யானைகள்போல் நடுங்கி ஓடிப்பதுங்கிக் கொண்டார்கள்.

ஒரு ஸமயம் உத்தர பாரத தேசத்திலிருந்து 'தார்க்க சூரமஹா' பண்டிதர், கோவர்த்தனம் ஸ்ரீரங்காச்சார ஸ்வாமி யானவர் தக்ஷிண தேசத்திலுள்ள திவ்விய க்ஷேத்ரங்களை தரிசனம் செய்ய உத்தேசித்து அநேக க்ஷேத்திரங்களிலுள்ள எம்பெருமானை எல்லாம் மங்களாசாஸநம் செய்து கொண்டு கடைசியாக ஸ்ரீரங்கத்துக்கு எழுந்தருளி வந்தார். இவ்வாறு எழுந்தருளின விடத்தில் பெரிய பெருமானை மங்களாசாஸனம் செய்து விட்டு ஸ்ரீரங்கத்திலுள்ள ஸ்ரீவைஷ்ணவர்களோடு ஸம்பாஷித்துக் கொண்டிருக்கையில் இவ்விடம் வேதாந்தத்தில் வாக்யார்த்தம் செய்பவர் எவருமுண்டோ,, என்று வினவ, அங்குள்ளவரும் கொள்ளிடம் கரையில் "ஸ்ரீமதாண்டவன்" என்ற பரமஹம்ஸர் ஒருவர் எழுந்தருளியுள்ளார் அன்னவரிடம் வாக்யார்த்தம் செய்ய

லாம் என்று ஸாதித்தார்கள். அதைக் கேட்டு மஹாரஸிக ராயும் ப்ராமாணிகராயுமுள்ள அவ் வித்வான் ஸ்ரீமதாண்டவன் எழுந்தருளியிருக்கும் ஆசிரமத்தைக் கிட்டி பிரணமம் பண்ணி ஸம்பாஷித்துக் கொண்டிருக்கும் அவஸரத்தில் தாம் வாக்யார்த்த விசாரத்திற்காக வந்ததைத் தெரிவித்தார். உடனே ஸ்ரீமதாண்டவனும் மிகவும் ஸந்தோஷத்தோடு வரவேற்று "இன்று ஏகாதசி, நாளை துவாதசி ஆகையால் இரண்டு நாட்களும் கழித்து எள்ளலாம், நம் சிஷ்யரோடு வாக்யார்த்தம் செய்து ஆனந்திக்கலாம்" என்றருளினதைக் கேட்டு அன்று எழுந்தருளி வந்தார். இதற்குள் மன்னார்குடி வியாகரணம் சதுர்தசலக்ஷணி ரங்காச்சாரியாருக்கு நியமனம் செய்தருள அன்னவரும் அன்றிரவே விரைந்தோடி வந்து ஆரமத்தைக் கிட்டித்தம்மை அடியேன் உகாராந்தம் (ரங்கு) பிரணமம் செய்கின்றேன் என்று அறிவிக்கவே, இன்று ஒரு தர்க வித்வானோடு வாக்யார்த்தம் செய்ய வேணும் என்று நியமித்தருள, ஸ்ரீரங்காச்சாரியாருக்கும் ஸ்ரீகோவர்த்தனச்சாரியாருக்கும் அதிவிசித்ரமான வாக்யார்த்தம் நடந்தது. பலரும் ஸந்தோஷித்தார்கள். இருந்தாலும் கோவர்தனம் ஸ்வாமி குணபக்ஷ பாதியான மஹாப்ராமாணிகராதலால் தாம் இன்னும் ரங்காச்சாரியாரிடத்தில் சிக்ஷை பெற வேண்டிய பாகமுண்டு என்று வியாகரணம் ரங்காச்சாரியாரை ஸ்ரீமதாண்டவனிடம் நியமனம் பெற்று அழைத்துப் போய் மேலும் கற்க வேண்டிய பாகங்களை ஒரு வருஷ காலம் கற்றுக் கொண்டிருந்துவிட்டு வெகுவாக ஸ்ரீரங்காச்சாரியார்ஸ்வாமிக்கு ஸம்மானம் செய்தனுப்பி வைத்தார். இவ்வாறு தம்மை ஆச்ரயித்த ஸச்சிஷ்யர்களுக்கு ஆசார்யகம் செய்து கொண்டு (55 சாதுர்மாஸ்யங்கள்) 85 திருநக்ஷத்திரங்கள் வரை ஸ்ரீரங்கம் கொள்ளிடக்கரையில் வஸித்துவந்தார்.

இதற்குள் இம்மஹான் பாதசாரியாய் பல ஜீவகோடிகளை உஜ்ஜீவிக்கச் செய்வதற்காக எழுந்தருளின யாத்ரா

ஸ்தலங்களாவன: திருக்குடந்தை, மன்னார்கோயில், வடுவூர் சுண்டப்பாளையம், காஞ்சீபுரம், மைசூர், ஹெம்பிகை முதலான திவ்ய தேசங்களாம்.

கடைசியில் சிலகாலம் அசக்தியாயெழுந்தருளியிருந்த ஸமயத்தில் தன்னை வந்து அநந்யகதியாய் ஆச்ரயித்த ஞான, வைராக்யானுஷ்டான சிகாமணியாகிய வேளியநல்லூர் சங்கபுரம் மஹானுபாவர் ஸ்ரீநிவாஸராகவாச்சாரியாரை ஆச்சாரியகம் செய்யும்படியாய் நியமித்து அன்னவருக்கே ஸந்ஸ்யாசிரமத்தையும் ஸ்ரீபாதுஸேவகராமானுஜ மஹாதேசிகன் என்ற திருநாமத்தையும் தந்தருளி ஆறு மாத காலம் அசக்தராய் எழுந்தருளியிருந்தார். இச்சமயம் ஸ்ரீநிவாஸ மஹாதேசிகனுக்குப் "பெரியாண்டவன்" என்ற திருநாமத்தாலும் ஸ்ரீபாதுகா ஸேவக ராமானுஜ மஹாதேசிகனை சின்னாண்டவன் என்ற திருநாமத்தாலும் சிஷ்யகோஷ்டிகள் வ்யவஹரிக்கத் துடங்கினார்கள். இவ்வாறு ஸமஸ்த ஸ்ரீவைஷ்ணவர்களாலும் புகழப்பெற்று ஸுபானு-வருஷம் தை-மீ கிருஷ்ண த்ரயோதசியில் திருநாட்டை அலங்கரித்தார். இவருடைய ஆச்சர்யவைபவத்தைப்பற்றிய சரித்திரம் சுண்டப்பாளையம் வித்வான் ஸ்ரீராமபத்ராச்சாரியரால் "யாத்ராவிலாஸம்" என்ற ஸ்ரீகோஸத்தில் வரையப்பட்டுள்ளது.

## ஸ்ரீமச்சின்னண்டவன்

### பாதுகாஸேவக ராமானுஜ மஹாதேசிகன்

ஸ்ரீராமானுஜ யோகீந்த்ர ஸித்தாந்த விஜயத்வஜரான இம்மஹானுபாவர் வேளியநல்லூரில் சடமர்ஷணகோத்ரத்தில் ஸ்ரீ கிருஷ்ண தாத்தாச்சாரியாரின் குமாரராக ஸ்ரீநிவாஸராகவாச்சாரியார் என்ற திருநாமத்துடன் ஸர்வதாரி வருஷம் கார்த்திகை மாதம் மக நக்ஷத்திரத்தில் அவதரித்தருளினார். பின்பு தம் திருத்தகப்பனரிடம் உபநயனம் பஞ்ச ஸம்ஸ்காராதிகளை அடைந்து பின்பு அக்கிராமத்தி

லேயே இருந்துகொண்டு ஸாங்கமாக வேதாத்யயனம்செய்து காவ்ய சாஸ்திராதிகள் எல்லாவற்றிலும் நைபுண்யத்தை யடைந்து பின்பு மைசூர் ஸமஸ்தான வித்வான் ராம சாஸ்திரிகளிடத்தில் பூர்ணமாக தர்க்க சாஸ்திரத்தையும் அத்வைத பரிபாஷையும் அப்யஸித்து தர்க்க ஸிம்மமாக எழுந்தருளியிருந்தார். பின்பு தமது ஸ்ரீ கிராமத்துக்கு எழுந்தருளி சிலகாலம் தங்கிவிட்டு அனந்தரம் ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீநிவாஸ மஹாதேசிகனிடம் சென்று அன்னவரிடம் ஸகல வேதாந்தார்த்தங்களையும் பகவத் விஷயார்த்தங்களையும் கிரஹித்துப் பின்பு வேளியநல்லூரில் சிறிதுகாலமே எழுந்தருளியிருந்தார்.

இக்காலத்தில் எல்லாம் ஸம்ஸாரத்தில் மஹாவிரக்தி யுடன் இருந்துவிட்டுப் பின்னும் ஸந்யாஸத்திலேயே லக்ஷ்யம் கொண்டு ஸ்ரீரங்கத்தில் பெரியாண்டவனை ஆச்ர யித்து பிரணும் செய்கின்றபோது பெரியாண்டவன் 84 திருநக்ஷத்திரங்களால் பூர்ணமாகி தள்ளாத பர்வத்தில் எழுந்தருளி யிருந்தபடியால் ஸ்ரீநிவாஸ ராகவாச்சார் ஸ்வாமியை குளிர கடாக்ஷித்து “அப்பா! நீ இப்போது எப்படி வந்திருக்கிறுய்” என்று பிரச்னம் பண்ணவே அந்த மஹானும், “பரித்யக்தாமயாலங்கா” என்றும் த்யக்த்வா புத்ராம்ச்சதாராம்ச்சத்வாமேவ சரணம் கத:” என்று ஸாதிக்கவே, அநேக நாளாக மழையில்லாமல் வாட்ட மடைந்த பயிர் வர்ஷத்தைப்பெற்று குதூகலிக்குமாப்போல் ஸ்ரீ பெரியாண்டவனும் இந்த ஸ்வாமியினுடைய ‘ஞான வைராக்யம் பொருந்திய அம்ருத வாக் வர்ஷத்தை சிரவணம் செய்து குதூஹலித்து ஓர் ஸுதினம் பார்த்து ஸந்யாசிர மத்தை ஸம்பிரதாய ஸ்தாபனத்துக்கு உசிதமாயும் ஞான வைராக்யானுஷ்டான நிதியாயும் நின்ற இம்மகானு பாவரிடத்தில் நிர்வஹிக்கவும், துரியாசிரமத்தை ஸாதித் தருளித் தன்னைச்சரிதார்த்தராக எண்ணிக் கொண் டார். அன்று முதல் சிஷ்யர்கள் எல்லோரும் பெரி



11. ஸ்ரீ சின்னண்டவன் - பாதுகா ஸேவக
ராமானுஜ மஹா தேசிகன்
கார்த்திகை-மீ மகம்

யாண்டவன், சின்னாண்டவன் என்ற வ்யவஹாரத்துடன் இருவரையும் மிகவும் சந்துஷ்டியுடன் பஹுமானிக்கத்துடங்கினர். மேலும் பெரியாண்டவன் திருநாட்டை அலங்கரித்த பிற்பாடு ஸ்ரீமதாண்டவன் ஸம்பிரதாயத்துக்கு விஜயத்வஜராய் எழுந்தருளியிருந்து ஸம்பிரதாய ஸ்தாபனத்துக்குரிய (1) ஆஹ்நீகார்த்த பிரகாசிகை (2) ஜயந்தீ நிர்ணயம் (3) உத்யாசார்ய நிஷ்டாவிசாரம் (4) ஸத்பத ரக்ஷை (5) ஜன்மாஷ்டமி நிர்ணயம் (6) தத்க்ரதுந்யாய விசாரம் (7) ஆசார்ய ஸம்பாவனக்ரமம் (8) யதிதர்மஸமுச்சயம் ஆசௌச ஸங்கிரஹம் முதலிய கிரந்தங்களை அனுக்ரஹித்தருளினர்.

இவ்வாறு துர்வாதிகளுடைய வாழ்வையறுக்கக்கூடியதும் ஸ்ரீமதாண்டவன் ஸத்ஸம்பிரதாய விஜயத்வஜரூபமான ஸ்ரீகோசங்களை அனுக்ரஹித்தருளினர். இம்மஹானுபாவரை ஆச்ரயித்த மஹான்கள்:—தேரெழுந்தூர் வித்யாநிதியான ஸ்ரீவரதாச்சார் ஸ்வாமி, ஸ்ரீவில்லிபுத்தூர் அம்மாளாச்சார் ஸ்வாமி, உக்கூர் வித்வான் ஸ்ரீநிவாஸராகவாச்சார் ஸ்வாமி, ஆக்கூர் ஸ்ரீநிவாஸாச்சார் ஸ்வாமி, தென்பிரை ராமபத்தி ராச்சார்ஸ்வாமி.

ஸ்ரீமச்சின்னாண்டவன் மேலும் ஸ்ரீரங்கத்திலிருந்து யாத்திரையாய் எழுந்தருளி காஞ்சீபுரம் வரை சென்று ஆங்காங்கு ஸம்பிரதாய ப்ரவசனம் பண்ணிக்கொண்டு மறுபடியும் திருவரங்கத்துக்கே எழுந்தருளிவந்து தமது 68-வது திருநக்ஷத்திரத்தில் விஜய வருஷம் தை மாதம் சுக்ல ஸப்தமி திதியில் திருநாட்டை அலங்கரித்தனர்.

## ஸ்ரீநிவஸ ராமானுஜ மஹாதேசிகள்
## (திருக்குடந்தை ஆண்டவள்)

இவ்வாறு ஸ்ரீமச்சின்னாண்டவன் திருநாட்டை அலங்கரித்த பிற்பாடு ஸ்ரீமதாண்டவனுடைய ஸம்பிரதாய


ப்ரவர்த்தகர்கள் ஒருவருமில்லை. காசு பணம் என்ற வார்த்தைக்கே இடமில்லை. ஞானவிரக்தி நிதிகளாயிருந்து கொண்டு ஸம்பிரதாயத்தை ஸ்தாபிக்க ஒரு வ்யக்தியும் அகப்படவில்லை. ஸுமார் 12 வருஷங்களாகியும் அநேக விதமான விக்னங்களால் ஆச்ரமஸ்வீகாரம் செய்துகொள்ள ஒரு பரமைகாந்தியும் முன்வரவில்லை. இப்படி இருக்கும் போது பின்னும் இந்த ஆண்டவனுடைய ஸம்பிரதாயம் ஏதக்ஷண பர்யந்தம் ஓங்கி வளர்ந்து வருவதற்கு ஹேதுக்கள் என்னவென்று சற்று ஆராய்ந்தால் பரமோதார ஸ்வபாவமுள்ள திருக்குடந்தை ஆண்டவனுடைய அவதாரமும் அவருடைய பரமோபகாரமே ஹேதுவாகும்.

## திருக்குடந்தை ஆண்டவனுடைய சரித்திரத்துவக்கம்

தென்திருக்காவேரியின் கரையிலுள்ள காடந்தேத்தி என்ற ஸ்ரீகிராமத்தில் பரமைகாந்தியான ஸ்ரீரெகுநாதாச்சார் ஸ்வாமிக்கு தர்மபத்தினியான ஜானகி அம்மாளிடத்தில் விரோதிவருஷம் ஆவணிமாதம் மூலநக்ஷத்திரத்தில் ஸ்ரீவரத வேதாந்தாந்தாச்சாரியார் என்ற திருநாமம் பூண்ட மஹான் ஒருவர் அவதரித்தார்.

இவர் தம் பிதாவினிடத்தில் பிரும்மோபதேசம், பஞ்சஸம்ஸ்காரம் இவைகளைப் பெற்று ஸாங்கமாக வேதாத்யயனம் செய்து ராஜமன்னார்கோவிலில் மஹா வித்வான் ஸ்ரீஸ்வாமியாச்சாரியாரிடதில் தர்க்கம் முதலான சாஸ்திரங்களை அப்யஸித்து சதுச் சாஸ்திரபண்டிதராய் விளங்கி வந்தார்.

பால்யத்திலேயே இம்மஹான் மிகவும் வைராக்ய சிரோமணியாய் எழுந்தருளியிருந்ததுமல்லாமல் காயத்ரி, திருவஷ்டாக்ஷரம் முதலிய மந்திர ரத்னநிதியாய் மிகவும் ஆச்சரிய ஸ்வபாவராய் பிரகாசித்தார். மேலும் இம்மஹநீயர் ஒரு ஸமயம் மைஸூர் ஸமஸ்தானத்துக்கு எழுந்தருளி



12. திருக்குடந்தை ஆண்டவன்
(ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹா தேசிகன்
ஆவணி-மீ மூலம்

தமக்கிருந்த அஸிதராஸாதாரணமான தர்க்க பாண்டியத்தத்தை பிரகடனம் செய்து அந்த ராஜஸதஸில் உத்தம ஸம்பாவனை பெற்று ஸ்ரீபாகால ஸ்வாமியிடம் சென்று ஸ்ரீலக்ஷ்மீ ஹயக்ரீவ ஸுதர்சன மந்திரங்களை உபதேசம் பெற்று கவி ஸிம்மமாயும் மேலும் அக்காலத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ அழகிய சிங்கரிடம் ஸ்ரீலக்ஷ்மீ நிருஸிம்ம மந்திரத்தையும் உபதேசிகப் பெற்று இம்மஹா மந்திரங்களில் மஹாஸித்தியையும் அடைந்து மஹாதேஜஸ்வியாயெழுந்தருளியிருந்த வைபவத்தைக்கண்டு துர்வாதிகள் ஸிம்மத்தைக்கண்ட யானைகள்போல் பயந்து நடுங்கி விலகி ஓடிச் சென்றனர். இவ் விஷயமான பல விசித்ர சரித்திரங்கள் உண்டு. தற்காலம் இந்த ஸ்வாமிக்குத் திருநக்ஷத்ரம் 35, இந்த 35-வது திரு நக்ஷத்மரத்தில் ஒரு ஸ்திரீரத்னத்தை விவாஹம் செய்து கிரஹஸ்தாசிரமத்தில் எழுந்தருளியிருந்துவிட்டுப் பின்பு ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருந்த பெரியாண்டவனுடைய ஸ்ரீபாதத்தை ஆச்ரயித்து ஸ்ரீபாஷ்ய பகவத்விஷய, மந்த்ர ரஹஸ்யார்த்தங்களைக் காலக்ஷேபம் செய்து அன்னவருடைய கடாக்ஷத்துக்கும் பாத்திரமாயிருந்தார்.

பின்பு இவ் வரதவேதாந்தாச்சாரியார் ஸ்வாமிக்கு ஸ்ரீலக்ஷ்மீ ஹயக்ரீவனுடைய கடாக்ஷத்தால் சதாவதானம் முதலிய கலைகளில் அத்புத சக்தி எற்பட்டது. இப்படிப்பட்ட நிரதிசய ஆச்சரிய ஸ்வபாவத்துடன் திருவனந்தபுரம், கொச்சி, முதலான ஸமஸ்தானங்களுக்குச் சென்று அநேக வாதிகளையும் ஆபிசாரப் பிரயோகிகளையும் ஜயித்து ஆங்காங்கு ஸ்ரீமதாண்டவனுடைய கடாக்ஷத்தால் விஜயத்வஜம் நாட்டி வந்தார். பின்பு திருமலைக்கு எழுந்தருளி திருவேங்கடமுடையானை மங்களா சாஸனம் செய்துவிட்டு அத்தேவஸ்தானத்தில் தமக்குரிய விசேஷமான வைதுஷ்யத்தைக்காட்டியதால் மிகவும் ஸந்துஷ்டியடைந்து தேவஸ்தானபதியானவர் ஸம்மான மாகக் கொடுத்த தந்தப்

பல்லக்கை திருச்சானூர் தேசிகன்ஸந்நிதியில் ஸமர்ப்பித்து சரிதார்த்தரானர்.

இந்த மஹான் கோமளவல்லித் தாயார் விஷயமாய் ஒரு தண்டகமும் திருவேங்கடமுடையான் விஷயமாய் ஒரு ஸ்தோத்திரமும் திருக்குறளை ஸம்ஸ்கிருதத்தில் (அத்புத வாமனன்) என்ற கிரந்தமாக மொழி பெயர்த்தும் இவ்வாறு அநேக ஸ்ரீஸூக்திகளை லோகோபகாரமாக அருளிச் செய்தார். இப்படி ஸ்ரீமச்சின்னண்டவன் திருநாட்டை அலங்கரித்த பிற்பாடு ஸ்ரீமதாண்டவனது ஸத் ஸம்ப்ரதாயத்தை அபிவிருத்தி செய்ய நிபுணரான அதிகாரி இல்லாததைக் கண்டு தமது 73-வது திரு நக்ஷத்திரத்தில் தேஹ துர்பலத்தினல் ஏற்பட்ட அசக்தியையும் கண்டு தம்மால் இனிமேல் ஸம்பிந்தாய பிரவசனம் பண்ணமுடியாததைப்பற்றி துக்கித்துக் கொண்டிருந்தார். இப்போது பரமோதாரஸ்வபாவரான திருக்குடந்தை அழகியசிங்கரின் மனேபீஷ்டத்தை உத்தேசித்தும் தேரெழுந்தூர் ஸ்ரீமந்நம்மாண்டவன் ஸம்பிரதாய பிரவசனத்துக்கு மிகவும் ஸரியான அதிகாரியாயுருப்பதையும் திருவுள்ளத்தில் கொண்டு தாம் முதலில் திருக்குடந்தை அழகிய சிங்கரிடம் ஸந்யாஸம் பெறச் சென்றார். ஸ்ரீ அழகிய சிங்கரும் ஸந்யாஸத்தை இந்த ஸ்வாமிக்குக் கொடுக்கத் தமக்கு பாக்கியம் நேர்ந்ததே என்று ஸந்துஷ்டரானர்.

ஆனலும் அநேகம் பேர்கள் ஸ்ரீ அழகியசிங்கரிடம் சென்று எவ்விதமாகவாவது ஸ்ரீமதாண்டவனுடைய ஸம்பிரதாயத்தை அபிவிருத்தி செய்யக்கூடாதென்று பல சூழ்ச்சிகளால் ஸ்ரீ அழகிய சிங்கருடைய மனதிற்குக் கலக்கம் உண்டாக்கினர்கள். இதற்கடி என்னவெனில் ஸ்ரீமதாண்டவன் ஸம்பிரதாயம் வாழையடி வாழையாய் தேரெழுந்தூர் ஸ்ரீமந்நம்மாண்டவன் மூலமாய் தழைத்தோங்கிவிடுமே என்ற அஸூயையான அபிப்ராயத்தைத் தவிறவேறில்லை.

ஆனாலும் ஸ்ரீ அழகிய சிங்கர் இம்மாதிரியான சோதனைக்குள் அகப்படாத மஹோத்தமரான ஸத்யவ்ரதராகையால் விசுவாவஸு வருஷம் ஆவணி-மீ ஸ்ரீநிருஸிம்மபுரத்தில் ஸ்ரீவரத வேதாந்தாச்சார் ஸ்வாமிக்கு ஸந்யாஸாசிரமத்தை ஸாதித்தருளி "ஸ்ரீநிவாஸராமானுஜ மஹாதேசிகன்" என்ற திருநாமத்தையும் சாற்றியருளி மிகவும் திருவுள்ள முகந்தருளினார்.

அடுத்த நாட்காலையில் திருக்குடந்தை ஆண்டவன், (ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹாதேசிகள்) ஸ்ரீ அழகியசிங்கரின் பொற்றாமரைத் தாளில் வீழ்ந்து தண்டன் ஸமர்ப்பித்து விட்டு கிருதஞ்ஞதையைச் செலுத்தி சரிதார்த்தராய் ஆயிரக் கணக்கான ஸ்ரீமதாண்டவன் திருவடிகள் பின் பற்ற திருக்கண்டியூர், உத்தமர்கோவில் முதலான திவ்ய க்ஷேத்ரங்களை தரிசனம் செய்து கொண்டு ஸ்ரீரங்கத்திலுள்ள ஸ்ரீமச்சின்னாண்டவன் ஆசிரமத்துக்கு எழுந்தருளினார்.


இவ்வாறு சிலகாலம் எழுந்தருளியிருந்து அநேக ஸச்சிஷ்யர்களுக்கு ஆசாரியகம் செய்துகொண்டிருக்கும் போது திருமேனி அசக்தி நாளுக்கு நாள் அதிகமாய சில ஸமயங்களில் மூர்ச்சையடைகிற தன் ஸ்வபாவத்தைக் கண்டு இனி தேஹ யாத்திரை அதிக காலம் நடைபெறாது என்று உத்தேசித்துத் தேரெழுந்தூர் ஸ்வாமிக்குத் தமது உத்தேசத்தைத் தெரிவித்து உடனே ஆசிரம ஸ்வீகாரம் பண்ணிக்கொள்ளவேண்டிய பிரயத்தனத்துடன் ஆசிரமத் துக்கு எழுந்தருள வேண்டுமென்று சில அந்தரங்கமான ஸ்வாமிகள் மூலமாக நியமித்தனுப்பவுவே, தேரெழுந்தூர் ஸ்வாமியும் 'அநுக்ரஹீதோஸ்மி" என்று அக்ஷணமே புத்ரன், மனைவி, ஸொத்து முதலியவைகளை விட்டு விட்டு "த்யக்த்வாபுத்ராம்ச்சதாராம்ச்ச" என்னும்படியாக விரைந் தோடி வந்து தண்டம் ஸமர்ப்பித்து நிற்கவே, அப்பா! வெகுநாளாக ஸம்பாதித்து வைத்த மந்த்ர ரத்ன நிதிகளை உமக்கு தற்காலத்தில் கலிகோலாஹலத்தினால் ஏற்படுகிற

அரிஷ்டங்களை சாந்தி செய்யவும் ஆஸுரஸ்வபாவமுள்ள நாஸ்திகர்களை வேர்களைந்து ஆஸ்திகத்தைத் தழைக்கச் செய்யும்" எனக்கூறி தமது ஸப்தகோடி (7 கோடி) திருவஷ்டாக்ஷரஜபத்தின் பலனைத் தந்தருளி மீண்டும் ஒரு சுபதினத்தில் ஸர்வாஸாசிரமத்தை யதாவிதிஸ்வீகரிக்கும் படி நியமித்து "வேதாந்த ராமானுஜ மஹாதேசிகன்" என்ற திருநாமத்தால் மோக்ஷாசிரம மகுடம் சூட்டி அருளினர்.

பின்பு திருக்குடந்தை ஆண்டவன் ஆறுமாத காலம் லீலா விபூதியால் எழுந்தருளியிருந்துவிட்டு கீலக வருஷம் மாசி மாதம் கிருஷ்ணபக்ஷம் துவாதசியன்று திருநாட்டை யலங்கரித்தார்.

ஸ்ரீமந் நம்மாண்டவன் (வேதாந்த ராமானுஜ மஹாதேசிகன்)

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்று பேரறிஞர் அருளியபடி மண்ணவரும் விண்ணவரும் புகழ்ந்து பாட வல்ல பெருமை வாய்ந்த "ஸ்ரீமந் நம்மாண்டவன்" என்று திருநாமம் பூண்ட பரமஹம்ஸரானவர் இப்புவியில் "த்ரமிடேஷுபூரிச:" என்னும்படியான நான்மறையின் கரைகண்ட மஹரிஷிகள் கொண்டாடும் மேன்மைவாய்ந்த தமிழ்நாட்டில் அதிலும் "காவேரீச மஹாபாகா" என்று விசேஷித்துக் கூறும்படி காவேரி நதிக்கரையிலுள்ள 'செஞ் சொல் நான்மறையோர் தென்னழுந்தை" யென்றும் "முதுநான்மறை வீதிதோறும் அலையாரும் கடல்போல் முழங்கும் தென்னழுந்தையென்றும், மாயோனை வாள்வலி யால் மந்திரங்கொள் மங்கையர்கோனாகிய திருமங்கையாழ் வார் மிகவும் அன்புடன் மங்களாசாஸனம் செய்யும் சிறப்பு வாய்ந்த தேரேழுந்தூர் என்ற திவ்ய தேசத்தில் 'கருவிலே திருவுடையார்' என்றார்போல புவியில் அவதரிக்கும்போதே ஞாந வைராக்யாதி ஸம்பத்துக்கள் ஒருங்கே தோற்றிற்று என்னும்படி அமையப்பெற்று இக்கலியில் பிரஜோத்பத்தி வருஷம், வழுத்தூர் ஆண்டவன் (வேதாந்தராமானுஜ மஹா தேசிகன்—வழுத்தூர் ஆண்டவன்) திருவவதாரம்



13. ஸ்ரீ நம்மாண்டவன், தேரெழுந்தூர்
(வேதாந்த ராமானுஜ மஹா தேசிகன்)
ஆவணி-மீ பூரட்டாதி

செய்த தினமாகிய ஆவணிப் பூரட்டாதித் திருநக்ஷத்திரத் தன்று ஸர்வ லோகோஜ்ஜீவனார்த்தமாக ஸ்ரீ வைஷ்ணவ குல திலகரான ஸ்ரீநிவாஸாச்சார் ஸ்வாமியின் திருத்தேவியா ராகிய அலமேலு மங்கைத்தாயார் என்ற திருநாமம் பூண்ட பதிவிரதையின் திருவுதரத்தில் ஸ்ரீமான் வரதாச்சாரியார் என்ற மஹான் திருவவதரித்தருளினார்.

TAMIL NADU ARCHIVES LIBRARY
111728

### குலப்பெருமை

ஸ்ரீமத் விசிஷ்டாத்வைத ஸம்பிரதாய பிரவர்த்தகரான எம்பெருமானார் ஸ்தாபித்த 74 ஸிம்மாஸனாதிபதிகளான ஸ்வயமாச்சாரிய புருஷர்களுக்குள் ஈயுண்ணி தேவராஜாச் சார், மாதவாச்சார், ஆண்டவன் ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹா தேசிகன் முதலான வித்வத்குல பதிகளுடைய திருவம்சத் தில் பிறந்ததையிட்டு ஆச்சாரியகம் செய்யவே அவதரித்தார் போலும்.

### காலப்பெருமை

அடுத்தபடியாக நிரதிசய மஹிமை வாய்ந்த இம் மஹானின் அவதார தினத்தின் பெருமையை ஆராய்ச்சி செய்யுங்கால் மோக்ஷ ஸாம்ராஜ்யத்திற்கு அடியாய் நிற்கிற ஆஸ்திகப் பிரஜைகளை உத்பத்தி செய்யுமோர் அத்புத சக்தி வாய்ந்த பிரஜோத்பத்திவருஷமே இம்மஹானுபாவருடைய அவதார வருஷமேயாம். பின்பு ஆவணிப் பூரட்டாதியை ஜோதிட நூலாராய்ச்சி செய்யும் கலைஞர் எவ்வாறு கூறு கிறார் என்றால் 'லோகபிரஸித்தோ தனவான்வதாந்ய: ஸுஹ்ருத்களத்ராத்மஜ தாராஸயுக்த: । ஆஞாகராயஸய ஜனஸ்ய ஸர்வே ஸசிராவணக்யே ஸுதாராம் ப்ரஸூத ॥ என்றும், "சுக்ர ப்ரோஷ்டபதே பூர்வே ஸமாருஹ்ய விரோசதே" என்னும்படி பிரஸித்தமாயிருக்கும் ஆவணிப் பூரட்டாதியின் மஹிமை,

முன்கூறிய ச்லோகத்திலுள்ள ‘லோக பிரஸித்த:’ என்பதால் சக்ரவர்த்தித் திருமகன்போல் நற்குணத்தில் மஹாப்பிரஸித்திபெற்றவராகவும், “தனவான்” குபேர ஸம்பத்தோடு கூடியவராயும், “வதாந்ய” கர்ணன்போல் பரமோதாரஸ்வபாவராயும், ஸுஹ்ருத்களத்ராத்மஜ “தாஸ வர்க்க:” இன்பமான ப்ரீதியையுடைய புத்ர மித்ர களத்ராதிகளை உடையவராயும் மேலும், “ஆஜ்ஞாகராயஸ்ய ஜநஸ்ய ஸர்வே” ஸமஸ்த தாஸ ஜனங்களும் மிகவும் கீழ்ப்படியும் படியான இயல்புள்ளவராயும் இருப்பார்கள். இத்துடன் முன்சொன்ன ‘சுக்ர ப்ரோஷ்டபதே பூர்வே ஸமாரூஹ்ய விரோசதே” என்றதால் இஜ்ஜாதகர் பூரட்டாதியில் வெள்ளிக்கிழமையில் அவதரித்தபடியால் சுக்ரன்போல் புத்தி நீதிகளுடன் ஸ்ரீகருடன் போன்ற பார்வை இவைகளால் சிறந்திருப்பார் என்பது பொருளாகும். இத்தனை நற்குணங்களும் ஸ்ரீமந்நம்மாண்டவனை விபவத்தில் அனுபவித்தவர்களுக்கே நலமாகும்.

## பாலியப்பருவம்

இவருடைய பிதா இவருக்கு ஸகாலத்தில் அக்ஷராப்யாஸம், உபநயனம், முதலான ஸம்ஸ்காரங்களைச் செய்து வைத்து, வேதாத்யயன காவ்ய நாடகாலங்காரங்களில் பயிற்சி செய்விக்கும்போதே குசாக்ர புத்தியைக் கண்டு ஸந்தோஷித்து, மேலும் தர்க்கவ்யாகரண மீமாம்ஸ நூல்களைக் கற்கத் தேரெழுந்தூரில் ஸௌகரிய மில்லாததால் தேரெழுந்தூரைவிட்டு வெளிக் கிளம்பி எழுந்தருள வேண்டியதாயிற்று.

ஆகவே நம் ஸ்வாமியினுடைய திருத்தகப்பனார் ஸ்ரீரங்கத்தில் அக்காலத்தில் கொள்ளிடக்கரையில் எழுந்தருளியிருந்த பெரியாண்டவன் என்று பெயர் பெற்ற ஸ்ரீநிவாஸ மஹாதேசிகனுடைய திருவடி வாரத்தில்கொண்டு

வந்து அக் குமாரரை ஸமர்ப்பிக்கவே அப்பரமஹம்ஸரும் நம் ஸ்வாமியைக் குளிரக்கடாக்ஷித்து பஞ்சஸம்ஸ்காரம் மந்திரோபதேசங்களைச் செய்து மேலும் இவருடைய புத்திக் கூர்மையை கடாக்ஷித்து இவருக்கு கிரந்த கால க்ஷேபம் செய்து வைத்து ஸம்பிரதாயப் பிரவர்த்தகராகச் செய்யவேண்டுமென ஸங்கல்பித்தார். இவ்விஷயத்தைத் தெரிந்த நம் ஸ்வாமியினுடைய பிதாவானவர் நம் ஸ்வாமியை தர்க்கவியாகரணமீமாம் ஸாசாஸதிரங்களில் பயிற்சி செய்து வைப்பதற்காக விளக்கொடிக் கிராமத்திற்குச் சென்று மஹாத்தர்க்க பண்டிதர் ஸ்ரீவேதாந்தாசாரியாரிடம் ஒப்புவித்தார் நம் ஸ்வாமியும் அத்தர்க்க வித்வானிடத்தில் தர்க்கம் முதலிய நூல்களை மின்ஸார சக்தியைப்போல் கிரஹித்து விளங்கும் ஆச்சரிய சக்தியைக் கண்டு அங்குள்ளோர் அனைவரும் மிகவும மகிழ்ந்தனர்.

## புதுக்கோட்டை ராஜஸதஸ்ஸில் நடந்த பரீக்ஷை விபரம்

இவ்வாறு ஸர்வ சாஸ்திரங்களிலும் வைதுஷ்யத்தை ஸம்பாதித்த நம் ஸ்வாமியின் எல்லையற்ற அறிவின் ஆற்றலைக் கண்டு இவருடைய தந்தையார் புதுக்கோட்டை ராஜஸதஸ்ஸுக்கு அழைத்துப்போனபோது அங்கு நடந்த பரீக்ஷையில் ஒரு பிரச்னத்துக்கு ஸமஸ்தவித்வான்களும் மறுமொழிகூற அசக்தராயிருக்க நம் ஸ்வாமி அழகிய சிறு தலைப்பினனுடன் 14 வயதில் ஸிம்மநாதம்போல் கொடுத்த புத்திக்கூர்மையுள்ள மறுமொழியைக் கேட்டுவியப்புற்று ராஜஸதஸ்ஸில் அத்தடவை நம் ஸ்வாமிக்கு உத்தம ஸம்பாவனை அளிக்கப்பட்டது. அடுத்த வருஷத்திலும் நம் ஸ்வாமி அதே ஸதஸ்ஸுக்கு எழுந்தருளி தர்க்க சாஸ்திரத்தில் காட்டும் அஸாதாரணமான நைபுண்யத்தைக்கண்டு ஆச்சரியம் கொண்டு உத்தம ஸம்பாவனை செய்துவிட்டு மேலும் நம் ஸ்வாமிக்கு விவாஹார்த்தமாக புதுக்கோட்டை மஹாராஜர் ரூபாய் முன்னூறும், வித்வான் ஸ்ரீ சேஷய்யா

சாஸ்திரிகள் ரூ. நூறும் ஸன்மானமாக அளித்தார்கள். இந்தப் பரிசை விவாஹம் நடக்கும்போது தாம் பெற்றுக் கொள்வதாய் இவர் தந்தையார் மஹாராஜாவினிடத்தில் ஒப்புவித்து வைத்திருந்தார். மேலும் நம் ஸ்வாமியினுடைய தர்க்கஞானத்தின் ஸூக்ஷ்மப்ரஜ்ஞையைக் கண்டு ஜஸ்டிஸ் ஸ்ரீமான் முத்துஸ்வாமி அய்யர் இவரை ஆங்கிலத்தில் பயிற்சி செய்து வைக்கும்பக்ஷத்தில்தானே அதற்கு வேண்டிய உபகாரத்தைச் செய்வதாக ஒப்புக்கொண்டார். ஆனால் இவ் விஷயத்தை இவருடைய தந்தையார் ஒப்புக் கொள்ள வில்லை *

## விவாஹம்

பின்பு நமது ஸ்வாமிக்கு 18-வது வயதில் திருக் குடந்தை அய்யங்கார் தெருவில் எழுந்தருளியிருந்த பிராந்தியங்கரை ஸ்ரீமான் அண்ணுஸாமி அய்யங்காரின் குமாரத்தியாகிய ஸௌ செங்கமலம்மாளை விவாஹம் செய்ய நிச்சயித்தவுடன் புதுக்கோட்டை மஹாராஜாவும் ஸ்ரீவித்வான்சேஷய்யா சாஸ்திரிகளும் தங்களிடத்திலிருந்த ரூ. 400ஐயும் கொடுத்துதவி விவாஹத்வை மிகச் சிறப் பாகச் செய்து வைத்தார்கள்.

## மீண்டும் வித்யாப்யாஸம்

விவாஹமான பிற்பாடு திருவையாருக்குச் சென்று மஹாமஹோபாததியாயர் ஸ்ரீ சுப்பராயாசாரியாரிடம் மீண் டும் வ்யாகரண சாஸ்திரத்தை முற்றிலும் கற்று அதிலும் அஸாதாரணமான பாண்டித்தியத்தை ஸம்பாதித்துக்

---

* புதுக்கோட்டை ஸமஸ்தானம் ராஜஸதஸ்ஸில் பரிசளித்த முதல் தடவை உத்தம ஸன்மானத்தை குரு தக்ஷிணையாக வித்வான் வேதாந்தாச்சாரியாருக்கும் 2வது தடவை விளக்குடிப் பெருமாளுக்கு யானை வாஹனம் உபயமாக நம் ஸ்வாமியால் அளிக்கப்பட்டது.

கொண்டிருக்கும்போது நம் ஸ்வாமீ வேலும் மைசூர் ஸமஸ்தானத்துக்கு எழுந்தருளி அவ்விடத்திலும் தம் வைதுஷ்யத்தை பிரகாசித்தபோது பரகாலஸ்வாமியானவர் நம் ஸ்வாமியை ஒவ்வொரு தடவையும் இம் மைஸூர்ஸபையை அலங்கரிக்கவேணும் என்று கேட்டுக் கொள்வது வழக்கம். அதுவும் *"பாரதந்திரிய நிரயம்" என்று நமது நிகமாந்த தேசிகன்போல் வைராக்ய நிதியாகையால் மறுத்து விட்டார்.

"ஸ்ரீமச்சின்னாண்டவன் திருவடி ஆச்ரயம்"

பின்பு நம் ஸ்வாமி தம் தந்தையாருடன் ஸ்ரீரங்கம் சென்று ஸ்ரீமச்சின்னாண்டவன் என்று பிரஸித்திபெற்ற ஸ்ரீபாதுகாஸேவக ராமானுஜ மஹாதேசிகருடைய திருவடியை ஆச்ரயித்து ஸ்வரூப கிரந்த சதுஷ்டயங் காலக்ஷேபம் செய்து ஞானவைராக்ய நிதியாய் எழுந்தருளியிருக்கும் நம் ஸ்வாமி ஸ்ரீமச்சின்னாண்டவனுடைய உத்தமமான கடாக்ஷத்துக்குப் பாத்திரமாய் நிற்குமளவில் ஒருநாள் தம் ஸ்வாமியைக் குளிரக்கடாக்ஷித்து "நீயே நம் ஸம்பிரதாய ஸ்தாபனம் செய்வதற்குரிய அதிகாரி என்று நேரில் நியமித்ததுடன் பல அந்தரங்கரிடத்திலும் ஸாதிக்கதுண்டு.

பின்பு ஸ்ரீமச்சின்னாண்டவனுக்கு அசக்தி நேரிடுங்கால் நம் ஸ்வாமி ஸந்யாஸாச்ரமத்துக்குத் தயாராயிருப்பதை இவரது பிதாவானவர் கேட்டு "அப்பா நீ ஸந்யாஸம் பண்ணிக்கொண்டு என்னை விட்டகல்வதென்றால் 'அந்தோ! என் ஹ்ருதயம் துடிக்கிறதே! என் மார்பைத் தொட்டுப் பார்" என்று கண்ணீர் சொரிய நம் ஸ்வாமியும் இந்த தர்மஸங்கடத்தில், இவ்விடம் ஸ்ரீரங்கத்திலிருக்கலாகாதென்று கிராமாந்தரம் சென்று கிரஹஸ்தாச்ரமத்தில் எழுந்தளியிருந்தார்.

* கேவலம் த்ரவ்யத்திற்காக ஸ்வதந்திரத்தை யிழப்பது நரகமாம்

## ஸ்ரீமச்சின்னாண்டவன் திருநாடலங்கரித்தலும் ஸ்ரீமதாண்டவன் ஸம்ப்ரதாய நிலைமையும்

சில காலம் சின்னாண்டவன் அசக்தியாயெழுந்தருளி யிருந்து விஜய-ஹூ தை-மீ சுக்லஸப்தமியன்று திடீரெனத் திருநாட்டலங்கார்த்தாச்சுது. இவ் விஷயத்தைக் கேள்வி யுற்று நம் ஸ்வாமியும் தேரெழுந்தூரிலிருந்த சில ஸொத்துக்களையும் விற்றுவந்து ஸ்ரீரங்கத்திலேயே வாஸம் செய்ய பிரயத்தனம் செய்யத்துடங்கினார். ஸ்ரீமச்சின்னாண்டவனுக்குப் பின்பு ஸம்பிரதாய ப்ரவர்த்தகர் ஒருவருமற்று "ஆவார் யார் துணை" என்று ஸ்ரீமதாண்டவனுடைய ஸம்பிதாயஸ்தர் அனைவரும் நெஞ்சிடிந்து திகைத்து நிர்கதியாய் நிற்கின்ற காலம் வந்து விட்டது. நம் ஸ்வாமியோ தன் திருத் தகப்பனாருடைய திருவுள்ளத்துக்கு மாறாக ஸந்யாஸம் பெறமுடியாமல் தன் காலத்தைத் தன் பிதாவுடன் கோனேரி ராஜபுரத்தில் வஸித்து வரும்படியாயிற்று. அப்போது காவேரியாற்றிற்குத் தென்கரையிலுள்ள பழமானேரி ஸுந்தர சாஸ்திரிகள் என்ற மஹா வித்வானிடத்தில் பூர்வமீமாம்ஸையை அப்யஸித்து அதிலும் பூர்ண பாண்டித்யத்தை ஸம்பாதித்துக் கொண்டு எழுந்தருளியிருந்தார். பின்பு ஹேவிளம்பி வருஷம் மாசி மாதத்தில் சின்னாண்டவனுடைய பூர்வாசிரமத்து குமாரர் ஸ்ரீரெங்காச்சாயுயார் என்ற ஸ்வாமியானவர் நம் ஸ்வாமியைக்கிட்டி தேவரீர் ஸம்பிரதாய பிரவசனம் செய்யவே அவதரித்துவிட்டு ஸாமான்ய மனுஷ்யாள்போல் கிரஹஸ்தாசிரமத்தில் இருப்பது நன்றோ என்று போதனை செய்ய, பின்னும் நம் ஸ்வாமி கோனேரிராஜபுரத்தைவிட்டு விட்டு ஸ்ரீரங்கத்தில் பெரியாண்டவனுடைய பிருந்தாவனத்துக்கு எழுந்தருளி பெரியாண்டவனுக்கு ஸ்ரீ உப. வெ. கொடியால பரமோதார ஸ்வபாவரான ஸ்ரீ சேஷாத்ரி அய்யாங்கார் ஸ்வாமியால் கொடுக்கப்பட்டு வந்த ஸாமக்ரிகளைக் கொண்டு திருவாராதனம் செய்து வந்தார்.

நம் ஸ்வாமி பிதா இருக்கிறவரையில் ஸந்யாஸத்தில் ஆசையற்றிருக்கும் ஸமயமாயிருந்தது. அப்போது ஸ்ரீமதாண்டவனுடைய பிரபல சிஷ்யர்கள் ஒன்று சேர்ந்து காடந் தேத்தி-சதாவதானம், ஸ்ரீ உப வே வரதவேதாந்தாச்சாரியார் ஸ்வாமியை ஸம்பிரதாய பிரவர்தனம் செய்ய வேணும் என்று பிரார்த்தித்தனர். ஆனால் அந்த ஸ்வாமி தனக்கு விருத்த தசையில் அசக்தி ஏற்பட்டிருக்கிறதென்றும் ஆனால் தேரெழுந்தூர் ஸ்ரீ உபவே வரதாச்சார் ஸ்வாமி தம்முடைய தேஹாவஸாந காலத்தில் ஸந்யாஸம் பண்ணிக்கொள்ளப் பிரதிஞ்ஞை செய்தால் தாம் திருக்குடந்தை அழகியசிங்கரிடம் ஸந்யாஸத்துக்குப் பிரார்த்திக்கலாம் என்று மறுமொழி ஸாதித்தார். இந்த விருத்தாந்தத்தைக் கேட்ட நம் ஸ்வாமியும் தம்கிரஹஸ்தாசிரமத்தில் ஒரு புருஷ ப்ரஜை ஏற்படும் வரையில் இருந்துவிட்டு தம்பிதாவுக்கு ஒரு ஆறுதல் உண்டுபண்ணிவிட்டு அப்படியே வாக்குரைத்து ஸந்யஸித்துக் கொள்ளவேணும் என்று நியமித்தநின் பேரில் திருக்குடந்தை-சதாவதானம் ஸ்ரீவரதவேதாந்தாச்சார் ஸ்வாமியும் அப்போதிருந்த திருக்குடந்தை அழகியசிங்கரிடம் பிரார்த்தித்து ஸந்யாஸாசிரமத்தைப் பெற்றுக்கொண்டு ஸ்ரீரங்கத்துக்கு எழுந்தருளி சிலகாலம் ஸம்ப்ரத்யப்ரவசனம் செய்துகொண்டு எழுந்தருளியிருந்தார். அக்காலத்தில் திருக்குடந்தை ஆண்டவனுடைய அனுக்ரஹத்தால் அன்னவருக்கு ஒரு புருஷ ப்ரஜை ஜநித்து அதற்குக் கண்ணன் அல்லது ஸ்ரீநிவாஸராங்கள் எனற பெயர் கொண்டு அழைக்கப் பெற்றது.

### ஸ்ரீமந் நம்மாண்டவனும் ஸந்யாஸாசிரமமும்

இப்புருஷப்ரஜை ஜநித்த 16 மாதங்களுக்கெல்லாம் திருக்குடந்தை ஆண்டவனும் திருமேனி அசக்தியால் இனி அதிக அவகாசத்துக்கு இடமில்லை என்று சிஷ்யர்கள் எல்லாம் சிந்திக்கத் தொடங்கினர். ஆனால் ஒருநாள்

ஆபத்தசை அதிகமாய்விடவே சிஷ்ய கோஷ்டிகள் அனைவரும் சேர்ந்து போய் நம் தேரெழுந்தூர் ஸ்வாமியை பிரார்த்தித்து அழைத்து போய் யதாக்ரமமாக திருக்குடந்தையாண்டவனிடம் ஸந்யாஸம்பெற ஏற்பாடு செய்தனர். நம் தேரெழுந்தூர்ஸ்வாமியும் திருக்குடந்தையாண்டவனுடைய கிருபாகடாக்ஷத்தால் ஸச்சிஷ்ய குணபூர்த்தியையும் ஸந்யாஸாசிரமத்தையும் பெற்று தன்யரானார்.

இவ்வாறு தேரெழுந்தூர் ஆண்டவன் ஸந்யாஸம் பெற்று ஸம்பிரதாய ப்ரவசனம் செய்யும் பேரின்பத்தி லீடுபட்டு தம் தம் இடத்திலேயே பிரதான கடாக்ஷம் ஏற்பட்டிருக்கிறது என்று ஒவ்வொருவரும்முன் காலத்தில் யாதவரும் அவரது ஆய்ச்சியர்களும் கண்ணபிரானிடம்ஈடுபட்டுத் துதித்தது போல் தேரெழுந்தூர் ஆண்டவனையும் நம் ஆண்டவன் என்று துதிக்கத்துடங்கி நமது ஆண்டவனுடைய ஸம்பிரதாயம் சுக்லபக்ஷ சந்திரன்போல் விருத்தியடையப் போகிறது என்று போற்றத்துடங்கினார்கள். ஸ்ரீமதாண்டவன் திருவடிகள் அனைவருக்கும் கிடைத்த ஆனந்தத்துக்கு அளவில்லை.

இவ்வாறு நம்மாண்டவனுக்கு ஸந்யாஸாசிரமத்தை அனுக்ரஹித்த 6 மாதத்திற்கெல்லாம் திருக்குடந்தை ஆண்டவனும் திருநாட்டை அலங்கரிக்கும்படி நேர்ந்தது.

பின்பு இவ்வாறு நம்மாண்டவன், "வேதாந்தராமானுஜ மஹாதேசிகன்" என்று திருநாமம் பூண்டு ஸம்பிரதாய ஸ்தாபனத்திற்காக குமரி முதல் திருவேங்கடம், மைசூர், வரையிலுள்ள தமிழ்நாடுத் திருப்பதிகளில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் அனைவரையும் மங்களாசாஸனம் செய்து கொண்டும் ஆங்காங்கு ஆழ்வார், எம்பெருமானார், தேசிகனுடைய திவ்யஸூக்திகளை பிரவசனம் செய்து ஸ்ரீவைஷ்ணவர்களையும் உஜ்ஜீவிக்கச்

செய்து கொண்டும் சிலகாலம் யாத்திரையிலேயே எழுந்தருளி எல்லா இடங்களிலும் ஸ்ரீ ஆண்டவன் ஸம்ப்ரதாய விஜயத்வஜம் நாட்டினார்.

## ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதி ஸம்பிரதாயமும் நம்மாண்டவனும்

இப்படியிருக்க அஹோபில மட ஆஸ்தானத்திற்கு அதிபதியாய் எழுந்தருளியிருக்கும் அழகிய சிங்கர் ஸ்ரீநிவாஸ சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுக்கு திருமேனி அஸ்வஸ்தமாகவே மேற்கொண்டு அப்பதவிக்கு உடனே ஸன்யாசம் பண்ணிக்கொண்டு ஸித்தாந்த பிரவசன ஸ்தாபனாதிகளைச் செய்ய வேறொருவருமில்லை என்று கண்டு அழகிய சிங்கர் திருநாடலங்கரிக்கும் ஸமயத்தில் ஸ்ரீமான் உபவே (ராஜமன்னார்கோவில்) வியாகரண மஹாவித்வான் ஸ்ரீஉபவே ரங்காச்சார் முதலிய ஸ்வாமிகளை தேர்ந்தெடுத்துக் குறிப்பிட்டு அந்த ஸ்வாமிகளில் ஒருவரை (தேரெழுந்தூர்) ஸ்ரீமதாண்டவனிடம் ஸந்யாஸம் பெறச்செய்து ஸ்ரீ அழகியசிங்கருடைய பதவிக்கு எழுந்தருளப்பண்ணவேணும் என்று திருவுள்ளம் கொண்டு உயிலில் ஸ்ரீமுகத்தை லேகனபூர்வகம் நியமித்திருந்தார். அவ்வாறு அவ்வழகிய சிங்கர் திருநாட்டை அலங்கரித்த பிற்பாடு அஹோபிலம் ஸந்நிதியிலுள்ள பிரபல சிஷ்யர்கள் ராஜமன்னார்கோவில் மஹாவித்வான் ஸ்ரீஉபவே வ்யாகரணம் ரங்காச்சார் ஸ்வாமியை அழகிய சிங்கருடைய ஸ்தானத்தை ஏற்றுக்கொள்ளும்படி பிரார்த்திக்க அந்த ஸ்வாமியும் லோகோஜ்ஜீவனார்த்தமாக ந்ருஸிம்மபுரத்தில் தேரெழுந்தூர் ஸ்ரீமந் நம்மாண்டவனிடம் ஸந்யாஸம் பெற்று அழகிய சிங்கருடைய ஸ்தானத்தை அலங்கரித்து ஸித்தாந்த பிரவசம் செய்தருளி வந்தார்.

இவ்வாறு தேரெழுந்தூர் ஸ்ரீமந் நம்மாண்டவன் திம்மகுடி உபவே ஸ்ரீநிவாஸாச்சார் ஸ்வாமிக்கு ஆபத்காலத்தில் ஸந்யாசத்தையும், திருக்குடந்தை ஸ்ரீஉபவே ராஜகோபாலாச்சார் ஸ்வாமிக்கும் அன்னவருடைய வைராக்யத்தை அதிசயித்து ஸந்யாஸாசிரமத்தை அனுக்கிரஹிக்கும்படி நேர்ந்தது.

ஸ்ரீமந் நம்மாண்டவனிடத்தில் ஸ்வரூப கிரந்தங்களை காலக்ஷேபம் செய்த ஸ்வாமிகளாவார்:—

ஜகத் விக்யாதராய் பிரகாசித்த பிரும்மஞான நிதி ஸ்ரீ உபவே (ஆக்கூர் எங்களாண்டவன், சதுச் ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன்) சாஸ்திர மஹா வித்வான் சாந்தி விரக்தி நிதி ஸ்ரீ உப. வே தென்பிரை வெங்கடராகவாச்சார் ஸ்வாமி (தற்காலம் ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் ரெங்கநாத மஹா தேசிகன்); திம்மகுடி பரமோதார ஸ்வபாவரான ஸ்ரீ உபவே ஸாங்காத்யாயீ ஸ்ரீநிவாஸாச்சார் ஸ்வாமி (ஸ்ரீராமானுஜ யதீச்வரர்); திருக்குடந்தை வைராக்ய நிதி ஸ்ரீ உபவே நாருயணஸ்வாமி யதீசவரர்; ராயம் பேட்டை கனபாடி வித்வான் சீமாச்சார் (ஸ்ரீநிவாஸராமானுஜ மஹா தேசிகன்).

இன்னும் ஸ்ரீமந் நம்மாண்டன் அநேக வியாபக வித்வான்களுக்கு கிரந்த காலக்ஷேபம் செய்து வைத்துக்கொண்டு பெருமாள்கோவிலுக்கு எழுந்தருளின ஒரு சமயம் மஹோதார ப்ரபு **மங்கனிராம் ஷேட்** என்ற ஸ்ரீமான் கனவான் லக்ஷக்கணக்கான பணம் வைத்துக் கொண்டு ஸ்ரீ தேவப்பெருமான் ஸந்நிதியைக் கட்ட உத்தேசித்தபோது திருமண் காப்பால் (தென்னாச்சாரிய ஸம்பரதாயஸ்தருக்கும், தேசிக ஸம்ப்ரதாயஸ்தருக்கும்) அடங்காத ஆக்ரோஷத்தால் வந்த கடுங் கலஹத்தை ஸமாதானம் செய்து ஸந்நிதியைப் பரிஷ்காரம் செய்த விஷயம் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு ஸ்ரீமந் நம்மாண்டவன் அநந்யப்ரயோஜனமான ஸ்ரீபகவத் பாகவதாச்சாரிய கைங்கரியங்களை அனவரதம் செய்தும் ஸ்ரீ பாஷ்ய பகவத் விஷயங்களை கல்மனமும் உருகும்படியாக ரஸிகரஞ்சன காலக்ஷேபத்தைப் பண்ணிக்கொண்டும், தன்னை ஆசிரயித்தவர்களை உஜ்ஜீவிக்கச் செய்யவேணும் என்ற பரமகிருபையோடு கூடிக்கொண்டும் 24 சாதுர்மாஸ்யங்கள், 60 திருநக்ஷத்திரங்கள் வரையில் திவ்ய க்ஷேத்ரங்களில் வாஸம் பண்ணிவிட்டு கடைசியில் பெருமாள் கோவிலில் பிரஜோத்பத்தி ஆடிகிருஷ்ண பஞ்சமி திதியில் திருநாட்டை அலங்கரித்தார்.

### ஆக்கூர் எங்களாண்டவன் ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன் அவதார வைபவம்.

இம்மஹானுபாவர் "விம்சத் யப்தேவிச்ருதநாநாவித வித்ய: த்ரிம்சத்வாரம் ச்ராவித ராமாயண காவ்ய:" என்னும்படி ஸ்ரீமந்

நிகமாந்த மஹாதேசிகன் போல் ஆக்கூர் என்ற ஸ்ரீவைஷ்ணவ ஸம்பத்ஸம்ருத்தியான ஸ்ரீ கிராமத்தில் ஸ்ரீமான் உ. ப.வே, ஸ்ரீநிவாஸாச்சாரியாருடைய திருக்குமாரராக விக்ரம வருஷம், ஸ்ரீமந்நம்மாண்டவன் அவதரித்த ஆவணிப் பூரட்டாதிக்கு அடுத்தபடியான புரட்டாசி உத்திரட்டாதித் திருநக்ஷத்திரத்தன்று திருவவதரித்தருளினார். ஸ்ரீமந் நம்மாண்டவனுக்குப் பின்பு இவரையும் ஆண்டவனாக ஸர்வேச்வரன் ஸங்கல்பித்தார் போலும்.

## வித்யாப்யாஸம்

இம் மஹானை இவருடைய பிதாவானவர் காலாகாலத்தில் ப்ருமோபதேசம் செய்து வைத்து வேதாப்யாஸங்களையும் செய்து வைத்தார். இவருடைய மாதுலர் மஹத்ஸந்ததியும் ஞானவானையும் இருப்பதைப்பற்றி அவரிடத்தில் அக்காலத்தில் பஞ்ச ஸம்ஸ்காரம் பண்ணிக்கொள்ள நேர்ந்தது. மேலும் இவருடைய பிதா இவருக்கு சாஸ்திராப்யாஸம் பண்ணி வைக்க உத்தேசமில்லாமல் கிருஹக்ருத்யங்களையே அதிகமாகச் செய்யும்படி ஏவினபடியால் அக்கிருஹக்ருதயம் இவருக்கு ருசிக்காமல் சாஸ்திராப்யாஸத்தில் மஹத்தான அபிருசி கொண்டு ஒருவரிடமும் சொல்லாமல் ஸர்வசாஸ்திர மஹாவித்வான் ஸ்ரீ உப. வே. குன்றபாக்கம் ஸ்ரீனிவாஸாச்சாரியாரிடம் ஸமஸ்த ஸாமான்ய சாஸ்திரங்களையும் (தர்க்கம், வ்யாகரணம் மீமாம்ஸை) அப்யஸித்து ஸகல கலா வல்லபராய் எழுந்தருளியிருந்தார்.

## விவாஹ மஹோத்ஸவம்

இம்மஹானுடைய ஸர்வ சாஸ்திர ப்ராவிண்யதையும் ஒழுக்கத்தையும் பார்த்து, திருமங்கையாழ்வார் உவந்து மங்களாசாஸனம் செய்தருளிய திருக்கடிகை (சோளஸிம்மபுரம்) என்ற திவ்ய க்ஷேத்ரத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கிற ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ம ஸந்நிதியில் திரிகரணசுத்தியாய் கைங்கரியம் செய்து கொண்டு எழுந்தருளியிருந்த ஒரு ஸ்ரீவைஷ்ணவர் இம்மஹானுக்கு தன் பெண்ணை திருமணம் செய்து வைத்தார்.


## ஸ்ரீமத்ராமாயண ப்ரவசனம்

இம்மஹான் இவ்வாறு சிலநாட்கள் தனது ஸ்வசுரகிருஹத்திலிருக்கும் ஸமயத்தில் இவருடைய பரிமள மகரந்தம்போல்

இன்பமான ராவிக்யத்தையும் சாஸ்திரப்ராவீண்யத்தையும் கண்ட அந்த கிராமத்தார் இவரை ஸ்ரீமத் ராமாயண ப்ரவசனம் பண்ணும்படி பலமுறை பிரார்த்தித்துக்கேட்டுக் கொண்டதன் பேரில் இம்மஹான் ஸ்ரீசக்ரவர்த்தி திருமகனுடைய திவ்ய சரித்ரத்தைக் கேட்போர்கள் மனமும் மிக உருகும்படியாயும், வானளாவி ஒலி பரப்பும் ஓர் விலக்ஷணசக்தி யந்திரம்போல் ஸ்நிக்த மதுர கம்பீர நாதத்துடன் செவிக்கினிய செஞ்சொற்களால் விண்ணவரும் மண்ணவரும் இனிது விரும்பும் படியாய் பிரவசனம் செய்யும் அபூர்வமான அறிவையும் ஆற்றலையும் கண்டும் கேட்டும் தம்தம் விபவங்களை எல்லாம் இம் மஹானுடைய பாதாரவிந்தத்தில் அர்ப்பணம் செய்தனர். இவ்வள்ளலும் அந்த விபவங்களில் தமது யோக க்ஷேமத்துக்குரிய சிற்றளவை மாத்திரம் வைத்துக்கொண்டு மற்ற பாகத்தையெல்லாம் அத்திருப்பதியிஎ எருந்தருளியிருக்கின்ற ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்மனுக்கே அனன்ய ப்ரயோஜனமாக அர்ப்பணம் செய்தார். இவ்வாறு மிக குதூஹலமாய் பல தடவைகள் ஸம்பூர்ண ராமாயண ப்ரவசனம் நடந்தது. இச்சமயத்தில் ஸ்ரீமந் நம்மாண்டவன் பெருமான் கோவிலில் எழுந்தருளியிருந்ததைக் கேள்வியுற்று அவ்விடம் சென்று ஸ்ரீமதாண்டவனுடைய சந்திர சீதள கடாக்ஷத்துக்குப் பாத்திரமாய் ஸ்வரூப கிரந்தஸூக்திகள் ஸமஸ்தத்தையும் காலக்ஷேபம் செய்து தன்யரானார்.

## ராஜ ஸதஸ் ஸன்மானங்கள்

இம்மஹானுக்கு சில ஸ்திரீ ப்ரஜைகள் உண்டு. இவர்களுக்கு விவாஹ காலம் சமீபித்தது. விவாஹங்கள் எல்லாம் ஸ்ரீமதாண்டவனுடைய கடாக்ஷ விசேஷத்தால் சுலபமாயும் குதூகலமாயும் ஸத்பாத்திரங்களில் செய்யப்பட்டு முடிந்தன. சோள ஸிம்மபுரத்தாரெல்லாரும் இவ்விவாஹங்களை நடத்த மிகவும் மனமுவந்து உதவி செய்தனர். இவ்வாறு விவாகங்கள் நடந்த பின்னர் புதுக்கோட்டை, திருவனந்தபுரம், கொச்சி, மைசூர் முதலான சமஸ்தானங்களில் எல்லா ராஜஸதஸ்ஸிலும் அபிநவ கவிதார்க்கிக ஸிம்மம் போல எழுந்தருளிவந்த நம் ஸ்வாமிக்கு உத்தம ஸம்பாவனையே வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்க விஷயம்.



14. ஸ்ரீ எங்களாண்டவன் (ஆக்கூர்)

(ஸ்ரீநிவாஸ மஹா தேசிகன்)

புரட்டாசி-மீ உத்திரட்டாதி

## மறுமுறையும் ஸ்ரீமத் ராமாயண ப்ரவசனம்

இவ்வாறு சோளஸிம்மபுரத்திலுள்ள ஸ்ரீ ராம பக்தகோடிகள் நமது ஸ்வாமியின் திகட்டாத ஸ்ரீமத் ராமாயண மகரந்த ரஸத்தை மேன்மேலும் பானம் செய்ய நினைத்து மறுபடியும் அநேக தடவை ஸ்ரீமத் ராமாயணத்தையும் இன்னும் சில இதிகாஸ புராணங்களையும் கேட்டு எல்லையற்ற ஆனந்த ஸாகரத்தில் மூழ்கி நின்றார்கள்.

## ஸ்ரீமந் நம்மாண்டவனிடத்தில் எங்களாண்டவனுடைய மறுமுறை காலக்ஷேபாதிசயம்

இவ்வாறு நம் ஸ்வாமி சோளஸிம்மபுரத்தில் இருந்து கொண்டு ஸத்கதாகாலக்ஷேபாதிசயங்களால் ஜனங்கள் எல்லோராலும் நல்வழிப்படுத்திக் கொண்டிருக்கும்போது **ஸ்ரீமந் நம்மாண்டவன் வேதாந்த ராமானுஜ மஹாதேசிகன்** யாத்திரையாய் தென்னிந்தியா முழுமையும் எழுந்தருளிவிட்டு கடைசியாய் பெருமாள் கோவிலில் எழுந்தருளியிருப்பதை கேள்வியுற்று மறு முறையும் ஸமஸ்த ஸ்வரூப கிரந்தங்களையும் (ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம், ஸ்ரீ பாஷ்யம்; கீதாபாஷ்யம், பகவத் விஷயம்) முழுமையும் ஆனுபூர்விகமாக ஸேவித்து கிருதார்த்தராக வேணும் என்று ஸங்கல்பித்துக்கொண்டு மற்றொரு தடவையும் ஸ்ரீமதாண்டவன் திருவடி வாரத்தில் பாதுகாசிரமத்தில் காலக்ஷேபம் செய்து சரிதார்த்தரானார். இச்சமயத்தில் நம் ஸ்வாமியினுடைய ஞான வைராக்யானுஷ்டானங்களைக் கடாக்ஷித்த ஸ்ரீமந் நம்மாண்டவனும் இந்த ஸ்வாமியை ஸம்பிரதாய பிரவர்த்தகராக ஸ்தாபிக்கவேணும் என்று திருவுள்ளங்கொண்டு ப்ரபத்தி ப்ரயோகம், ப்ரேஷ மந்திரம் முதலியவைகளை உபதேசித்து ஸந்யாஸம் செய்துகொள்ளும்படி நியமித்தார். ஆனாலும் நம் ஸ்வாமி இந்த உயர்ந்த பதவியை வகிக்க தனக்கு சக்தியில்லை என்று அனுஸந்தித்துக்கொண்டு விலகி நின்றார். இச்சமயம் நம்மாண்டவனும் சிறிது காலமாய் அசக்தியாய் எழுந்தருளியிருந்து திடீரென திருநாட்டை அலங்கரிக்கும்படி நேர்ந்தது.

## ஆக்கூர் ஸ்ரீமத் எங்களாண்டவனுடைய ஸந்யாஸாசிரம பரிக்ரஹம்

இவ்வாறு மறு முறையும் ஸ்ரீமதாண்டவன் ஸம்பிரதாயம் முற்றுப் பெற்று மேலும் ஸ்தாபகர் இல்லாமல் மூன்று வாரங்கள் வரை நிர்க்கதியாய் நின்றது.

இந்நிலமையைக் கண்டு மிகவும் பரிதப்தராய் நின்ற ஸ்ரீமான் உபவே ஸோஸலே ஜோடிதார், திருமலே ஸ்ரீநிவாஸாச்சார் ஸ்வாமி, ஸ்ரீ உபவே திவான்பகதூர் V. K. ராமானுஜாச்சார் ஸ்வாமி, காடந்திருத்தி ஸ்ரீமான் உபவே வேதாந்தாச்சார், திருவரங்கத்தில் ஸ்ரீ தேசிகன் ஸந்நிதியை ஸ்தாபித்த ஸ்ரீ அய்யஞுச்சார் (ரெங்காச்சார்) ஸ்வாமி, ஸ்வச்சன்னம் ஸ்ரீ உபவே வீரராகவாச்சார், ராஜகோபாலாச்சார் ஸ்வாமிகள் முதலியோர் நம் ஸ்வாமியை பெருமாள் கோவிலிலிருந்து பன்முறையும் பேர் அறிவும் பக்தியும் நிறைந்த மேலும் பல ஆண்டவன் திருவடிகள் பிரார்த்தித்து ஸ்ரீரங்கத்திற்கு அழைத்துவந்து பல கடுமையான சோதனைகளுக்கிடையே முன்னமே ஸ்ரீமந் நம்மாண்டவனிடத்தில் ஸந்யாஸாசிரமம் பெற்றிருந்த ஸ்ரீ நாராயணயதிச்வரரிடத்தில் ஸந்யாஸம் பெறும்படி செய்தனர். இவ்வாறு நம் ஸ்வாமி ஸந்யாஸம் பெற்று ஸ்ரீமதாண்டவனுடைய ஸ்தானத்தை அலங்கரித்தவுடனே சாதக பக்ஷிகள் நீருண்ட மேகத்தைக் கண்டன போலவும், சகோர பக்ஷிகள் பூர்ண கலே கொண்ட சந்திரனேப் பார்த்து சந்தோஷிப்பது போலவும் ஆனந்தம் கொண்டு குதூகலித்தனர்.

## ஸ்ரீமத் எங்களாண்டவனது காலக்ஷேப வைபவம்

இயற்கனவே ஸ்ரீமத் ராமாயணத்தைப் பலமுறை ப்ரவசனம் பண்ணின சாதுர்யத்தாலும், தர்க்கவ்யாகரணுதிகளில் அஸாதாரணமான ஞானத் தெளிவாலும் ஸ்ரீமதாண்டவன் வேதாந்த ராமானுஜ மஹாதேசிகன் திவ்ய அனுக்ரஹத்தால் கிடைத்த உபய வேதாந்த ஸம்பத்தின் தேஜஸ்ஸாலும் ஸ்ரீ தேவப்பெருமாளுடைய திவ்ய கடாக்ஷத்தாலும் ஸந்யாஸாசிரமம் பெறும்போது ஸ்ரீ பெரியாண்டவனுடைய திருநாமஸ்வீகாரத்தால் ஞான வைராக்யானுஷ்டான ஸம்பிரதாய ஸ்தாபன கல்யாண குணங்களாலும், இவை எல்லாவற்றையும் மகுடீகரிக்கிற பவ்ய சீலத்தாலும் இவைகள் எல்லாவற்றேடும் பிரகாசிக்

திற கிரந்த காலக்ஷேப நைபுண்யத்தைக் கண்டு வியந்த ஸர்வ ஜனங்களும் அஸ்மத் ஸ்வாமி (எங்களாண்டவன்) என்று பன்முறை கோஷிக்கும்படியாயிருந்தது. இவ்வாறு பெரியாண்டவன் ஆசிரமத்திலிருந்து சுமார் ஒரு வருஷம் க்ரந்தப்ரவசனம் செய்துவிட்டு மேலும் ஸகல ஜனங்களுடைய உஜ்ஜீவனார்த்தமாக ஸகல திவ்ய தேசங்களின் வழியாய் யாத்திரைக்கு ஸங்கல்பம் செய்துகொண்டனர்.

## ஸ்ரீமத் எங்களாண்டவன் யாத்திரா விலாஸம்

ஸ்ரீமத் எங்களாண்டவன் யாத்திரையாய் எழுந்தருளின தேசங்களுக்குக் கணக்கில்லை—மேலும் இவருடைய ஸ்ரீ பாதத்தை ஆச்ரயித்து க்ரந்த காலக்ஷேபம் செய்துவந்த மஹா பாக்யம் பெற்ற மஹா வித்வான்களுடைய திருநாமங்கள் கணக்கில் அகப்படாது என்று சொல்லலாம்.

ஸ்ரீமத் எங்களாண்டவனால் மங்களா சாஸனம் செய்யப்பட்ட திவ்ய தேசங்களாவன:—திருக்குடந்தை, தேரெழுந்தூர், திருவெழுந்தூர், சிறுபுலியூர், சீர்காழி, திருக்கண்ணபுரம், திருக்கண்ணமங்கை, பார்பா கோவில், சாக்கை, கரியாப்பட்டினம், விளக்கொடி, வெண்ணுந்தங்கரை, வடுவூர், புதுக்கோட்டை, அரியக்குடி, திருப்புல்லாணி, ஸ்ரீவைகுண்டம், ஆழ்வார்திருநகரி, சிழ்நத்தம், அம்பாஸமுத்திரம், வானமாமலை, திருக்குருங்குடி, ஸ்ரீவில்லிபுத்தூர், மதுரை, திருமையம், திருக்கோஷ்டியூர், ஸ்ரீரங்கம், காஞ்சீபுரம், உத்தரமேரூர், ஸ்ரீமுஷ்ணம், சித்ரகூடம், திருவஹீந்திரபுரம், திருப்பதி, சித்தூர், கோலார், பங்களூர், திருநாராயணபுரம், ஸ்ரீரங்கப்பட்டணம், தொண்டனூர், ஸோஸலே முதலான க்ஷேத்திரங்கள்.

## திவ்ய தேச யாத்திரையில் ஏற்பட்ட விசேஷங்கள்

இவ்வாறு சகல ஜனங்களுக்கும் பிரும்ம வித்யையை உபதேசித்து ஆத்மோஜ்ஜீவனோபாயத்தை அனுஷ்டிக்கச் செய்து அந்தந்த திவ்ய தேசத்திலுள்ள அர்ச்சா மூர்த்திகளை மங்களா சாஸனம் செய்துகொண்டு நம் ஸ்வாமி எழுந்தருளினார். அக்காலத்தில் மதுரை ஸ்ரீமான் டி. சி. ஸ்ரீநிவாஸய்யங்காரும் மற்றுமுள்ள தேவஸ்தானாதிகாரிகளும் வெகு தூரத்திலிருந்து

மங்களவிருது வாத்தியங்களோடு உபசரித்து எங்களாண்டவனை அழைத்துச் சென்று திருப்பதி எம்பெருமானை மங்களா சாஸனம் பண்ணியவுடன் 29 முழம் 6 வீதியுள்ள ஒரு கனக பீதாம்பரத்தை ஸன்மானம் செய்து சிஷ்யர்களை யதேஷ்டமாக உபசரித்தனர்.

அக்கனக பீதாம்பரத்தை திருநாராயணபுரத்தில் ஸ்ரீ பாஷ்யகாரருக்குச் சாற்றி திருவுள்ளம் உகந்ததாச்சுது.

எங்களாண்டவனுடை யாத்திரை ஸ்தலங்களில் காரைக்குடி ஸ்ரீமான் உபவே ரகுநாத தாத்தாச்சாரியாராலும், புதுக்கோட்டை திவான் ஸ்ரீமான் உபவே கிருஷ்ணமாச்சாரியாராலும் ஷை புதுக்கோட்டை ஜட்ஜ் ஒரு சமயம் மதுரையில் எழுந்தருளியிருந்த போது எங்கள்ாண்டவன் ஸ்ரீமான் கொண்டங்கி கிருஷ்ணமாச்சாரியாரைக் கொண்டு அவ்வூரிலுள்ள அழகர் ஸந்நிதிக்கும் ஸ்ரீ தேசிகன் ஸந்நிதிக்கும் விவித விசித்திர கைங்கரியங்களை நியமித்துச்செய்து வைத்து திருவுள்ள முகந்தாச்சுது.

வண்ணுத்தங்கரை திவ்ய தேசத்தில் எழுந்தருளியபோது அநேகருடைய பிரார்த்தனையின்பேரில் அநேக சிஷ்யர்களுடைய திரவியங்களைக்கொண்டு நீலமேகப் பெருமாளுக்கு லக்ஷார்ச்சனையும் த்வஜ ஸ்தம்பத்தையும் பிரதிஷ்டை பண்ணி சரிதார்த்தமானார்.

பின்பு ஒரு சமயம் திருப்பேர் (அப்பக்குடத்தான்) என்ற திவ்ய தேசத்துக்கு எழுந்தருளியபோது ஸ்ரீமான் அட்வகேட் எ. நரசிம்மாச்சாரியாரைக்கொண்டு த்வஜ ஸ்தம்பத்தை பிரதிஷ்டை செய்துவைக்க நியமித்தபோது அம்மஹானும் எங்களாண்டவன் ஸ்ரீநிவாஸ மகா தேசிகனுடைய திருநாமத்தால் பரிஷ்கரித்து த்வஜ ஸ்தம்பத்தை நிர்மாணம் செய்து பிரதிஷ்டை செய்தார்.

காரைக்குடி ஆண்டவன் திருவடி ஸ்ரீமான் ரெகுநாதச்சாரியாரைக்கொண்டு அப்பிரதேசத்திலுள்ள திருவாராதனம் இல்லாமலிருந்த ஸ்ரீ வரதராஜ அர்ச்சா விக்ரகத்தை ஸ்ரீரங்கத்

துக்குப் பெரியாசிரமத்துக்கு எழுந்தருளப்பண்ணி நித்ய மங்களா சாஸனத்துக்கு ஏற்பாடு செய்தாச்சுது.

அடுத்தபடியாக திருக்கண்ணமங்கை பக்தவத்ஸலம் பெருமாளுக்கு ஒரு சிறந்த கனக பீதாம்பரம் வாங்கிச் சாற்றிச் திருவுள்ள முகந்தாச்சுது

(இதற்கு அடுத்தது 73-ம் பக்கம்)

## ஒரு முக்கியக் குறிப்பு

இப்புஸ்தகத்தில் அடங்கிய பதினறு திவ்ய படங்களும் ப்ரத்தியேகமாக ப்ரேம் போடும்படி அச்சிடப்பட்டிருக்கின்றன. வேண்டியவர்கள் 4 அணு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். ஆர்ட் பேப்பரில் வேண்டியவர்கள் 8 அணு அனுப்பவேண்டும்.

ஸ்ரீரங்கம் பெரியாசிரமத்தில், மன்னார்கோவில் ஸ்ரீமான் உபவே ஸ்ரீ ரங்காச்சாரியாரைக்கொண்டு ஸ்ரீமந்நம்மாண்டவனை பிரதிஷ்டை செய்து நித்ய மங்களா சாஸனம் பண்ணும் படியான ஏற்பாட்டை செய்துவைத்தாச்சுது.

மைசூர் சக்கரவர்த்தி கிருஷ்ணமாச்சாரியாருக்கு நேரில் ஸாதித்த நியமனத்தை உத்தேசித்து ஒருசமயம் நாகைக்குப் பக்கத்திலுள்ள பாப்பா கோவில் எம்பெருமானுக்கு ரஜதகவசம், லக்ஷார்ச்சனை, பீதாம்பரம், தேன்பால், கன்னலமுது, தளிகை முதலியன எங்களாண்டவனால் சமர்ப்பிக்கப்பட்ட விஷயம் குறிப்பிடத்தக்கது.

## எங்களாண்டவன் திருநாட்டை அலங்கரித்தல்

இவ்வாறு இன்னும் எத்தனையோ பிரதிதினம் வாசாமகோசரமான கைங்கரியங்களையே தனது முக்கிய லக்ஷ்யமாகக் கொண்டு பண்ணிவைத்து தமது திருவவதாரத்தை கிருதார்த்தமாகச் செய்து திருவுள்ளமுகந்தருளினார். இவ்வாறு பெரியாண்டவனுடைய ஸத்ஸம்பிரதாயத்துக்கு விஜயத்வஜராய் இப்புவியில் 67 திருநக்ஷத்திரங்கள், 17 சாதுர்மாஸ்யங்கள் மிக சிரேயஸ்ஸுடன் எழுந்தருளியிருந்துவிட்டு தமக்கு சிரமதசை வரும்போவிருந்த சமயத்தில் **अधिजिगमिषुराद्यं धाम दिव्यं त्रिधाम्नः** எங்களாண்டவனை **आर्यः** தெய்வம்போல் பூஜிக்கத் தகுந்த ஸ்ரீநிவாஸ மஹா தேசிகன் உலகத்தில் தாம் அவதரித்து ஸ்ரீமதாண்டவனுடைய சம்பிரதாயத்தை நன்றாய் வேரூன்றித் தழைக்கச்செய்து பின்பு **त्रिधाम्नः आद्यं दिव्यं धाम जिगमिषुः** இனிமேல் மண்ணுலகைவிட்டு விண்ணுலகம் செல்லவேணும் என்ற இச்சை கொண்டு **श्रुतविविधपरीक्षा शोधिते क्वापि पात्रे** வேதநூல்களில் சொல்லியபடி சில மாதங்கள் வருஷங்கள் வரையில்அநேகவிதமான பரீக்ஷைகள் செய்து சோதித்து அறிந்து ஸ்ரீமதாண்டவன் சம்பிரதாயஸ்தர்களுக்குள் ஸர்வாத்மநா உத்தமோத்தமரான ஒப்பற்ற ஒரு ஸத்பாத்திரமாகிய தென்பிறையில் அவதரித்த சதுச்சாஸ்திர மஹா வித்வானாய் எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீ உபவே வெங்கடராகவாச்சார்


ஸ்வாமியினிடத்தில் **अनघगुणदशामं** சாந்தி விரக்தி முதலான குற்றமற்ற கல்யாண குணங்கள் பொருந்திய ஸ்திதியோடு கூடியவர் என்று **अहितस्नेहं** கிரதிசய பிரேமையும் விசுவாசமும் கொண்டு **निरपायं संप्रदाय प्रदीपं** லக்ஷ்மிநாதன் முதற்கொண்டு இன்றுவரை விச்சேதமில்லாமல் வந்துகொண்டிருக்கின்ற ஸ்ரீ மதாண்டவனுடைய ஸத்ஸம்பிரதாயத்தை (உலக அஞ்ஞான இருளனைத்தும் மாற்றும் ஓர் விலக்ஷண தீபத்தைப்போல) ஏற்படுத்திவிட்டு சில காலம் புவியிலிருந்து தமது காரியம் சரியாய் நடந்துவருவதையும் நேரில் அனுபவித்துவிட்டு வியஞூ பங்குனிமீ கிருஷ்ணபக்ஷ துவாதசியன்று திருநாட்டை அலங்கரித்தாச்சுது.

குறிப்பு:- ஸ்ரீநிகமாந்த மகா தேசிகன் அருளிச் செய்த ஆச்சாரிய க்ருத்யாதிகாரத்திலுள்ள பிரமாண வார்த்தைகளின் படி சரியாய் நடந்து வருவதின் கருத்து.

### தற்காலம் ஸ்ரீரங்கம் ஆண்டவன் ஸ்ரீரங்கநாத மகா தேசிகன் அவதார வைபவம்

रङ्गनाथावतारोऽयं तत्पूर्णांशोऽथवा भवेत् ।
यद्वारङ्गयतिर्वेति वितर्क्यायास्तु मङ्गलम् ॥

இம்மஹநீயர், ஸ்ரீ ராஜமன்னார் கோவில்பக்கம் தென்பிரை என்ற கிராமத்தில் ஸ்ரீ வைஷ்ணவ குல திலகராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமான் உபவே வங்கிபுரம் சேஷாத்ரியாச்சாருடைய தர்மபத்னியாகிய செங்கமலத் தாயாருடைய திருவுதரத்தில் விய-ஞூ ஆவணி-மீ ஸ்ரீமத் எங்களாண்டவனுடைய அடுத்தபடியாக நிற்கின்ற ரேவதி நக்ஷத்திரத்தில் சாக்ஷாத் ஸ்ரீரங்கநாதனுடைய அவதாரமோ அல்லது அன்னவரது பூர்ணம்சம் கொண்டவரோ அல்லது முன்பு சாக்ஷாத் ஸ்வாமிக்கு ஆசார்யனாயிருந்த ஸ்ரீரங்கநாத மகாதேசிகன்தானோ என்றெல்லாம் அனுமானிக்கும்படியாக மேற்சொன்ன ஆவணி மாதம் ரேவதி நக்ஷத்திரத்தில் இப்புவியிலவதரித்தார்.



15. ஸ்ரீமத் ஆண்டவன், தெம்பரை.

(ஸ்ரீ ரங்கநாத மஹா தேசிகன்)

ஆவணி-மீ ரேவதி

## வித்யாப்யாஸம்

பின்பு சாஸ்திரோக்தமாக ஸகாலங்களில் அக்ஷராப்யாஸம், உபநயனம், பஞ்சஸம்ஸ்காரம் முதலிய ஸம்ஸ்காரங்களை தமது பிதாவிடமே பெற்றுப் பின்னும் அன்னவரிடமே ஸாங்கமாகவும் பூர்ணமாகவும் லக்ஷணத்தோடும் ஸாமசாகையை அத்யயனம் பண்ணிகாவ்ய சாஸ்திரங்களிலும் நம் ஸ்வாமி தேர்ச்சி பெற்று எழுந்தருளியிருந்தார்.

மேலும் பற்பல சாஸ்திரங்களை இளமையிலேயே கற்க எண்ணி ராஜமன்னார்கோவிலுக்குச் சென்று ஸ்ரீமான் உபவே வியாகரண மஹா வித்வான் ஸ்ரீஉபவே ரங்காச்சார்யார் ஸ்வாமி (அஹோபிலம் அழகிய சிங்கர் ஆஸ்தானத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீபராங்குச சடகோப மஹா தேசிகன்) இடம் வியாகரண சாஸ்திரத்தை பூர்ணமாக அப்யஸித்த பின்பு விளக்குடியில் எழுந்தருளியிருந்த ஸ்ரீமான் உபவே தார்க்கிகஸிம்மம் ஸ்ரீநிவாஸாச்சாரியார் ஸ்வாமியிடத்தில் ஸம்பூர்ணமாக தர்க்க சாஸ்திரத்தையும் அப்யஸித்துப் பின்பு மகாமகோபாத்தியாய பிரும்ம ஸ்ரீ குப்புஸ்வாமி சாஸ்திரிகளிடத்திலும் பிரும்ம ஸ்ரீ சின்னசாமி சாஸ்திரிகளிடததிலும் மீமாம்ஸா சாஸ்திரத்தையும் பூர்ணமாய் அப்யஸித்து தேர்ச்சி பெற்றார்.

## விவாஹம்

இவ்வாறு பிரும்மசரியாசிரமத்திலிருக்கும் போது நம் ஸ்வாமி அவ்வர்ணாசிரமத்துக்குரிய அனுஷ்டானங்களிலிருந்து தப்பாமல் உலகப் பொருள்களில் ஆசையற்று மஹா விரக்தராக எழுந்தருளியிருந்தார். இப்போது நம் ஸ்வாமியினுடைய பிதாவானவர் தமது ஸத்குல தர்ம பிரஜாபிவிருத்தி யர்த்தமாக சாக்கை நல்லான் சக்கரவர்த்தி வம்சத்தைச் சார்ந்த ஸ்ரீ உபவே ஸ்ரீநிவாஸ தேசிகாச்சாரியாருடைய புத்ரி ஸௌ. விஜயவல்லி அம்மாளை விவாஹம் செய்து வைத்தார். பின்பு மகா வித்வான் பிரும்மஸ்ரீ (சிறிய தகப்பனார்) ராமபத்ராச்சாரியாரிடம் வைச்வதேவோபதேசம் செய்து கொண்டார். இவ்வாறு இல்லறத்திலும் பூர்ண ஞான வைராக்யானுஷ்டான ஸம்பன்னராகவே எழுந்தருளியிருந்தார்.

## ராஜ ஸதஸ் ஸன்மானங்கள்

பின்பு ஒருசமயம் சில நண்பர்களுடைய ப்ரோத்ஸாஹனத்தின் பேரில் தென் பிராந்தியம் சென்று வானமாமலை ஜீயர் பட்டர் பிரான் ஸ்வாமியால் மிகவும் ஆதரிக்கப்பெற்று திருவனந்தபுரம், கொச்சி, எட்டயாபுரம் முதலிய ராஜ ஸதஸ்ஸில் உத்தம ஸம்பாவனைகளைப் பெற்று மறுபடியும் திரும்பி மன்னார்கோவிலில் எழுந்தருளியிருக்கும்போது மஹா ஸ்ரீ வைஷ்ணவ பக்தரான ஸ்ரீமான் சடகோப முதலியாரால் ஏற்படுத்தப்பட்ட வித்வத் ஸதஸ்ஸுக்கு பரீக்ஷகராகவும் நம் ஸ்வாமி எழுந்தருளியிருக்கும்படி நேர்ந்தது.

## ஸ்ரீமந் நம்மாண்டவனை ஆச்ரயித்து, காலக்ஷேப விவரம்

அதற்குப் பின்பு நம் ஸ்வாமிக்கு பரம்பரையாய் ஏற்பட்ட ஸ்ரீ மதாண்டவன் திருவடி சம்பந்தத்தை உத்தேசித்து ஸ்ரீமந் நம்மாண்டவனிடம் சென்று க்ருபா கடாட்சத்தால் வடுவூர் சக்ரவர்த்தி திருமகனிடம் பரஸமர்ப்பனம் செய்து நம் ஸ்வாமியானவர் கிரந்த சதுஷ்டயங்களையும் ஸம்ஸாரத்தில் மிகவும் விரக்தியுடன் காலக்ஷேப கோஷ்டியில் வித்யாக்ரஹணம் செய்யும் நைபுண்யத்தை கடாக்ஷித்து ஸந்யாஸம் பண்ணிக்கொள்ளும்படி நியமிக்கப்பட்டும்கூட பயந்து வித்யாக்ரஹணத்தை மாத்திரம் பண்ணிக்கொண்டிருந்தார்.

## காலக்ஷேப காலத்தில் நடந்த ஓர் விசேஷ சம்பவம்

இவ்வாறு நம் ஸ்வாமியானவர் வடுவூரில் லௌகீக சம்பத்தை த்ருணமாக நினைத்து நிகமாந்த மஹா தேசிகனுடைய வ்ருத்தியாகிய உஞ்சவ்ருத்தியைக்கொண்டு தேகயாத்திரையை நடத்திக்கொண்டு ஸ்ரீமந் நம்மாண்டவனிடத்தில் காலக்ஷேபம் செய்துகொண்டுவரும்போது நம் ஸ்வாமியின் உஞ்சவ்ருத்தி தசையைப் பார்த்து மிகவும் வயது சென்ற ஒரு ஸ்ரீ வைஷ்ணவருடைய தேவிகள் ஸ்ரீமந் நம்மாண்டவனை அணுகி தண்டம் சமர்ப்பித்து நெஞ்சிடிந்து நொந்து கண்ணும் கண்ணீருமாய் தழைதழைத்த குரலுடன் "ஸ்வாமி!, இத்தென்பிரை மகான் இவ்வாறு உஞ்சவ்ருத்தியைக்கொண்டு தேக

தாரணம் செய்யும்படி பெருமாள் ஸங்கல்பிக்கலாமா?'' எனவே ஆண்டவனும் கண்ணீர் சொரிந்து "அம்மா!, அந்த ஸ்வாமியான வர் ராஜஸதஸ், இதிகாச படனம், உயர்தர கல்விச்சாலையில் எல்லாம் பணத்தை ஸம்பாதிக்க ஞான சக்திகள் விசேஷமாயிருந்த போதிலும் அவர் அவைகளில் விரக்தி கொண்டு தற்காலம் லோக க்ஷேமார்த்தமாக உஞ்சவ்ருத்தி செய்கிறார்'' என்று நியமித்ததைக் கேட்டு அக்கிராமத்தார் அனைவரும் வியந்து உபசரித்துவந்தனர்.

## எங்களாண்டவனை ஆச்ரயித்து காலக்ஷேப விபரம்

இவ்வாறு நம்மாண்டவனிடத்தில் ஸ்ரீரங்கத்திலும் யாத்ரா ஸ்தலங்களிலும் காலக்ஷேபம் செய்துவரும் சமயத்தில் நம்மாண்டவன் காஞ்சீபுரத்தில திருநாட்டை அலங்கரித்த பிற்பாடு ஆக்கூர் எங்களாண்டவனை ஆச்ரயித்து மேலும் அநேக தேசிக ஸ்ரீ ஸூக்திகளை காலக்ஷேபம்செய்துவரும் அளவில் எங்களாண்டவனும் இவரது ஞான வைராக்யாதிகளை கடாக்ஷித்து வியந்து "இவரே நம் ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகராக'' எழுந்தருளியிருக்கலாம் என்று மனத்தில் த்ருடமான ஸங்கல்பம் கொண்டார். இவ்வாறு இருக்கும்போது சதுச்சாஸ்திர மகா வித்வானாய் ஸமஸ்த ஸ்வரூப கிரந்த பிரகாசகராய் எழுந்தருளியிருந்த ஆண்டவன் திருவடி திவான் பகதூர் வி.கே. ராமானுஜாச்சார் ஸ்வாமி தற்காலம் அஹோபிலம் அழகிய சிங்கர் பதவியிலிருக்கு ஸ்வாமி (பூர்வாசிரமம் ஸ்ரீ உபவே வெங்கடமுகவாச்சார்) ஸ்வாமி, ஸோஸலேஜோடிதார் ஆண்டவன் திருவடி ஸ்ரீஉப.வே. திருமலை ஸ்ரீனிவாசாச்சார், முதலிய பிரபல வித்வான்களுடைய ரகசியமான வார்த்தைகளை ஆதாரமாகக்கொண்டு நம் ஸ்வாமிக்கு ப்ரபத்திப்ரயோகம், ப்ரேஷ மந்திரம் முதலியவைகளை உபதேசம் பண்ணிவைத்தாச்சுது.

## எங்களாண்டவனுடைய சிரம தசையும் நம் ஸ்வாமியின் ஸந்யாசமும்

பின்பு ஸ்ரீமத் எங்களாண்டவனுக்குத் திருநக்ஷத்திரங்கள் 65-க்கு மேல் ஆன பிற்பாடு தம் தேக சிரமத்தை உத்தேசித்தும் ஸ்வாமி ஸ்ரீ உப. வே. பிரும்மநிதி தென்பிரை வேங்கட ராகவாச்சாரியாருக்கு சந்யாஸம் சாதித்தருள மனதில் ஸங்கல்

பங்கொண்டு இருக்கும்போது நம் ஸ்வாமியும் இப்பொறுப்பை ஏற்றுக்கொள்ள மிகவும் பயந்து எழுந்தருளியிருந்தார். பின்பு ஸ்ரீமதாண்டவன் சம்பிரதாயத்துக்கு ப்ரவர்த்தகராக ஞான வைராக்யானுஷ்டான ஸம்பன்னர் ஒருவரும் அகப்படவில்லை. சம்பிரதாயமோ "ஆவார் யார் துணை" என்றிருக்கும் நிலைமையில் ஸ்ரீ மதாண்டவனுடைய இங்கிதத்தையும் கவனித்து பலருடைய வேண்டுகோளுக்கும் இணங்கி தாம் அக்காலத்தில் விதுராயிருந்தமை பற்றி நிராச்ரமியாக இருக்கவேண்டாம் என்று திருவுள்ளம்பற்றி ஒரு தினம் தமக்கு ஸந்யாசம் சாதிக்கும்படி பிரார்த்தித்தார். எங்களாண்டவனும் நம் சம்பிரதாயத்துக்கு மிகவும் பொருத்தமான ஒரு சத்பாத்திரம் கிடைத்ததே என்று மிகவும் திருவுள்ளமுகந்து தாமதிக்காமல் லௌகிக வைதீக விஷயங்களை சிஷ்யர்களைக்கொண்டு ஏற்பாடு செய்யும்படி நியமித்தாச்சுது. "ச்ரேயாம் ஸிபஹூநி விக்நாநி" என்ற நீதிப்படி சில தடங்கல்களும் சோதனைகளும் ஏற்பட்டன. ஆனால் ஸ்ரீமதாண்டவனருளால் அவைகள் மறைந்தன.

கடைசியாக **விய-௵ ஐப்பசி-மீ சுக்லத்வாதசியாகிய** சுப **தினத்தில்** ஸ்ரீமத் எங்களாண்டவன் நேரில் தமது திருமேனி சிரமத்தைப் பாராட்டாமல் மிகவும் திருவுள்ளமுகந்து அநேகமான ஆண்டவன் திருவடிகள் எழுந்தருளியிருக்கும்போதே ஸ்ரீ உப. வே. வெங்கடராகவாச்சாரியாருக்கு ஸந்யாசிரம விதிப்படி மறுமுறையும் பஞ்ச ஸம்ஸ்காரம் முதலிய ஸம்ஸ்காரங்களையும் ஸ்வரூப குண சிக்ஷைகளையும் பண்ணிவைத்து ஸமஸ்த ஜனங்களிடத்திலும் '**ஸர்வபூதஸுஹ்ருத்தா**'யிருக்கும்படி நியமித்து நம் ஸ்வாமிக்கு ஸ்ரீரங்கநாதனுடைய திருநக்ஷத்திரமாகிய ரேவதி நக்ஷத்திரத்தில் அவதரித்தபடியால் ஸ்ரீரங்க நாதமஹா தேசிகன் என்று திருநாமம் சாற்றி **ஸ்ரீமதாண்டவனுடைய ஸத்ஸம்ப்ரதாய ப்ரவர்த்தக சௌபாக்ய ஸம்பதபிஷேக மஹாதிகாரத்தை** வகிக்கும்படி நியமித்தாச்சுது.

## தற்காலம் ஸ்ரீமதாண்டவனுடைய திவ்ய தேஜஸ்ஸால் நடக்கும் வைபவங்கள்

தற்காலம் ஸ்ரீமதாண்டவனும் பெரியாண்டவன் ஆசிரமத்தில் எழுந்தருளியிருந்துகொண்டு எங்களாண்டவன் நியமனப்

படியே காலை வேளைகளில் ஸ்ரீ பாஷ்ய பகவத் விஷய ஸ்ரீமத் ரகஸ்யத்ரயஸராதி கிரந்த காலக்ஷேபங்களும் சாயங்கால வேளைகளில் ஸ்ரீபாகவதம், ந்யாயஸித்தாஞ்சனம், அதிகரணஸாரர்வளி முதலிய திவ்ய ஸூக்தி காலக்ஷேபங்களும் நடந்துவருகின்றன. ஸ்ரீபெருமாள் பெரியாண்டவன் முதலான சந்நிதிகளில் பெரியாண்டவன் திருவடி, மகா பிரபு, ஸ்ரீ உபவே கொடியாலம் சேஷாத்ரி அய்யங்கார் குமாரர் ஸ்ரீஉபவே. கே.எஸ். நாராயணய்யங்கார் ஸ்வாமி, ஸ்வச்சன்னம் ஸ்ரீ உபவே. வீரராகவாச்சார், ராஜகோபாலாச்சார் சமர்ப்பிக்கின்ற பொருள்களைக்கொண்டும் ஸ்ரீமதாண்டவனுடைய நிர்ஹேதுகக்ருபா தேஜஸ்ஸால் தங்கள் தங்கள் அபிஷ்டங்களுக்கு அநுகுணமான தர்மம், அர்ததம், காமம், மோக்ஷம் முதலிய அபீஷ்டங்களை பெறுகிற எல்லையற்ற யுபக்திள்ள புருஷர்களால் சமர்ப்பிக்கப்பட்ட கிஞ்சித்காரங்களைக் கொண்டும் ஸ்ரீ உபவே.· ஸ்ரீமதாண்டவனுடைய அந்தரங்க கைங்கரியம் சக்ரவர்த்தி கிருஷ்ணமாச்சாரியார் 'சயமேயடிமைதலை நின்றார்' ஆகிய பரதாழ்வான் போன்று ஆசிரமத்தில் நித்யோத்ஸவ, மகோற்சவ, ஸம்வத்ஸரோத்ஸவமாகிய திருநக்ஷத்திர கைங்கரிய ததியாராதனையும் பெரியாண்டவன், சின்னண்டவன் ஸந்நிதி மண்டப புஷ்கரணிகளை சுயநலம் கருதாமல் நடத்திவருகிறார்.

குறிப்பு :- ஆண்டவன் சம்பிரதாயத்தில் கிரந்த காலக்ஷேபம் செய்கின்றவர்கள் அனன்ய பிரயோஜனமாய் சேவித்து வருகிறார்கள்.

## ஸமஸ்த ஜனங்களுக்கும் ஸ்ரீமதாண்டவனுடைய லக்ஷ்ய வசனம்

மிகவும் துர்லபமான மனுஷ்ய தேகத்தை எடுத்தும் அதிலும் ஸத்ஸம்ப்ரதாய ஸ்ரீ வைஷ்ணவ ஜன்மத்தை அநேக கோடி புண்ய ஜன்மங்களால் பெற்ற பாக்யவான்களாகிய நீங்கள் ஒரு நிமிஷத்தைக்கூட வீண் போக்காமல் நமது பூர்வாசார்யர்கள் அரும்பெரும் தவத்தால் தமக்குக் கிடைத்த ஸ்ரீ பகவத் விஷயாம்ருதத்தைப் பெருக்குகிற ஆழ்வார் ஆசார்யாளுடைய திவ்ய ஸூக்திகளை ஸதாசார்ய பரம்பரையில் சிரத்தையுடன் சிர

வணம் பண்ணி ஸாராஸார விவேகம் கொண்டு ஸாதுமார்க்கமாகிற அவரவர்க்குரிய வர்ணாசிரம தர்மங்களை விடாமல் அனுஷ்டித்து இஜ்ஜீவன் உஜ்ஜீவிக்கவேண்டிய உபாயானுஷ்டானத்தை அனுஷ்டிப்பதன் மூலமாக எம்பெருமானுடைய திருவடி வாரத்தில் ஆத்ம ரக்ஷாபர ஸமர்ப்பணம் பண்ணிவிட்டு தன்யராய் பிற்காலத்தில் கொஞ்சம்கூட பாகவதாபசாரம் நேராமல் ஜாக்கிரதையாயிருந்துகொண்டு இருந்த காலத்தின் பந்துமித்ர களத்ரரோடு க்ஷேமமாயிருந்துகொண்டு இந்த ஜன்மாவஸானத்தில் வேறொரு ஜன்மம் வாராதபடி ஸதாசார்யர்கள் உபதேசித்த திருமந்திரங்களை ஆவ்ருத்தி செய்து ஸாதுமார்க்கத்திலேயே நடந்துவரவேணும் என்று பெருமாள் ஆசாரியான் பாதுகையை அனவரதம் பிரார்த்திக்கிறேன் என்பது.


ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகா ஸ்மரணம்.

---

குறிப்பு :— தற்காலம் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமதாண்டவனுடைய தேஜோ விசேஷமடியாக, ஸ்ரீ தசரத சக்ரவர்த்தியின் திருக்குமாரர் போன்று, மஹோதாரஸ்வபாவர்களான விண்ணற்றங்கரை உபவே கிருஷ்ணமாச்சாரியாரும் அன்னவருடைய அன்பார்ந்த ஸஹோதரரும் மதராஸ் அட்வகேட் ஸ்ரீ உபவே கோபாலஸாமி அய்யங்காரும், ராயப்பேட்டை மைனர் கண்ணன் ஸ்வாமியும் சேர்ந்து பிரதி வருஷம் மார்கழி மாதம் திருவத்யயன உத்ஸவமும் இன்னும் சில திரு நக்ஷத்ர கைங்கர்ய உத்ஸவங்களை மிகவும் குதூஹலத்துடன் நடத்திவரும விஷயம் குறிப்பிடத்தக்கது.

அடுத்தபடியாக உடல் பொருள் ஆவியை ஸ்ரீ நம்மாண்டவன், எங்களாண்டவன் தற்காலம் ஸ்ரீரங்கம் ஆண்டவன் முதலியோருக்காகவும் பல ஸ்ரீ வைஷ்ணவ கைங்கரியங்களையும் சுயநலம் கருதாமல் செய்த மைசூர் கைங்கர்யம் ஸ்ரீ உபவே சக்ரவர்த்தி கிருஷ்ணமாச்சாரியாருடைய தற்கால ஆபத்தசையை உத்தேசித்து அன்னவருக்கு தற்காலம் ஆண்டவன் ஸந்யாஸம் ஸாதித்து "ஸ்ரீராமானுஜயதிகள்" என்ற திரு நாமத்தையும் சாற்ற திருவுள்ளம் கொண்டருளினார்.

TAMIL NADU ARCHIVES LIBRARY



16. காலக்ஷேப கோஷ்டி, பெரியாசிரமம்
(1) கிருஷ்ணஸாமி அய்யங்கார் (2) வாஜபேயம் கிருஷ்ணமாச்சார் (3) ஸ்ரீமத் ஆண்டவன் **ஸ்ரீரங்கநாத மஹாதேசிகன்** (4) சக்ரவர்த்தி கிருஷ்ணமாசார் கைங்கர்யம் (5) ராகவ தாததாசார் (6) வித்வான் நெடுந்தெரு ஸ்ரீநிவாஸாசார் (7) ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீநிவாஸாசார்.

# திருமண் காப்பு மந்திரம்

[ நாகரம் தெரியாதவர்களுக்கு தமிழில் வேறு பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது ]



॥ श्रीः ॥

श्रीमते रङ्गनाथ महादेशिकाय नम ।
श्रीमते श्रीनिवास महादेशिकाय नमः ।
श्रीमते वेदान्तरामानुजमहादेशिकाय नमः ।
श्रीमते पादुकासेवकरामानुजमहादेशिकाय नमः ।
श्रीमते श्रीनिवासमहादेशिकाय नमः ।
श्रीरङ्गनाथदिव्यमणिपादुकाभ्यां नमः ॥

ओं केशवाय नमः, नारायणाय नमः, माधवाय नमः, गोविन्दाय नमः, विष्णवे नमः, मधुसूदनाय नमः, त्रिविक्रमाय नमः, वामनाय नमः, श्रीधराय नमः, हृषीकेशाय नमः, पद्मनाभाय नमः, दामोदराय नमः ॥

ओं श्रियैनमः, अमृतोद्भवायै नमः, कमलायै नमः, चंद्रशोभिन्यै नमः, विष्णुपत्न्यै नमः, वैष्णव्यै नमः, वरारोहायै नमः, हरिवल्लभायै नमः, शार्ङ्गिण्यै नमः, देवदेविकायै नमः, महालक्ष्म्यै नमः, सुरसुन्दर्यै नमः ॥

चतुश्चक्रं नमस्यामि केशवं कनकप्रभम् । नारायणं घनश्यामं चतुश्शङ्खं नमाम्यहम् ॥ माधवं मणिभङ्गाभं चिन्तयामि चतुर्गदम् । चन्द्रभासं चतुश्शार्ङ्गं गोविन्द मभिसंश्रये ॥ विष्णुं चतुर्हलं वन्दे पद्मकिञ्जल्कसन्निभम् । चतुर्मुसलमब्जाभं संश्रये मधुसूदनम् ॥ अग्निवर्णं चतुः-खड्गं भावयामि त्रिविक्रमम् । वामनं बालसूर्याभं चतुर्वज्रं विभावये ॥ श्रीधरं पुण्डरीकाभं चतुःपट्टसमाश्रये । चतुर्मुद्गर-मभ्येमि हृषीकेशं तटित्प्रभम् ॥ पञ्चायुधं पद्मनाभं प्रणमा-म्यर्करोचिषम् । दामोदरं चतुष्पाशमिंद्रकोपनिभं भजे ॥ वासुदेवमुपासेऽहं पूर्णेन्द्वयुतसन्निभम् ॥

अस्मत् गुरुभ्यो नमः, अस्मत्परमगुरुभ्यो नमः, अस्मत् सर्वगुरुभ्यो नमः, श्रीमते वेदान्तगुरवे नमः, श्रीमते रामानुजाय नमः, श्रीमहापूर्णायनमः, श्रीमद्यामुनमुनये नमः श्रीराम मिश्रायनमः, श्रीपुण्डरीकाक्षायनमः, श्रीमन्नाथ-मुनयेनमः, श्रीमते शठकोपाय नमः, श्रीमते विष्वक्सेनाय नमः, श्रीयै नमः, श्रीधराय नमः ॥

अस्मद्देशिकमस्मदीयपरमाचार्यानशेषान् गुरून्
श्रीमल्लक्ष्मणयोगिपुङ्गवमहापूर्णौ मुनिं यामुननम् ।
रामं पद्मविलोचनं मुनिवरं नाथं शठद्वेषिणं
सेनेशं श्रियमिन्दिरासहचरं नारायणं संश्रये ॥
अस्मत्गुरुपरमगुरून् यतिवरणपूर्णौ सयामुनं रामम् ।
पद्माक्षनादशठजित् सेनेशरमारमापतींश्च भजे ॥

என்னுயிர் தந்தளித்தவரைச் சரணம் புக்கி யானடைவே யவர்குருக்கள் நிரைவணங்கிப், பின்னருளால் பெரும்புதூர் வந்தவெள்ளல் பெரியநம்பியாளவந்தார் மணக்கால் நம்பி, நன்னெறியையவர்க்குரைத்த உய்யக்கொண்டார நாதமுனிசடகோபன் சேனைநாதன், இன்னமுதத்திருமகளென்றிவர்களை முன்னிட்டு எம் பெருமான் திருவடிகளடைகின்றேனே.

कार्पण्यदोषोपहतस्वभावः (वा) पृच्छामि त्वां धर्म संमूढचेताः । यच्छ्रेयस्स्यान्निश्चितं ब्रूहि तन्मे शिष्य स्ते (ष्या ते) ऽहं शाधि मां त्वां प्रपन्नम् (न्नाम्) ॥

श्रीमद्वेदव्रतंसलक्ष्मण मुनेः प्राप्तागमान्तद्वयं तेन श्रीरघुपुङ्गवांघ्रियुगळे न्यस्तात्मरक्षाभरं । श्रीमच्छ्रीनिधियोगिवर्यं करुणालब्धाब्ज चक्राङ्कनं वन्दे शान्ति विरक्ति पूर्णमनघं श्रीरङ्गनाथं गुरुम् ॥

श्रीमद्वेदान्त रामानुज यतिनृपतेर्लब्ध वेदान्त युग्मं, श्रीमद्देवाधिनेतुश्चरण सरसिजे तेन दत्तात्म भारं । श्रीमच्छ्रीवासयोगीश्वर महितमहासंप्रदायैक निष्ठं वन्दे श्रीवासयोगीश्वर गुरुमनघं वत्सलं भव्यशीलं ॥

---

श्रीमच्छ्रीवासयोगीश्वरपदविनतं लब्धवेदान्तयुग्मं
श्रीपादूसेवि रामानुजमुनितिलकात्तत्पदन्यस्तभारम् ।
श्रीमच्छ्रीवासरामावरजमुनिमणेर्लब्धमोक्षश्रमं तं
श्रीमद्वेदान्तरामानुजयतिनृपतिं संश्रये ज्ञानवार्धिम् ॥ ३ ॥

श्रीमन्नाथमुनींद्रयामुनमुनिश्रीसंयमींद्रात्मनः श्री श्रीवासमुनींद्रदेशिकमणेः प्राप्तागमान्तद्वयम् । श्रीरङ्गेश पदे

तदर्पितभरं श्रीपादुकासेवक श्रीरामानुजयोगिनं गुरुवरं वन्दे दयासागरम् ॥ ४ ॥

श्रीरङ्गेशपदे समर्पितभरं श्रुत्यन्तरामानुजश्रीयोगींद्र-गुरूत्तमेनयमिनः श्रुत्यन्तविद्यात्मनः । प्राप्तश्रुत्यवतंस युग्म हृदयं श्रीवासरामानुजात् श्री श्रीवासमुनींद्रदेशिकमणिं श्रेयो निधिं संश्रये ॥ ५ ॥

श्रीमद्गोपालसूरेर्निरवधिकरुणावाप्तसत्संप्रदायं
श्रीमद्वेदान्तरामानुजयतिनृपतिस्सर्वतः स्थापयित्वा ।

यस्मिन्सत्संप्रदायम् सकलमुपदिशन्नंशतोऽनुप्रविष्टः
श्रीमच्छ्रीवासरामानुजमुनिमनघं तं भजे देशिकेन्द्रम् ॥ ६ ॥

गोपालदेशिकपताब्जमधुव्रतस्य प्राज्ञाविरक्तिकरुणा-मुखसद्गु णाब्देः वेदान्तलक्ष्मणमुनेः श्रितभागधेयं पादारविन्दयुगळं शरणं प्रपद्ये ॥ ७ ॥

श्रीकृष्णदेशिकपदांबुजभृङ्गराजं वेदान्तलक्ष्मणमुनींद्र कृपात्तबोधम् । त्र्यन्तदेशिकयतींद्रशठारिमूर्तिं गोपाल-देशिकशिखामणिमाश्रयामः ॥ ८ ।

श्रीरङ्गनाथगुरुपादसरोजहंसं वेदान्तदेशिकपदांबुज-भृङ्गराजम् । श्रीमद्यतींद्रशठकोपदयावलम्बं वेदान्तलक्ष्मण-मुनिं शरणं प्रपद्ये ॥ ९ ॥

कल्याणवहमस्माकं कारुण्यकलशाम्बुधेः ।
प्रपद्ये रङ्गनाथस्य पदपङ्कजतल्लजम् ॥ १० ॥

वन्दे श्रीरङ्गनाथार्यं श्रीरङ्गपतिदेशिकम् ।
श्रीवीरराघवाचार्यं वेङ्कटेशं महागुरुम् ॥ ११ ॥

रामानुजमनन्तार्यं ताताचार्यपरांकुशौ ।
अहोबिलाचार्यमहादयाधीशगुरूत्तमौ ॥ १२ ॥

श्रीमद्वरदविष्णवार्यं वात्स्यं वरददेशिकम् ।
ब्रह्मतन्त्रस्वतन्त्रार्यं श्रीमद्वेदान्तदेशिकम् ॥ १३ ॥

वादिहंसाबुवाहार्यं रङ्गराजगुरूत्तमम् ।
रामानुजार्यमात्रेयं प्रणतार्तिहरं गुरुम् ॥ १४ ॥

श्रीमल्लक्ष्मणयोगींद्रं श्रीपूर्णं यामुनं मुनिम् ।
श्रीरामपुण्डरीकाक्षौ श्रीमन्नाथशठद्विषौ ॥ १५ ॥

सेनेशलक्ष्मीलक्ष्मीशानपि येषां प्रसादतः ।
रहस्यत्रयसारे मे समुदञ्चति शेमुषी ॥ १६ ॥

विगाहे निगमान्तार्यविष्णुपादसमुद्भवाम् ।
रहस्यत्रयसाराख्यां त्रिस्रोतसमकल्मषाम् ॥ १७ ॥

अविज्ञातं विजानतां विज्ञातमविजानताम् ।
रहस्यत्रयसाराख्यं परं ब्रह्मास्तु मे हृदि ॥ १८ ॥

ஒரொன்றுதாப்புல் திருவேங்கடமுடையான்
பாரொன்றச்சொன்ன பழமொழியுள்—ஓரொன்று
தானேயமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப்போமளவும் வாழ்வு.

वैशाखे रोहिणीजातं काश्यपान्वयवारिधेः ।
इन्दुं श्रीपुण्डरीकांशं गोष्ठीपूर्णमहं भजे ॥

---

श्रीमते रंगनाथ महादेशिकाय नमः
श्रीमते श्रीनिवास महादेशिकाय नमः
श्रीमते वेदान्तरामानुजमहादेशिकाय नमः

श्रीमते पादुकासेवकरामानुज महादेशिकाय नमः
श्रीमते श्रीनिवासमहादेशिकाय नमः ॥

श्रीमते श्रीनिवासरामानुजमहादेशिकाय नमः ॥
श्रीमते वेदान्तरामानुजमहादेशिकाय नमः ॥

श्रीमते गोपालार्यमहादेशिकाय नमः ॥
श्रीमते निगमान्तमहादेशिकाय नमः ॥
श्रीमते भगवते भाष्यकाराय
महादेशिकाय नमः ॥
श्रीरङ्गनायक्यै नमः ॥
श्रीरङ्गनाथपरब्रह्मणे नमः ॥

श्रीरङ्गनाथदिव्यमणिपादुकाभ्यां नमः ॥

श्रीमच्छ्रीवासयोगिप्रवरसकरुणापाङ्गसङ्गादभङ्गा-
द्वेदान्तद्वन्द्वविद्यामधुरसलहरीचञ्चरीकायमाणः ।
तेनाचार्येण रङ्गप्रभुचरणयुगं दत्तरक्षाभरश्रीः
श्रीमच्छ्रीवासरामावरजमुनिमणिस्सन्ततं श्रेयसे स्यात् ॥

श्रीमते श्रीनिवासरामानुजमहादेशिकाय नमः ॥

---



ஸ்ரீமதே ஸ்ரீரங்கநாத மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸமஹாதேசிகாய நம.
ஸ்ரீமதே வேதாந்தராமாநுஜமஹாதேசிகாய நம.
ஸ்ரீமதே பாதுகாஸேவகராமாநுஜமஹாதேசிகாய நம.
ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸமஹாதேசிகாய நம.
ஸ்ரீரங்கநாத திவ்யமணி பாதுகாப்பாம் நம.

ஓம் கேசவாய நம: நாராயணாய நம: மாதவாய நம: கோவிந்தாய நம, விஷ்ணவே நம, மதுஸூதநாய நம, த்ரிவிக்ரமாய நம, வாமநாய நம, ஸ்ரீதராய நம, ஹ்ருஷீகேசாய நம, பத்மநாபாய நம, தாமோதராய நம.

ஓம் ஸரியை நம. அம்ருதோத்பவாயை நம. கமலாயை நம. சந்த்ரசோபிந்யை நம. விஷ்ணுபத்ந்யை நம. வைஷ்ணவ்யை நம. வராரோஹாயை நம. ஹரிவல்லபாயை நம. சார்ங்கிண்யை நம. தேவதேவிகாயை நம. மஹாலெக்ஷ்ம்யை நம. ஸுரஸுந்தர்யை நம.

சதுஸ்சக்ரம் நமஸ்யாமி கேசவம் கநகப்ரகப், நாராயணம் கநச்யாமம் சதுச்சங்கம் நமாம்யஹம். மாதவம் மணிபங்காபம் சிந்தயாமி சதுர்க்கதம், சந்த்ரபாஸம் சதுச்சார்ங்கம் கோவிந்தமபிஸம்ஸரயே. விஷ்ணும் சதுர்ஹலம் வந்தே பத்மகிஞ்சல்கஸந்நிபம். சதுர்முஸலமப்ஜாபம் ஸம்ஸரயே மதுஸூதநம். அக்நிவர்ணம் சது: கட்கம் பாவயாமி த்ரிவிக்ரமம், வாமநம் பாலஸூர்யாபம் சதுர்வஜ்ரம் விபாவயே. ஸ்ரீதரம் புண்டரீகாபம் சது: பட்டஸமாஸ்ரயே, சதுர்முத்கர மப்யேமி. ப்ரணமாம்யர்க்கரோசிஷம், தாமோதரம் சதுஷ்பாஸமிந்த்ரகோபநிபம் பஜே, வாஸுதேவமுபாஸோஹம் பூர்ணேந்த்வயுதஸந்நிபம்.

அஸ்மத் குருப்யோ நம, அஸ்மத் பரமகுருப்யோ நம, அஸ்மத் ஸர்வகுருப்யோ நம, ஸ்ரீமதே வேதாந்தகுரவே நம, ஸ்ரீமதே ராமாநுஜாய நம, ஸ்ரீமஹாபூர்ணாய நம, ஸ்ரீமத்யாமுநமுநயே நம, ஸ்ரீராமமிச்ராய நம, ஸ்ரீபுண்டரீகாக்ஷாய நம, ஸ்ரீமந்நாதமுநயே நம, ஸ்ரீமதே சடகோபாய நம, ஸ்ரீமதே விஷ்வக்ஸேநாய நம, ஸ்ரீயை நம, ஸ்ரீதராய நம.

அஸ்மத்தேசிகமஸ்மதீய பரமாசார்யாநசேஷாந்குரூந் ஸ்ரீமல்லக்ஷ்மணயோகிபுங்கவ மஹாபூர்ணௌ முநிம் யாமுநம், ராமம் பத்மவிலோசநம் முநிவரம் நாதம் சடத்வேஷிணம் ஸேநேசம் ச்ரியமிந்திரா ஸஹசரம் நாராயணம் சம்ச்ரயே.

அஸ்மத் குருபரமகுரூந் யதிவரபூர்ணௌ ஸயாமுநா ராமம், பத்மாக்ஷநாதசடஜித் ஸேநேசரமாரமா பதீபச்ச பஜே.

என்னுயிர் தந்தளித்தவரைச் சரணம் புக்கி
யானடைவே யவர் குருக்கள் நிரைவணங்கிப்
பின்னருளால் பெரும்பூதூர் வந்தவள்ளல்
பெரியநம்பி யாளவந்தார் மணக்கால்நம்பி
நன்னெறியை யவர்க்குரைத்த வுய்யக்கொண்டார்
நாதமுனி சடகோபன் சேனைநாதன்
இன்னமுதத் திருமகளென் றிவர்களை முன்னிட்டு
எம்பெருமான் திருவடிகளடை கின்றேனே.

கார்ப்பண்யதோஷோபஹதஸ்வபாவ: (வா) ப்ருச்சாமி த்வா தர்மஸம்மூடசேதா:, யத்ச்ரேயஸ்யாந் நிச்சிதம் ப்ரூஹி தந்மே சிஷ்யஸ்தே (சிஷ்யாதே) ஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்தம் (ப்ரபந்நாம்).

---

ஸ்ரீமத்வேதவஸப்ஸ லக்ஷ்மணமுனே ப்ராப்தா
[க்மாந்தத்வயம்;
தேனச்ரீ ரகுபுங்கவாங்க்ரியுகளே ந்யஸ்தாத்ம
[ரக்ஷாபரம்;
ஸ்ரீமச்ரீநிதி யோகிவர்ய கருணா லப்தாப்ஜசக்ராங்
[கனம்;
வந்தே சாந்தி விரக்தி பூர்ணமனகம் ஸ்ரீரங்க
[நாதம்குரும்.

2. ஸ்ரீமத் வேதாந்த்ராமாநுஜ யதிந்ருபதேர் லப்த
வேதாந்தயுக்மம்
ஸ்ரீமத்தேவாதிநேது: சரணஸரஸிஜே தேந
தத்தாத்மபாரம்
ஸ்ரீமச்ச்ரீவாஸ யோகீச்வர மஹித
மஹாஸம்பராதாயைகநிஷ்டம்

வந்தே ஸ்ரீவாஸ யோகீஸ்வர குருமநகம் வத்ஸலம்
பவ்யசீலம்.

3. ஸ்ரீமச்ச்ரீ வாஸயோகீச்வர பதவிநதம் லப்த
வேதாந்தயுக்கம்
ஸ்ரீபாதுாஸேவிராமாநுஜமுநிதிலகாத் தத்பதந்
யஸ்தபாரம்
ஸ்ரீமச்ச்ரீவாஸராமாவரஜமுநிமணோ் லப்த
மோக்ஷாஸ்ரமம் தம்
ஸ்ரீமத்வேதாந்தராமாநுஜ யதிந்ருபதிம்
ஸம்ஸ்ரயே ஜ்ஞாநவார்த்திம்.

4. ஸ்ரீமந்நாதமுநீத்ரயாமுகமுநி ஸ்ரீஸம்யமீந்த்ராத்மந
ஸ்ரீ ஸ்ரீவாஸமுநீந்த்ர தேசிகமணே: ப்ராப்தாக
மாந் தத்வயம்
ஸ்ரீரங்கேசபதே ததர்ப்பித்பரம் ஸ்ரீ பாதுகாஸேவக
ஸ்ரீராமாநுஜயோகிநம் குருவரம் வந்தே
தயாஸாகரம்.

5. ஸ்ரீரங்கேசபதே ஸமர்ப்பிதபரம் ச்ருத்யந்த
ராமாநுஜ
ஸ்ரீயோகீந்த்ர குருத்தமேந யமிந ச்ருத்யந்தவித்
யாத்மந:
ப்ராப்த ச்ருத்யவதப்ஸ யுக்ம ஹ்ருதயம் ஸ்ரீ வாஸ
ராமாநுஜாத்
ஸ்ரீ ஸ்ரீவாஸ முநீந்த்ர தேசிகமணிம் ச்ரேயோநி
திம் ஸம்ச்ரயே.

6. ஸ்ரீமத்கோபாலஸூரோ் நிரவதிகருணாவாப்த
ஸத்ஸம்ப்ரதாயம்
ஸ்ரீமத் வேதாந்தராமாநுஜ யதிப்ருபதிஸ் ஸர்வ
தஸ்தாபயிவா
யஸ்மிந் ஸத்ஸப்ப்ரதாயம் ஸகல முபதி
சந்நம்ஸதோ நுப்ராவிஷ்ட
ஸ்ரீமச்ச்ரீ வாஸ ராமாநுஜ முநிம நகம் தம் பஜே
தேசிகேந்த்ரம

7. கோபாலதேசிக பதாப்ஜ மதுவ்ரதஸ்ய
ப்ரஜ்ஞாவிரக்திகருணா ப்ரகஸத்குணப்தே
வேதந்தலக்ஷ்மணமுநே ச்ரிதபாகதேயம்
பாதாரவிந்தயுகளம் சரணம் ப்ரபத்யே.

8. ஸ்ரீக்ருஷ்ணதேசிக பதாம்புஜ ப்ருங்கராஜம்
வேதாந்தலக்ஷ்மணமுநீந்த்ர க்ருபாத்தபோதம்
த்ரய்யந்ததேசிக யதீந்த்ர சடாரிமூர்த்திம்
கோபாலதேசிக சிகாமணி மாச்ரயாம:

9 ஸ்ரீரங்கநாத குருபாத ஸரோஜ ஹம்ஸம்
வேதாந்த தேசிக பதாம்புஜ ப்ருங்கராஜம்
ஸ்ரீமத்யதீந்த்ர சடகோப தயாவலம்பம்
வேதாந்த லக்ஷ்மணமுநிம் சரணம் ப்ரபத்யே.

10. கல்யாணவஹமஸ்மாகம் காருண்ய கலசாப்புதே:
ப்ரபத்யே ரங்கநாதஸ்ய பதபங்கஜ தல்லஜம்.

11. வந்தே ஸ்ரீரங்கநாதார்யம் ஸ்ரீரங்கபதிதேசிகம்
ஸ்ரீ வீரராகவாசார்யம் வேங்கடேசம் மஹாகுரும்.

12. ராமாநுஜ மநந்தார்யம் தாதாசார்ய பராங்குசௌ
அஹோபிலாசார்ய மஹா தயாதீச குரூத்தமௌ.

13. ஸ்ரீமத்வரதவிஷ்ணவார்யம் வாத்ஸ்யம்வரததேசிகம்
ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ரார்யம் ஸ்ரீமத் வேதாந்த .
தேசிகம்.

14. வாதிஹம்ஸாம்புவாஹார்யம் ரங்கராஜகுருத்தமம்
ராமாநுஜார்ய மாத்ரேயம் ப்ரணதார்த்திஹரம் குரும்

15. ஸ்ரீமல்லக்ஷ்மணயோகீந்த்ரம் ஸ்ரீபூர்ணம்
யாமுநம்முநிம்
ஸ்ரீராம புண்டரீகாக்ஷௌ ஸ்ரீமந்நாதசடத்விஷௌ.

16. ஸேநேசலக்ஷ்மீ லக்ஷ்மீஸாநபி யேஷாம் ப்ரஸாதத:
ரஹஸ்யத்ரயஸாரே மேஸமுதஞ்சதி சேமுஷீ.

17. விகாஹேநிகமாந்தார்ய விஷ்ணுபாத ஸமுத்பவாம்
ரஹஸ்யத்ரயஸாராக்யாம் த்ரிஸ்ரோத ஸமகல்ஷாம்.

18. அவிஜ்ஞாதம் விஜாநதாம் விஜ்ஞாதமவிஜாநதாம்
ரஹஸ்யத்ரயஸாராக்யம் பரம் ப்ரஹ்மாஸ்து
மேஹ்ருதி.

19. சீரொன்று தூப்புற் திருவேங்கட முடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள்—ஓரொன்று
தானே யமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு.

20. வைசாகே ரோஹிணீஜாதம் காச்யபாத் வயவாரிதே,
இந்தும் ஸ்ரீபுண்டரீகாக்ஷம் கோஷ்டிபூர்ண
மஹம்பஜே.

---

ஸ்ரீமதே ரங்கநாத மகா தேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸமஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே வேதாந்தராமாநுஜமஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே பாதுகாஸேவகராமாநுஜமஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸமஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸராமாநுஜமஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே வேதாந்தராமாநுஜமஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே கோபாலார்யமஹாதேசிசாய நம:
ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே பகவதே பாஷ்யகாராயமஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே வகுளபூஷணமஹாதேசிகாய நம:
ஸ்ரீரங்கநாயக்யை நம:
ஸ்ரீரங்கநாதபரப்ராஹ்மணே நம:
ஸ்ரீரங்கநாததிவ்யமணி பாதுகாப்யாம் நம:

---

காடந்தேத்தி (திருக்குடந்தை) ஆண்டவன் தனியன்.

ஸ்ரீமச்ச்ரீவாஸயோகிப்வரஸகருணா ப்ராங்கஸங்காதபங்காத் வேதாந்தத்வந்த்வவித்யா மதுரஸலஹரீசஞ்சரீகாயமாண:, தேநாசார்யேண ரங்கப்ரபுசரணயுகே தத்தரக்ஷாபரஸ்ரீ ஸ்ரீமச்ச்ரீவாஸ ராமாவரஜ முநிமணிஸ்ஸந்ததம் சரேயஸே ஸ்யாத்.

ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸ ராமாநுஜ மஹாதேசிகாய நம.

---

ஸ்ரீரங்கம் பெரியாசிரமத்தில் விலைக்குக் கிடைக்கும் புஸ்தகங்களின் ஜாப்தா.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| வேதாந்த கௌஸ்துபம் .... ... | 6 | 0 | 0 |
| ஸ்ரீ கீதாபாஷியம் (3 Vols.) தமிழுரையுடன்... | 6 | 0 | 0 |
| ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் மூலம் (2-வால்) ப்ரமாணத்திரட்டுடன் ... | 3 | 0 | 0 |
| அதிகரண ஸாராவளி தத்வமுக்தாகலாபம் மூலம் | 0 | 6 | 0 |
| பஞ்சஸ்தவம் (மூலம்) ... ... | 0 | 6 | 0 |
| இயற்பா-1, 2 திருவந்தாதிகள் (அர்த்தத்துடன்) | 0 | 8 | 0 |
| ஸ்ரீமந்நம்மாண்டவனுடைய ப்ரபாவ சதகம் | 0 | 2 | 0 |
| தனியன் விவரணம் ... ... ... | 0 | 2 | 0 |
| ஆன்ஹீகார்த்த ப்ரகாசிகை ... ... | 2 | 8 | 0 |
| த்ரமிடோபநிஷத் பகவன் நாமஸஹஸ்ரம் ... | 1 | 0 | 0 |

இப்புஸ்தகங்களுக்கு தபால் சார்ஜ் வேறு.

## ஸ்ரீ ஆண்டவன் ஸந்நிதி உத்ஸவாதிகள்.

வைகாசி-மீ புஷ்யநக்ஷத்திரம் ஸ்ரீ நம்மாண்டவன் ஸ்ரீமத் வேதாந்தராமாநுஜ மஹாதேசிகனுடைய அர்ச்சாவதார உத்ஸவம்.

ஆடி-மீ கிருஷ்ணபஞ்சமி ஸ்ரீநம்மாண்டவன் ஸ்ரீமத்வேதாந்தராமாநுஜ மஹாதேசிகனுடைய கைங்கர்ய மஹோத்ஸவம்.

ஆவணி-மீ மூலநக்ஷத்திரம் ஸ்ரீ திருக்குடந்தை ஆண்டவன் ஸ்ரீமத் ஸ்ரீநிவாஸராமாநுஜமஹாதேசிகனுடைய திருநக்ஷத்திர மஹோத்ஸவம்

ஆவணி-மீ பூரட்டாதி நக்ஷத்திரம் ஸ்ரீ நம்மாண்டவன் ஸ்ரீமத் வேதாந்த ராமாநுஜ மஹாதேசிகனுடையவும் திருநக்ஷத்திர மஹோத்ஸவம்.

ஆவணிமீ ரேவதி ஸ்ரீதென்பிரை ஆண்டவன் திருநக்ஷத்திரம்

புரட்டாசி-மீ உத்திரட்டாதி ஆக்கூர் ஆண்டவன் ஸ்ரீமத் ஸ்ரீநிவாஸராமாநுஜ மஹாவேசிகனுடைய திருநக்ஷத்திர மஹோத்ஸவம்.

ஐப்பசி-மீ உத்திரட்டாதி திருத்துரைப்பூண்டி ஆண்டவன் ஸ்ரீமத் ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹாதேசிகன் திருநக்ஷத்திரம்.

கார்த்திகை மக நக்ஷத்திரம் ஸ்ரீ சின்னாண்டவன் ஸ்ரீமத் பாதுகாஸேவகராமாநுஜமஹாதேசிகனுடைய திருநக்ஷத்திரம்.

தை-மீ க்ருஷ்ண திரயோதசி ஸ்ரீ பெரியாண்டவன் ஸ்ரீமத் ஸ்ரீநிவாஸ மஹாதேசிகனுடைய கைங்கர்யம்.

,, சுக்ல ஸப்தமி ஸ்ரீ சின்னாண்டவன் கைங்கர்யம்.

மாசி-மீ கிருஷ்ண த்வாதசி ஸ்ரீ திருக்குடந்தை ஆண்டவன் கைங்கர்யம்.

,, புஷ்யநக்ஷத்திரம் ஸ்ரீ பெரியாண்டவன் ஸ்ரீமத் ஸ்ரீநிவாஸமஹாதேசிகள் திருநக்ஷத்திரம்.

பங்குனிமீ கிருஷ்ண த்வாதசி ஸ்ரீ ஆக்கூர் ஆண்டவன கைங்கர்யம்.

## அனுபந்தம்

### 30 வது பக்கம் ஸாக்ஷாத் ஸ்வாமி அல்லது ஞானவைராக்யானுஷ்டான சேவதியான ஸ்ரீவேதாந்த ராமாநுஜ மஹாதேசிகன்

திருநாராயணபுரத்தைச் சேர்ந்த கொண்டல் அக்ரஹாரத்தில் சித்திரைத் திருவாதிரையன்று திருவீதியில் எழுந்தருளின ஸ்ரீ பகவத் ராமானுஜரின் அர்ச்சா மூர்த்திக்கு இந்த மஹநீயருடைய திருத்தகப்பனார் உபஹாரம் ஸமர்ப்பிக்கும் ஸமயத்திலேயே இம்மஹானும் அவதரித்தார். இதைக்கணித்து பிரபல ஜோதிஷரான இவருடைய திருத்தகப்பனார் "ஸாக்ஷாத் ஸ்ரீபகவத் ராமானுஜரே இம்மஹானாக திருவவதாரம் செய்துள்ளார்" என்று ஸாதித்தார். இதைக்கொண்டு இம்மஹானை ஸாக்ஷாத் ஸ்வாமி என வ்யவஹரிப்பது.

### 31வது பக்கம்-திருக்குடந்தை தேசிகன் (கோபாலார்ய மஹா தேசிகன்)

இத்திருக்குடந்தை தேசிகன். என்ற மஹானானவர், நம் ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகனுடைய மாதுலராகிய (மாமாவாகிய) வாதிஹம்ஸாம்புவாஹருடைய 14 வது தலைமுறையின் ஜனித்த மஹானாகிய ஸ்ரீ கிருஷ்ணமாசாரியாருடைய மூன்று புத்திரர்களுக்குள் மத்யம புத்திரராக புட்டாசி மாதம் பூராட நக்ஷத்திரத்தில் அவதரித்தார். இம் மஹான் கிரகஸ்தாசிரமத்திலிருந்து கொண்டே ஸந்யாஸாசிரமம் பெற்ற ஸ்ரீரங்கம் ஆண்டவன் வேதாந்த ராமானுஜமஹா தேசிகன் முதலியோருக்கு ஆசாரியகம் செய்துகொண்டு எழுந்தருளியிருந்தார். இம்மஹானுக்கு கோபாலார்ய மஹாதேசிகன் என்ற திருநாமம் இருந்தாற்கூட இவருடைய எல்லையற்ற ஞான வைராக்யானுஷ்டான தேஜஸ்ஸைக் கண்டு ஸ்ரீ வைஷ்ணவ ஸமூஹத்தார் அனைவரும் இவரைத் திருக்குடந்தையில் எழுந்தருளியிருந்தபடியால் "திருக்குடந்தை தேசிகன்" என்று அழைக்கத் தொடங்கினார்கள்.

## ஓர் விசேஷ ஸம்பவம்

ஒருஸமயம் திருக்குடந்தையில் ஸ்ரீ ஆராவமுதனுக்கு ஸம்ப்ரோக்ஷணை செய்ய நேர்ந்தது. அக்காலத்திலுள்ள திருக்குடந்தையிலும் மற்ற திவ்ய தேசங்களிலுமிருந்து எழுந்தருளியிருந்த ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்தார் அனைவரும் ஒன்று சேர்ந்து மஹாபாகவத கரஸ்பர்சமும் ஆலிங்கனமும் ஏற்பட்டால் அர்ச்சா மூர்த்தியானவர் விசேஷ ஸேவை ஸாதிப்பார் என்றும் இதற்கு நம்திருக்குடந்தை தேசிகனே இந்த அர்ச்சா மூர்த்தியை ஆலிங்கனம் செய்வதற்கு உத்தமாதிகாரியென்றும் உரைத்தார்கள். அப்படியே திருக்குடந்தை தேசிகனும் அங்கிருந்த மஹாபாகவதர்களுடைய நியமனத்தை சிரஸால் வஹித்து ஸ்ரீ ஆராவமுதப் பெருமானை ஆலிங்கனம் செய்து கொண்டார். உடனே அர்ச்சா மூர்த்தியும் திவ்யாச்சரியஸேவை ஸாதிக்கத்தொடங்கினார்.

## 32வது பக்கம்-ஸேதுநந்த ராமானுஜ மஹா தேசிகன் (வழுத்தூர் ஆண்டவன்)

இம்மஹான் ஸ்ரீரங்கத்தில் கொள்ளிடக்கரையில் நாணற்புதருக்குள் வெகுகாலம் எழுந்தருளியிருந்ததால் ஸ்ரீரங்கம் ஆண்டவன் என்றும் சொல்வது வழக்கம். இம்மஹானே ஸ்ரீமதாண்டவன் ஸம்ப்ரதாயஸ்தருக்கு கூட ஸ்தாவார்

## ஓர் விசேஷ ஸம்பவம்

இம்மஹான் தமது சிஷ்ய ஜனங்களுக்கு ஸ்ரீ பாஷ்ய பகவத் விஷய மந்த்ரார்த்தங்களை விதிப்படி ஸம்ப்ரதாய ப்ரவசனம் செய்து கொண்டிருக்கும் காலத்தில், சில தினங்களாக அழகான பெரும்படத்தோடு கூடிய ஓர் கிருஷ்ண ஸர்ப்பம் தினந்தோறும் காலக்ஷேபகாலத்தில் வந்து தன் படத்தை விரித்து ஆடிக்கொண்டே சிரவணம் செய்து கொண்டிருந்தது. பக்கத்திலுள்ளவர்கள் பயந்து ஓடினாலும் நம் ஸ்வாமியானவர் அவர்களுக்கு அபயப்ரதானம் செய்து காலக்ஷேபம் ஸாதித்துக்கொண்டேயிருப்பது வழக்கம். ஆனால் அந்த ஸர்ப்பமா

னது க்ரந்த ஸமாப்தி காலத்தில் (சாற்றுமுறையன்று) தன் படத்தை கீழே யடித்து நம் ஸ்வாமியை வணங்கி நின்றது. இந்த ஸர்பத்தின் இங்கிதத்தை அறிந்த நம் ஸ்வாமியானவர் ஸ்ரீ பெருமானிடத்தில் ப்ரார்த்தித்து அந்த ஸர்ப்பத்திற்கு பரஸமர்ப்பணம் செய்து வைத்து அஜ்ஜீவனை உஜ்ஜீவிக்கச் செய்தார்.

## 50வது பக்கம். ஸ்ரீமந் நம்மாண்டவன் வேதாந்த ராமாநுஜ மஹா தேசிகன்

இம் மஹாநுனவர் ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த ஸ்ரீ பாதுகாஸஹஸ்ரம் என்ற திவ்ய ஸூக்திக்கு த்ரவிடபாஷையில் ஓர் அழகான வியாக்யானம் செய்துள்ளார். அவ்வியாக்கியானம் முழுமையும் ஸ்ரீபாதுகாஸஹஸ்ரம் என்ற கிரந்தமானது ஸ்ரீசடகோபன் முதலான ஆழ்வார் ஆசார்யர்களுடைய சிறந்த பெருமையைத் தெரிவிக்கின்றது என்ற லக்ஷ்யத்துடன் 860 ஸ்லோகங்களுக்கு பொருள் ஸாதித்துள்ளார். இவ்விஷயத்தையே அடியொத்தி அன்னவருடைய திருவடி எங்களாண்டவன் ஸ்ரீநிவாஸ மஹாதேசிகனும் பிற்பகுதியான 148 ஸ்லோகங்களுக்கு அம்முறையிலேயே தாத்பர்யத்தை அருளிச் செய்துள்ளார்.

# ஒரு புகழுரை

1. ஸ்ரீ உ. வே. பரவஸ்து ஸ்ரீனிவாசாச்சாரியாரவர்கள் எழுதியிருக்கும் "முனித்திரய ஸித்தாந்தமும், ஸ்ரீமதாண்டவன் ஸம்பிரதாய சரித்திரமும்" என்ற புத்தகத்தின் சில பாகங்களை பிரசுரத்திற்கு முன்பே பார்க்கும் ஒரு பேறு எனக்குக் கிட்டியது. இது ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கும் மற்றும் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயத்திற்கும் ஒரு சிறந்த கிரந்தமாயிருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆசிரியர் மிகவும் பரிசிரமப்பட்டு ஆச்சாரியார்களின் திருவுருவப் படங்களைப் பெற்று அவைகளையும் பதிப்பித்திருக்கிறார். அதோடு ஒரு குரு பரம்பரா வம்சாவளியும் நூலோடு அனுபந்தித்திருக்கிறார்.

2. புத்தகம் எளிய தமிழ் நடையில் லளிதமாக அமைந்திருக்கிறது. அதோடு இதில் ஒரு ஆழ்ந்த கருத்தும் இருக்கிறது. ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்தம் நாதமுனி, யாமுனாசார்யர், ராமானுஜ முனி, இந்த முனித்ரயங்களின் மதமேயல்லாது நவீன காலத்தில் ஏற்பட்டதல்ல. எல்லா ஸ்ரீ வைஷ்ணவாசார்யர்களும் இந்த மூன்று குருக்களையும் ஆசிரயித்தவர்கள்தாம். அதனால் தென்னாசாரிய சிஷ்யர்களோ, அல்லது நிகமாந்த தேசிக சித்தாந்திகளோ அல்லது முனித்ரயர்களோ எல்லாரும் இந்த ஸ்ரீ வைஷ்ணவ சமூகத்தில் சமரஸமாக இருக்கவேண்டும் என்கிற ரஸம் இந்த கிரந்தத்தில் வெளிப்படுகிறது.

3. ஸ்ரீமதாண்டவன் ஸந்நிதியில் அஹோபில மடம் அழகிய சிங்கரிடம் ஸந்நியாசம் பெற்ற யதிகள் இருந்திருக்கிறார்கள். அதே மாதிரி ஸ்ரீமதாண்டவனிடம் ஸந்நியாசம் பெற்று அழகிய சிங்கராயும் எழுந்தருளியிருக்கிறார்கள். இந்த விஷயங்களெல்லாம் இந்த கிரந்தத்தில் அழகாக வெளியிட்டிருக்கிறார்.

4. இது ஆஸ்திக ஸமூகத்துக்கே, முக்கியமாக ஸ்ரீ வைஷ்ணவ சமுதாயத்துக்குக் கிடைத்த ஒரு சிறந்த ரத்னம்.

5. தற்பொழுதிருக்கும் சூழ்நிலையில் ஆஸ்திக-நாஸ்திக வேற்றுமையே முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயம். நாஸ்திகம் பல ஹேதுக்களாலும் கால விசேஷங்களாலும் தலை தூக்கினதுபோல் நிற்கிறது. ஆஸ்திக புத்தியுள்ளவர்களெல்லாம் ஒன்றுகூடி அதை நசுக்கவேண்டிய ஆவசியகமேற்பட்டிருக்கிறது. அந்நிலையில், ஆஸ்திகர்களுக்குள்ளே, அதன் உட்பிரிவுகளுக்குள்ளே வைஷம்யம் பாராட்ட இது தருணமல்ல. ஸ்வாமிகள் வியக்தமாக ஸ்ரீ வைஷ்ணவ சமூகம் ஒன்றுயிருக்க ஹேதுக்களை சொல்லுகிறார். "ஆனாலும் சாஸ்திர மரியாதையை உத்தேசித்து சில வேற்றுமைகள் ஏற்படும் காலத்து அவைகளையும் பொருமையுடன் பொருத்துக்கொள்வோம்" என்கிறார் மிகுந்த பரந்த நோக்கத்துடன்.

6. அந்தப் புத்தகத்திலிருக்கும் நடையின் போக்கைக் காட்ட ஒரு பாகத்தைக் கீழே தந்துள்ளேன்.

"இவ்வாறு ஸ்ரீமச் சின்னாண்டவன் திருநாட்டை யலங்கரித்த பிற்பாடு ஸ்ரீமதாண்டவனுடைய ஸம்பிரதாயப் பிரவர்த்தகர்கள் ஒருவருமில்லை. காசு, பணம் என்ற வார்த்தைக்கே இடமில்லை. ஞான விரக்தி நிதிகளாயிருந்து கொண்டு ஸ்தாபிக்க ஒரு வியக்தியும் அகப்படவில்லை. சுமார் 12 வருஷங்களாயும் அநேகவிதமான விக்னங்களால் ஆசிரம ஸ்வீகாரம் செய்துகொள்ள ஒரு பரமை கார்த்தியும் முன் வரவில்லை."

7. இந்த கிரந்தம் ஸ்ரீமான் ஆச்சாரியார் வைணவ உலகத்துக்கு ஒரு செய்யாமற் செய்த உதவி. "செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும், வானகமும் மாற்றலரிது". இந்தப் புத்தகத்தில் திருக்குறளை வட

மொழியில் தர்ஜமா செய்த ஒரு பெரியாரைப் பற்றியும் வருகிறது என்பதையும் குறிப்பிடத்தக்கது.

8. பரவஸ்து ஸ்வாமியின் கல்வி வன்மை மிகவும் ஆழ்ந்தது அவருக்கு ஊக்கம் கொடுத்தால் ஸ்ரீ வைஷ்ணவ சம்ப்ரதாயத்திற்கு அமிர்தம் போன்ற அநேக தத்துவங்களையும், விஷயங்களையும் வெளியிட்டு நம்மைப் போன்ற பிறவிப் பெருங் கடலைத் தீர்க்கும் வழியை சுலபமாய்க் காட்டுவார்.

9. ஸ்ரீமந் நாராயணனும், ஸ்ரீ பிராட்டியாரும் அவரை அநேக காலம் திட சரீரராய், தெளிவுள்ள மனத்தினராய் வைத்து ஆஸ்திக மகா ஜனங்களெல்லாம் பிறவிப் பயன் எய்துமாறு அனுக்ரஹிக்க வேணுமாய்ப் பிரார்த்தித்துக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

(Sd) **ஸ்ரீ பார்த்தசாரதி தாஸன்,**

**2**

இந்நூல் முனித்ரய ஸித்தாந்த சரித்திரம் அறியாத இருள் உலகத்திற்கு ஓர் ஸூர்யோதயத்திற்கு ஒப்பாகும்.

எல்லாவைஷ்ணவர்களும் தங்களுக்குள்ளிருக்கும் சிற்சில வேற்றுமைகளை பெரிதாக்காமல், ஒன்றுபட்டு வைஷ்ணவ ஸித்தாந்தத்தின் அருமையை அனுபவிப்பதேமேல். சுருங்கச் சொல்லில் நாஸ்திக வாதம் அதிகம் ஆகிக்கொண்டிருப்பதைத் தடைப்படுத்த வேண்டிய சமயத்தில் நமக்குள்ள சிறிய வேற்றுமையைப் பெரிது படுத்துவதால் ஏற்படும் இன்னல்களைச் சொல்ல வேண்டிய அவச்சியமே இல்லை. வைஷ்ணவர்களுடைய இந்தக் கடமையை ஞாபகமுறுத்தும் இந்நூல்.

தென்னாசாரிய ஸம்ப்ரதாயஸ்தரையும் தேசிக ஸம்ப்ரதாயஸ்தரையும் ஒன்று சேர்க்கிற வஜ்ரலேபமுமாகும்.

Dehra Dum,
15—9—52

**V. RANGAM,** M. A.,
*Dy. Supdtg. Survayor,*
Survey of India.

# AN APPRECIATION

It should indeed be a matter of great elation for whole of the Vaishnavite world that a publication of this nature has come to be published. A document of great moment, it has been the outcome of much close study and careful scrutiny of the relevant old and authentic texts on the subject. The reality about the origin and growth of the "*Munithraya Sampradaya*" has of late been gradually receding to its background and slowly being overshadowed by certain unauthentic and spurious versions concerning the same verity. "Truth is a gem that loves the deep"—This timely publication is intended but to propound the real truth about the origin of the Munithraya Sampradaya and dispel the wrong notions that have gained currency among certain sections of the Vaishnavite community. This publication proves beyond any shadow of doubt that the philosophy and teachings of the three great Acharyas namely Shrimath Nathamuni, Shrimath Yamunamuni and Shrimath Ramanujamuni, alone form the basis and foundation of the Munithraya Sampradaya. A proper realisation of this fuudamental fact will no doubt help and promote the development of the closest ties of paternal feelings and unity all through out the Vaishnavite world. This valuable publication bids fair to contribute in no small measure towards the attainment of this much coveted aim and end. The author of this booklet therefore richly deserves the gratitude and congratulations of all thinking and well meaning Vaishnavites.

The illustrious galaxy of the holy Andavan Hierarchy has been the outstanding exponant of this great Sat-

Sampradaya. An attempt has also been made in this booklet to depict in some detail the life histories of the famous Andavans who are so well renowned all over South India as having held aloft the banner of this great Sampradaya during all these decades "Lives of great men all remind us how we can make our lives sublime". A study of the soul-stirring life sketches of the Godly saints of the Andavan hierarchy should certainly inspire the readers to make determined effort to so order their lives that they become well and usefully lived in the service of God and His creation.

A DEEVOTEE.

7—9—52.

# ஸ்ரீ வைஷ்ணவ குரு பரம்பரை

ஸ்ரீதரன்—(ஸ்ரீமந் நாராயணன்)

பெரிய பிராட்டியார் (மஹா லக்ஷ்மி)

விஷ்வக்ஸேநர்—(ஸேனை முதலியார்)

நம்மாழ்வார்

ஸ்ரீமந் நாதமுனிகள் 1
(முனித்ரயத்தில் 1)

உய்யக்கொண்டார்

மணக்கால் நம்பி

ஸ்ரீ ஆளவந்தார் 2
(முனித்ரயதில் 2)
(ஸ்ரீமத் யாமுனாச்சாரியார்)

ஸ்ரீ பாஷ்யகாரர் (ஸ்ரீ ராமானுஜர்) 3
(முனித்ரயத்தில் 3)

- எம்பார்
- கூரத்தாழ்வான்
- கிடாம்பி ஆச்சான்

எம்பார் / கூரத்தாழ்வான்:

- ஸ்ரீ பராசரபட்டர்
- நஞ்ஜீயர்
- நம்பிள்ளை
- வடக்குத் திருவீதிப்பிள்ளை
- பிள்ளைலோகாசார்யர்
- திருவாய்மொழிப்பிள்ளை
- மணவாளமாமுனிகள்

கிடாம்பி ஆச்சான்:

- கிடாம்பி ராமாநுஜர்
- கிடாம்பி ரங்கராஜர்
- கிடாம்பி அப்புள்ளார்
- ஸ்வாமி ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன்

# ஸ்ரீ முநித்ரய ரஹஸ்ய குரு பரம்பரை

ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன்

|

ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஜீயர்

|

கடிகாசதம் அம்மாள்

|

வரத விஷ்ணவாசார்யர்

|

மஹா தயாநிசர்

|

வாத்ஸ்ய அஹோபிலாசார்யர்

|

*ஷஷ்டபரங்கு ஸ்வாமிகள்

|

தாத தேசிகன்

|

வாத்ஸ்ய அநந்தார்யர்

|

ராமானுஜார்யர்

|

மஹாகுரு வெங்கடாசார்யர் (பரவஸ்து)

|

வீரராகவாசார்யர்

|

ஸ்ரீரங்கபதி தேசிகர்

|

ரங்கநாத ஸ்வாமி

|

வேதாந்த ராமானுஜ் (ஸாக்ஷாத்) ஸ்வாமி (ஸ்ரீரங்கம்)

|

ஸ்ரீ கோபாலார்யமஹாதேசிகன் (திருக்குடந்தை)

## ஸ்ரீ கோபாலார்யமஹாதேசிகன் (திருக்குடந்தை)

- ஸ்ரீநிவாஸ மஹா தேசிகன் (வத்தராயிருப்பு)
- ஸ்ரீரங்கநாத மஹா தேசிகன் (செய்யானம்)
- வேதாந்த ராமானுஜ மஹா தேசிகன் ஸ்ரீரங்கம் ஆண்டவன் (வழுத்தூர்)
  - ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹா தேசிகன் திருத்துறைப்பூண்டி ஆண்டவன் * (விளக்குடி)
  - வங்கிபுரம் ஆண்டிகாடு ஸ்ரீவேதாந்த ராமானுஜ மஹா தேசிகன்
    - ஸ்ரீரங்கராமானுஜ மஹா தேசிகன் (சேதாண்டிபட்டி)
      - ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹா தேசிகன் (திருவஹீந்திர புரம்)
        - ஸ்ரீநிவாஸ மஹா தேசிகன் (கருடபுரம்)
      - ஸ்ரீவரத ராமானுஜ மஹா தேசிகன் (டெங்கணிக் கோட்டை.)
      - வேதாந்த ராமானுஜ மஹா தேசிகன் (திருப்பதி)
        - ஸ்ரீரங்கராமானுஜ மஹா தேசிகன் (கோழியாலம்)
  - அண்ணயார்ய மஹா தேசிகன் (நாவல் பாக்கம்)
    - ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹா தேசிகன்

---

* இந்த ஸ்வாமியின் சிஷ்ய பரம்பரைப் படம் அடுத்த பக்கம் பார்க்க

ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹாதேசிகன்
(விளக்குடி)
(திருத்துறைப்பூண்டி ஆண்டவன்)

|

ஸ்ரீநிவாஸ மஹா தேசிகன் (பெருமாள் கோவில்)
(பெரிய ஆண்டவன்)

|

நாராயண மஹா தேசிகன்

ஸ்ரீ பாதுகக ஸேவக ராமானுஜ மஹா தேசிகன்
(சின்ன ஆண்டவன்)
(வேளிய நல்லூர்)

ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹா தேசிகன்.
(காடாந்தேத்தி)

|

ஸ்ரீ வேதாந்த ராமானுஜ
மஹா தேசிகன் தேரிழந்தூர் (நம்மாண்டவன்)

|

ஸ்ரீநிவாஸ மஹா தேசிகன்
ஆக்கூர் (எங்களாண்டவன்)

|

ஸ்ரீமதாண்டவன்
ஸ்ரீரெங்கனுத மஹாதேகிகன் (தென்பிரை)

## Some Appreciations.

---

### श्रीमद् श्रीरंगनाथ, श्रीनिवास, वेदान्त रामानुज महादेशिकेभ्यो नमः ।
### श्रीरंगनाथ दिव्यमणि पादुकाभ्यान्नमः
### — अभिनन्दन पत्रिका —

ஸ்ரீ உ. வே. பரவஸ்து ஸ்ரீநிவாஸாச்சார் ஸ்வாமி எளிய தமிழ் நடையில் எழுதியிருக்கும் ஸ்ரீமந் முனித்ரய ஸித்தாந்தமும் அதன் ஸ்தாபனாசார்ய சரித்திரமும் எல்லா ஆஸ்திகர்களாலும் மிகவும் பாராட்டத்தக்க நூல். ஆஸ்திகர்களுக்கெல்லாம் சுருதியின் ஆக்ஞை "**आचार्यवंशोज्ञेयः आचार्याणां आसावसावित्त्याभगवत्तः**" என்று. அதாவது ஆசார்ய வம்சமானது இன்னார் இன்னார் என்று பகவான் வரையிலும் தெரிந்து கொள்ள வேண்டுமென்பது. ஸத் ஸம்ப்ரதாயத்துக்கு முதலாசார்யன் பகவான் ஸ்ரீமந் நாராயணனே. பகவான் பெரிய பிராட்டியாருக்கு உபதேசம் செய்தார். பிராட்டியின் உபதேசம் விஷ்வக்ஸேனருக்கு, விஷ்வக்ஸேனருடைய உபதேசம் பெற்றவர் நம்மாழ்வார். நம்மாழ்வாருடைய யோக தசையில் உபதேசம் பெற்றவர் ஸ்ரீ நாதமுனிகள். ஸ்ரீ நாத முனிகளுடைய ப்ரசிஷ்யர் ஸ்ரீ யாமுந முனிகள். ஸ்ரீ யாமுன முனிகளைத்தான் ஸ்ரீ ஆளவந்தார் என்று வ்யவஹரிப்பது. ஸ்ரீயாமுன முனிகளின் ப்ரசிஷ்யர் ஸ்ரீ ராமாநுஜ முனிகள் அதாவது ஸ்ரீ பெரும்பூதூர் வந்த வள்ளலாகிய ஸ்ரீ எம்பெருமானார். ஸ்ரீ நாதமுனிகளையும் ஸ்ரீ யாமுன முனிகளையும் ஸ்ரீராமாநுஜ முனிகளையும்தான் முனித்ரயம் என்று சொல்வது. இதர ஆசார்யர்கள் இருக்கச் செய்தேயும் இம்மூன்று ஆசாரியர்களும் உபய வேதாந்த ப்ரவர்த்தனத்தில் செய்திருக்கும் மஹோபகாரம் அஸாதாரணம். ஆகையால் தான் நம் தேசிகன் இம்மூவரையும் குரு பரம்பரா ஸாரத்தில் விசேஷமாகக்கொண்டாடினது. நாமாக முனித்ரயம் எவர் எவர் என்று நிர்மாணிப்பதாயிருந்தால்மன்னசிலர்களானதால் முனிகள் என்று கொண்டாடத்தகுந்த தமிழ் வேதப்ரவர்த்தகரான ஸ்ரீ நம்மாழ்வாரையும் ப்ரும்ம ஸூத்திரத்திற்கும், கண்ணன் கீதைக்கும், ஸம்ஸ்கிருதத்தில் பாஷ்யம் செய்தருளிய ஸ்ரீ பாஷ்யகாரரையும் தமிழிலும் ஸம்ஸ்கிருதத்திலும் ப்ராக்ருதத்திலும் அநேக கிரந்தங்களைச்செய்து "மன்னுபுகழ் பூதூரான் மனமுகப்போனும் செஞ்சொல் தமிழ்மறை தெளிந்துரைப்போனுமாகிய நம் ஸ்வாமி தேசிகனுமென்றே சொல்லத்துணியலாம். ஆனாலும்

வேதாந்த குருவாகிய நம் தேசிகனே எந்த மூன்று முனிகளைப் போற்றி தொல்வழி காட்டியிருக்கிறரோ அதுவே நாம் அனைவரும் கடைப் பிடிக்க வேண்டிய நல்வழி.

முனித்ரய ஸித்தாந்தமென்பது திருக்குடந்தை தேசிகன் காலத்தில் தான் ஏற்பட்டதென்பது ப்ரமாண விருத்தமென்று அழகாக ஸ்ரீ பர வஸ்து ஸ்வாமி எழுதியிருக்கிறர்.

ஒவ்வொரு ஆசார்யன் விஷயமாகவும் அவர்களைப்பற்றித் தெரிந்த சரித்திர விவரங்களை விரிவாக எழுதியிருக்கிறர். சில ஆசார்யர்க ளுடைய சரித்திரம் விவரமாக கிடைக்கவில்லை என்பது நமது தௌர்பாக்யமே. "गुरुं प्रकाशयेत् धीमान्" என்கிற கட்டளையில் எல்லா பூர்வாசார்யர்களுடைய சிஷ்யர்களும் நம் பரவஸ்து ஸ்வாமி போல் இருந்திருந்தால் சிலரைப்பற்றி விவரங்கள் கிடைக்கவில்லை என்கிற குறைவு இல்லாமல் இருந்திருக்கும். ஸமீப காலத்தில் எழுந் தருளியிருந்த நம் ஆண்டவன் விஷயமாக ஆஸ்திகர்கள் ஒரு கிரந்தம் தயாரிக்க நிச்சயித்திருப்பதாகத் தெரிகிறது. இச்சரித்திரத்திற்காக அவரவருக்குத் தெரிந்த விவரங்களை ஸ்ரீரங்கம் ஸ்ரீ பாதுகாசிரமத்திற்கு அனுப்பினல் எதிர்காலத்து ஸந்ததிகளுக்கெல்லாம் அம்மஹானின் சரித்திரம் இன்னும் விரிவாகத் தெரிந்துகொள்ள பாக்யம் ஏற்படும்.

முனித்ரய ஸித்தாந்தம் என்று ஓர் ஸத்ஸம்ப்ரதாயம் இருக்க "ஆண்டவன் ஸம்ப்ரதாயம்" என்று ஒரு பெயர் எப்படி வழங்கி வரு கிறது என்பதையும் ஸ்ரீபரவஸ்து ஸ்வாமி ஐயமற எடுத்துக் காட்டி யிருக்கிறர்.

அதாவது திருக்குடந்தை தேசிகனை வழுத்தூர் ஸ்வாமி ஆச்ரயிக்கும் ஸமயத்தில் "தீரா வினைகள் தீர என்னையாண்டாய் திருக்குடந்தை ஊரா, உனக்காட்பட்டும் அடியேன் இன்னும் உழல்வேனே" என்ற ஸ்ரீ சடகோபனுடைய பாசுரத்தை அநுஸந்தித்துக்கொண்டு ஆச்ரயித்தபடி யால் வழுத்தூர் ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மகாதேசிகனுக்கு ஸ்ரீ ஆண்ட வன் என்ற திருநாமம் ஏற்பட்டதாகவும் அதுமுதல் அந்த பரம்பரை யில் வரும் ஆசார்யர்களுக்கெல்லாம் **ஆண்டவன்** என்ற திருநாமம் நிலையாக ஏற்பட்டிருப்பதாயும் இந்நூலால் வ்யக்தமாகத் தெரிகிறது.

ஆண்டவன் பரம்பரையிலும் சரி, வேறு எந்த பரம்பரையிலும் சரி, தபோ மூர்த்தியாய் ச்ரேயோ நிதியாய், 57 சாதுர்மாஸ்யங்கள் யதி சக்ரவர்த்தியாய் சமீப காலத்தில் ஜகத்பிரசித்தமாய் விளங்கின மகான் பெரியாண்டவன் என்று பெயர் பெற்ற ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மகா தேசிகனைத் தவிர வேறெருவருமில்லை. அதே பரம்பரையில் அவதரித்

தது ஞான சமுத்ரம் என்று விச்வவிக்யாதியுள்ள நம் ஆண்டவன் என்கிற தேரெழுந்தூர் ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மகா தேசிகன். இந்த ஸ்வாமி அவதரித்த ஆவணி, பூரட்டாதியின் மேன்மையும் ஜோதிஷ சாஸ்திர ஆராய்ச்சிப்படி இந்நூலில் நன்கு காட்டப்பட்டிருக்கிறது.

இந்த ஸ்வாமி திருவடிகளில் ஆச்ரயித்தவர்களில் சில ஸ்மார்த்தர்களும் தென் ஆசார்ய ஸம்ப்ரதாயஸ்தர்களும் உண்டு. ஸத் சிஷ்யர்கள் ஸதாசார்யர்களை ஆச்ரயிப்பது என்பது ஸத் ஸம்ப்ரதாய சம்மதமான ஸந்மார்க்கம். ஒருவருடைய சிஷ்யர் இன்னொருவருடைய சிஷ்யராக ஆகக்கூடாது என்பதெல்லாம் கேவல வைதீக கார்யங்களை, பிரதிப்பிரயோஜனத்தை தஅபேக்ஷித்து செய்து வைக்கும் உபாத்யாயர்களின் கட்டுப்பாடு.

பரமார்த்த விஷயத்தில் க்யாதி லாப பூஜா நிரபேக்ஷராய் ப்ரவ்ருத்திக்கும் ஸதாசார்யர்களுக்கு இது ஒருக்காலும் பொருந்தாது. பொருந்துமேயானால் ஸ்ரீ பாஷ்யகாரரே ஸ்ரீ வைஷ்ணவராக ஆகியிருக்க முடியாது. யாதவப்ரகாசரும் ஸ்ரீ பாஷ்யகாரர் திருவடிகளை ஆச்ரயித்திருக்க முடியாது. ஸ்ரீ வைஷ்ணவ சங்கியையே விருத்தியடைந்திருக்க முடியாது. ஸ்ரீ ராமானுஜ திவ்யாக்ஞையானது திகந்த வ்யாபினியாக எப்படியாக முடியும்.

ஸ்ரீமந் நம்மாண்டவன் திருவடிகளை ஆச்ரயித்தது பவ்யசீலமுள்ள ஸ்ரீநிவாஸ மகா தேசிகன் என்ற திருநாமம் பூண்ட ஸ்ரீ எங்களாண்டவன். ஸ்ரீ எங்களாண்டவன் திருநாட்டுக்கு எழுந்தருளின சமயத்தில் **अधिजिगमिषुराद्यं धाम दिव्यं त्रिधाम्नः** என்கிற கணக்கில் இப்பொழுது எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ தென்பிரையாண்டவனுக்கு ஸர்வ பூத ஸுஹ்ருத்தாயிருக்க வேண்டுமென்று நியமனம். ஸ்ரீ நம்மாண்டவனும் ஸ்ரீ எங்களாண்டவனுக்கு அருளிச் செய்தது “அப்பா, சரணாகதி பண்ணி வைப்பது என்றால் ஒரு ப்ரயோகத்தை நெட்டுருப் பண்ணிக்கொண்டு ஒப்பிப்பதல்ல. சிஷ்யனுடைய கஷ்டத்தை நினைத்து வருத்தப்பட்டு தெய்வத்தினிடம் போய் அழவேணும். அனுக்ரஹம் என்பது ஆசாரியனுடைய கவலைதான். ஆசாரியன் திருவுள்ளத்தில் இரக்கமடியாக தாயாரும் பெருமாளும் அருள் புரிகிறார்கள். இந்த மாதிரி இரங்கி தெய்வத்தினிடம் போய் அழவேணுமே, எல்லோரிடத்திலும் இப்படி இரக்கம் உண்டாகுமோ? உண்டாக வேணும். தெய்வந்தான் அந்த குணத்தையும் கொடுக்க வேணும்” என்று. இப்பொழுது எழுந்தருளியிருக்கும் ஆண்டவனுடைய லக்ஷ்யமும் இப்படியேதான்.

நம்மாண்டவனின் அவதாரம் பூரட்டாதியில், எங்களாண்டவனின் அவதாரம் உத்திரட்டாதியில், ஸ்ரீ தென்பிரை ஆண்டவனின்

அவதாரம் ரேவதியில். இப்படியிருந்தால் லக்ஷ்யத்தில் வேறுபாடு எப்படி இருக்க முடியும்?

ஸ்ரீபரவஸ்து ஸ்வாமியும், ஸ்ரீ வைஷ்ணவ உலகம் முழுமையும் ஒருவருக்கொருவர் இன்பமாகப் பழகி ஒருவருக்கொருவர் வழுவிலா வடிமை செய்ய வேண்டுமென்றும், ஆனால் சில சாஸ்திர மரியாதையை உத்தேசித்து சில வேற்றுமைகள் ஏற்படும் காலத்தில் அதையும் பொறுமையுடன் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்று சாதிக்கிறார். இது எவ்வளவு அழகான நோக்கம்.

ஸ்ரீ தேசிகன் ஆசாஸித்த மாதிரி நம் ஸித்தாந்தத்தை அசூயை விட்டு அகன்று நாம் பரஸ்பர ஹிதத்தை நாடியிருப்போமானல் நாம் அனபாயமான ஸம்ப்ரதாயத்தில் ஆசாஸிக்க ஏற்படும்.

மேலும், நம்மாண்டவனும் பின்வருமாறு ஸாதிக்கிற வழக்கம் "அப்பா! ஆண்டாள் உனக்கே நாம் ஆட்செய்வோம் என்று சொன்னளே தவிர, உனக்கு நாமே ஆட்செய்வோம்" என்று சொல்லவில்லையே! ஆகையினல் தென் ஆசாரிய ஸம்ப்ரதாயஸ்தர்தான் இந்த கைங்கர்யம் செய்பலாம் தேசிக ஸம்ப்ரதாயஸ்தர் செய்யக்கூடாது, அல்லது தேசிக ஸம்ப்ரதாயஸ்தர்தான் செய்யலாம்—தென் ஆசாரிய ஸம்ப்ரதாயஸ்தர் செய்யக்கூடாது என்று சொல்லவில்லையே. ஆகவே நாம் ஒருவருக்கொருவர் மிகவும் இன்பமாய் பழக வேண்டுமென்று உபதேசித்தாளே தவிர வேறில்லையே.

ஸ்ரீபெரும்பூதூரில் ஸ்ரீ பாஷ்யகாரர் அவதரித்த திருமாளிகை இருந்த இடத்தில் இப்பொழுது கட்டியிருக்கும் பெரிய மண்டபத்தில் 74 ஸிம்மாஸனதிபதிகளையும் சுவரிலேயே கல் மூர்த்திகளாக செதுக்கப் பட்டிருக்கிறது இதைப் பார்த்த ஸ்ரீ வைஷ்ணவர் ஒருவர் ஆசாரியார்கள் ஆழ்வாரைப் போல் அத்தைத் தின்று அங்கே கிடக்கும் ஸ்திதியில் தற்காலமிருப்பதற்கு இது ஒரு அறிகுறி போலும் என்று ஸாதித்தார். இதன் கருத்தை நீங்களே அறிந்துகொள்ளுங்கள்.

நிற்க முனித்ரய ஸித்தாந்தத்திற்கு இப்பரவஸ்து ஸ்வாமி இப் புஸ்தக ரூபமாக இயற்றியிருக்கும் கைங்கரியம் அவருடைய பரம பாக்யத்தினல் அவருக்கு லபித்தது. இதை 'அஹோ பாக்யம்' என்று கொண்டாடுவது நமது சிலாக்கியமான கடமையாகும்.

(Sd) **A. S. ஐயங்கார்,**

President, Sri Krishna Sabha, Bombay.,

President, All India Srivaishnva Sammelan, 42, Session, Patna, 1952 formerly Commissioner of Labour, Bombay.

25—7—52
நந்தன
திருவாடிப் பூரம்

# புகழுரை

ஸ்ரீ முனித்ரய ஸம்ப்ரதாயத்தை விளக்கும்படியான இந்த ஸ்ரீகோசத்தைப் பிரசுரித்துக் கொடுக்கும் ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமிக்கு நம்முடைய க்ருதஜ்ஞதையைக் காண்பிக்கவேண்டியது ரொம்ப அவசியம். ஸ்ரீ வைஷ்ணவர்களில் முனித்ரய ஸம்ப்ரதாயம் அனுஷ்டிக்கிறவர்களாக ஒரு பாகஸ்தர்கள் இருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட ஸம்ப்ரதாயம் வடகலையில் தான் உண்டு என்றும், அது ஸமீப காலத்தில் ஏற்பட்டதென்றும் ஒரு அபிப்ராயம் இருந்து வருகிறது. ஆனால் முனித்ரயம் யார் என்பதைப் பற்றி பல அபிப்பிராயங்களுடன் இருப்பது தவிர, நிஷ்கர்ஷையாக தெரியாமலே இருந்துவருகிறது.

ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத்ஆண்டவன் பரம்பரை முனித்ரய ஸம்ப்ரதாயத்தில் முக்யப் பிரதிநிதியாக அங்கீகரிக்கப்பட்டு வருகிறது. அவர்களுடைய தனியன் ஆசாரிய பரம்பரையை அனுஸந்தானம் செய்யும் தனியன்களிலிருந்து பரிசீலனை செய்தால் ஸ்ரீமந் நாதமுனிகள் வரை ஓரான் வழியாகப் போகிறதைப் பார்க்கலாம்.

தவிரவும், ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் பிரசித்தமான முனித்ரயம ஆசார்ய பரம்பரையில் இருக்கும்போது அவர்களை ஒதுக்கி பின்னொரு காலத்தில் வேறு யதிகளிடம் இருந்து ஸம்ப்ரதாயம் ஏற்பட்டதாகச் சொல்வது அஸங்கதமாகத் தோன்றுகிறது.

ஸ்ரீ திருக்குடந்தை தேசிகன் ஸ்வாமியிடம் மூன்று யதிகள் காலக்ஷேபம் செய்தார்களென்றும், அவர்களுடைய சிஷ்ய பரம்பரை முனித்ரயமென்றும் சொல்வது ஸரியல்ல. ஏனென்றால் பிரசித்தமான திருக்குடந்தை தேசிகன் பரம்பரை என்று சொல்லிக்கொள்வதைவிட அங்கே காலக்ஷேபம் செய்த மூன்று யதிகளை ஸம்பிரதாயத்திற்கு ஆதியாகக் கொண்டாடுவதில் என்ன தாத்பர்யம்?

தவிரவும் மூன்று யதிகளும் தனித்தனி வர்க்கங்களுக்கு கர்த்தாவாக ஏற்பட்ட பின், ஒவ்வொரு கிளைக்கும் மூன்று

யதிகளின் சம்பந்தம் எப்படிக் கிடைக்கும்? ஆகையால் ஒரே பரம்பரையில் வரிசைக் க்ரமமாக மூன்று பிரசித்தமான முனிகள் இருக்கக்கூடிய வரிசைதான் முனித்ரய வர்கம் என்று சொல்லத் தகுந்தது.

ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரமத்தில் ஸம்பாவனைக் கிரமங்களில் "ஸ்ரீமந் நாதமுனி, ஸ்ரீமத்யாமுன முனி, ஸ்ரீமத் ராமானுஜமுனி ரூப முனித்ரய ஸித்தாந்த ஸ்தாபகாசார்யாணும" என்று ஆசார்யானுடைய பிருதில் கூறுவது குறிப்பிடத்தக்கது. அப்படி லோகப் பிரஸித்தமான நாத முனிகள், யாமுன முனிகள், ராமானுஜ முனிகள் இவர்கள் மூவரும்தான் முனித்ரயம் என்பதற்கு ஸந்தேகமிருக்க நியாயமில்லை.

"நாதோபஜ்ஞம் ப்ரவ்ருத்தம்" என்று ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகரைக் குறிப்பிட்டு அதற்குப் பின் மற்ற இரண்டு யதிகளையும் ஸம்ப்ரதாயத்தை ஸ்தாபித்துக் கொடுத்தவர்களாக நாம் அடிக்கடி அனுஸந்தானம் பண்ணிவருவது இந்த மூன்று யதிகளுக்கும் நம்முடைய க்ருதஜ்ஞதையைத் தெரிவிப்பதுமல்லாமல் க்ரமமான ஸம்ப்ரதாயம் என்ன என்பதையும், நமக்கு ஞாபகப்படுத்த முனித்ரய ஸம்ப்ரதாயம் என்கிற பரிபாஷை ஏற்பட்டதாகத் தெரிகிறது. இப்படி வைத்துப் பார்ப்பதில் ஸ்ரீ வைஷ்ணவ ஸமூகம் முழுவதுமே முனித்ரய ஸம்ப்ரதாயம். நாம் எல்லோரும் ஒரே குடும்பம் என்பதைக் காட்டக்கூடிய இந்த ஸ்ரீகோசம் நமக்கு அஸாதாரணமான உபகாரத்தைச் செய்திருக்கிறது. தன்னையும், தன் குலத்தையும் மறந்துபோன ஒரு பிள்ளைக்கு, அவன் உயர்ந்தவொரு பிதாவின் பிள்ளையென்றும், சகலவிதமான ச்ரேயஸ்ஸுக்கும் இட்டுப் பிறந்தவன் என்றும் தெரிவிப்பவர்களிடத்தில் அவன் எவ்வளவு க்ருதஜ்ஞதை உள்ளவனாக இருப்பானோ அவ்வளவுக்குப் பாத்திரமாக ஸ்ரீ கோசத்தின் பிரசுரகர்த்தா ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமி ஆகியிருக்கிறார். எல்லோரும் ஸ்ரீ கோசத்தை நன்கு படித்துப் பயன்பெறுவார்களாக.

(ஒப்பம்) **ஆர். கோபாலஸ்வாமி அய்யங்கார்**

*Advocate*, T'Nagar.

# REVIEW

## Sri Munithraya Siddanta (in Tamil) by Sri Pravasthu Srinivasacharya Swami

*An extract of the Review published in "Sri Krishna"*

**P. P. 108 : Price Rs. 1-8-0**

Sri Ramanuja's philosophy is an elaboration of the philosophy of the Acharyas preceding him like Sri Nathamuni & Sri Yamunamuni. All three including Sri Ramanuja Muni form the trio Munithraya. Munithraya Siddhanta, therefore, means the same as the philosophy of Sri Ramanuja. It is called Munitraya merely because Sri Nigamanta Mahadesika, the lion of poets and legicians, has composed three verses in Tamil in praise of the three Munis namely Sri Natha Muni, Sri Yamuna Muni and Sri Ramanuja Muni. Some schools of thought following Sri Ramanuja's system have chosen to call themselves after the names of certain great Acharyas who adorned their guru parampara or line of Acharyas. Some others have contented themselves with the names of the three great original Acharyas only although they also have had several great Acharyas in their guru parampara. The first Acharya is Bhagwan Sriman Narayana Himself. After Him come Sri Lakshmi, Sri Vishvaksena and Sri Sathakopa. Next in succession in recent times comes Sri Natha Muni and after him come all the other Acharyas including Sri Nigamanta Mahadesika. In more recent times appeared Sri Tirukkudandai Desikan; and his disciple Sri Vedanta Ramanuja Mahadesika while resorting to him for the study of Vedanta, for the granting of final unction and the performance of atone-

ment, is said to have addressed him in the words of one of the hymns of Sri Sathakopa தீராவினைகள் தீர என்னை ஆண்டாய், திருக்குடந்தை ஊரா. Hence the appellation Sri Andavan Sampradaya to a part of Munithraya Siddhanta. Sri Tirukkudandai Desikan is also reported to have appeared in the 15th. generation of the family of Sri Vadihamsambuvaha the great Acharya and maternal uncle of Sri Nigamanta Mahadesika. Sri Tirukkudandai Desika was acclaimed as the only great Maha Bagavata fit to embrace the image of Sri Aparyaptamrita of Kumbhaghonam and thereby confe special efficacy and effulgence to the Murthi.

In the Andavan line of acharyas appeared Sri Andavan the great (Periya Andavan) who lived to a ripe old age, having lived as a sanyasi for no less than 56 years and having been hailed as Yati Sarvabhauma or the Emperior of ascetics renowned for his knowledge, wisdom, devotion, detachment and scrupulous adherence to the practice of precepts. In the same line in our own times appeared our Master or Sri Nam Andavan, whose greatness has been admitted by the pontiffs of even rival schools of philosophy.

Sri Pravastu Swami has laid us all under a deep debt of gratitude by bringing the life history of the Acharyas upto date. The book also contains 16 portraits of different great acharyas, which contribute considerably to the attractiveness of the sama A copy of the book should be in the hands of every Sri Vaishnava and those who want to keep in touch wfth the life of the Acharyas. We only wish that the life history of the some of the acharyas like Our Master were longer. We hope that this long felt want will be supplied by further publications in the near future.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | அசுத்தம். | சுத்தம். |
|---|---|---|---|
| 2 | 8 | யாமுளறுனி | யாமுனமுனி |
| 3 | 6 | சடமர்ஷண | ஷடமர்ஷண |
| 3 | 24 | ஸ்ரீ ஆளவந்தருக்கு | ஸ்ரீ ஆளவந்தாருக்கு |
| 4 | 4 | மஹாதேசிகனால் | மஹாதேசிகன் |
| 6 | 3 | கத்யத்நயம் | கத்யத்ரயம் |
| 8 | 8 | ஒன்றிவாவது | ஒன்றிலாவது |
| 9 | 3 | கல்பிக்க மல்லாக | கல்பிக்காமலும் லாகவமாக |
| 9 | 16 | ப்ரயோகத்தை | ப்ரயோகத்தையும் |
| 9 | 24 | மஹாதேசிகளிட | மஹாதேசிகனிடத்தில் |
| 9 | 25 | வைத்து தற்காலம் | வைத்துத்தற்காலந் தான் |
| 10 | 6 | தெறிகிறது | தெரிகிறது |
| 11 | 7 | ஸ்ரீமந் யாமுன | ஸ்ரீமத்யாமுன |
| 12 | 24 | முனிரப | முனிரூப |
| 12 | 30 | எவ்வாறு | (கிடையாது) |
| 14 | 10 | (A) | (1) |
| ,, | 12 | (B) | (2) |
| ,, | (14) | (C) | (3) |
| ,, | 19 | N. B. | குறிப்பு |
| ,, | 20 | A, B, C, | 1, 2, 3 |
| 15 | 5 | ரஹஸ்யார்த்தங்களை | ரஹஸ்யார்த்தங்கள் |
| 16 | 16 | உபாவித்தளவில் | உபாவித்தவளவில் |
| 16 | 30 | N, B. | குறிப்பு |
| 17 | 15 | கண்ணிறுன் | கண்ணினான் |
| 17 | 26 | தர்ண | கர்ண |
| 17 | 28 | இய்வாறு | இவ்வாறு |

| | | | |
|---|---|---|---|
| 18 | 1 | பலருக | பலனுக |
| 18 | 7 | செவ்வம்மல்கு | செலவம்மல்கு |
| 18 | 24 | இன்றும் | இன்னும் |
| 18 | 28 | அனுஸந்திக் கிறேனே | அனுஸந்திக்கிறேன் |
| 19 | 9 | கண்ணிநுன | கண்ணிநுண் |
| 20 | 12 | யாச்கார் | யாச்சான் |
| 21 | 29 | தாப்பிலில் | தாப்புலில் |
| 23 | 9 | கடிகாசால கம்மாளுடைய | கடிகாசதகம்மாளுடைய |
| 24 | 2 | வேதாங்வ | வேதாந்த |
| 24 | 5 | கோபாலார்வ | கோபாலார்ய |
| 25 | 15 | ஷஷ்டபராஸ்குச ஸ்வாமி | ஷஷ்டபராங்குச ஸ்வாமி |
| 26 | 13 | ஸ்ரீமந்நிகமரந்த | ஸ்ரீமந்நிகமாந்த |
| 26 | 17 | தேசிகளுக்கு | தேசிகனுக்கு |
| 27 | 13 | நஷத்தில் | நக்ஷத்திரத்தில் |
| 29 | 17 | ஸதல | ஸகல |
| 30 | 5 | ஸ்ரீரங்கனுத மஹாதேசிகர் | ஸ்ரீநிவாஸராகவாச்சார் ஸ்வாமிக்கு |
| 30 | 25 | அதிகரித்லுத் தெறிந்து | அதிகரித்து தெரிந்து |
| 30 | 26 | ஞானவிவராக் யாநுஷ்டான | ஞானவைராக் யாநுஷ்டான |
| 30 | 27 | ஸாஷாத்ஸ்வாமி | ஸாக்ஷாத்ஸ்வாமி |
| 30 | 29 | பெருமைவாநந்த | பெருமைவாய்ந்த |
| 31 | 3 | வியாக்யானமாம | வியாக்யானமான |
| 31 | 9 | பிதாவினுலேயே | சிசுஜனித்ததால் பெரியோர்களால் |

| | | | |
|---|---|---|---|
| 31 | 11 | மஹாதேசிஞுலும | மஹாதேசிகனுலும் |
| 32 | 5 | தேசிகள் | தேசிகன் |
| 32 | 9 | தேசிகளும் | தேசிகனும் |
| 32 | 10 | ாழுந்தருளியிருந்து | எழுந்தருளியிருந்தார் |
| 32 | 11 | வத்திருயிருப்பு | வத்திராயிருப்பு |
| 32 | 15 | தேசிகள் | தேசிகன் |
| 32 | 30 | எழுந்தரு | எழுந்தருளியிருந்த |
| 32 | 31 | தேசிகளை | தேசிகனை |
| 33 | 1 | ஸ்ரீநிவாஸமஹா தேசிகன் | ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹா தேசிகன் |
| 34 | 23 | ஸாமஸாகை | ஸாமசாகை |
| 36 | 5 | அதிசியத்தைச் கண்டு | அதிசயத்தைக் கண்டு |
| 38 | 7 | இவ்னாறு | இவ்வாறு |
| 39 | 3 | மஹாஞும் | மஹானும் |
| ,, | 28 | ஸ்ரீநிஸாஸ | ஸ்ரீநிவாஸ |
| 41 | 10 | மேளப்பாளையம் | மேலப்பாளையம் |
| 41 | 22 | மங்கனாசாஸநம் | மங்களாசாஸநம் |
| 42 | 9 | எள்ளலாம் | எழுந்தருளலாம் |
| 42 | 14 | ஆசிமத்தை | ஆசிரமத்தை |
| 43 | 16 | ஸ்யவஹரிததி | வ்யவஹரித்து |
| 43 | 21 | ஸ்ரீகோஸத்தில் | ஸ்ரீகோசத்தில் |
| 44 | 15 | ஸ்ரீரங்சுத்தில் | ஸ்ரீரங்கத்தில் |
| 44 | 27 | ஸந்யாசிரமத்தை | ஸந்யாஸாசிரமத்தை |
| 47 | 5 | ஸுகர்சவ | ஸுதர்சன |
| 48 | 14 | ஸம்பிந்தாய | ஸம்பிரதாய |
| 49 | 17 | இவ்வாறு சிலகாலம் | இவ்வாறு இம்மஹான் சிலகாலம் |
| 49 | 31 | நிதிகளை | நிதிகள் |
| 50 | 8 | மொஷாசிரம | மோக்ஷாகிரம |

| | | | |
|---|---|---|---|
| 51 | 25 | தாராஸயுக்த : | தஸாஸம்யுக்த் |
| 55 | 2 | வேலும் | மேலும் |
| 55 | 6 | அதுவும் | அதையும் இவர் |
| 55 | 12 | தேசிகளுடைய | தேசிகனுடைய |
| 56 | 1 | திருநாருடலங் கரித்தல் | திருநாடலங் கரித்தல் |
| 56 | 22 | ஸ்ரீரங்காச்சாயுயார் | ஸ்ரீரங்காச்சார் |
| 56 | 23 | நேவரீர் | தேவரீர் |
| 73 | 30 | உத்தமோத்மரான | உத்தமோத்தமரான |
| 79 | 5 | காலக்ஷேபங்களும் | காலக்ஷேபங்களையும் |
| 79 | 12 | அறுகுணமான | அணுகுணமான |
| 79 | 14 | புபக்தியுள்ள | பக்தியுள்ள |
| 80 | 14 | பாதுகாஸ்மரணம் | பாதுகாப்யாம நம : |
| 80 | 20 | ராயப்பேட்டை | ராயம்பேட்டை |

| பக்கம் | வரி | கீழ்க்கண்டவைகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டியது. |
|---|---|---|
| 4 | 24 | என்பது |
| 45 | 20 | முதலியோர் |

| பக்கம் | வரி | கீழ்க்கண்டவைகளை எடுத்துவிட வேண்டியது |
|---|---|---|
| 7 | 9 | ஆளவந் |
| 15 | 8 | ஆழ்வார திரு நகரியில் |
| 38 | 30 | தேசிகனை விதிப்படி பிரணமம் செய்து |
| 38 | 31 | பூராவரியையும் எடுத்து விடவும் |
| 48 | 28 | இதற்கடி என்னவென்னில் ஸ்ரீமதாண் |
| | 29, 30, 31 | பூராவரியையும் எடுத்து விடவும். |

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 111728